# நறுந்தமிழ்

பன்னாட்டு ஆய்விதழ்

# International Journal of Narunthamizh

தொகுதி 1 / பகுதி 2 ஏப்ரல் 2026

Volume 1/ Issue 2 April 2026

All's square Publication,
Madha Koil Street, periyapattu, Silambimangalam (po),
Bhuvanagiri Tk, Cuddalore Dt, Tamil Nadu 608801.

# International Journal Of Narunthamizh Editorial office

## Office of the Editor – in – Chief

## No. 379 Madha Kovil Street periyappattu, Silambimangalam (po) buvanagiri Tk Cuddalore, Tamil Nadu, India.

## Tel: 09786864409

## Email: narunthamizh.com/webmail

Website: www.narunthamizh.com/current-issues/

## Publisher

**Narunthamizh Ilakkiyapozhi,**

**Mahalashmi Nagar,Church cross street,**

**Selaiyur,Chennai-600073**

**Tamil Nadu, India.**

ISSN :
DOI :

# Editorial Board 2026 -2029

**Editor in Chife**

## Dr. A. Irudhayaraj

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

irudhayaraj.sl@vistas.ac.in 9786864409.

https://erp.vistas.ac.in/evarsitypack/resources/template/frmPageController.jsp

Chife Executive Editor

## Dr.P.Gubendiran

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai - 600117

Tamil Nadu, India.

gubendiran.sl@vistas.ac.in 9962633122.

Associate Editing& Ideating

## Dr. M. ELANGOVAN

M.A.,M.Phil.,Ph.D.,DIL, M.Sc. Psyc.,

Associate Professor, Department of Tamil

R.K.M.Vivekanantha College, Mylapore.Chennai 04.

Mail ID ; elangovan@narunthamizh.com

Mobile No: 9444025197.

Journal Web Design and Technical Support

Mr.S.M. Inbaarusu

Department of Animation

VISTAS, Chennai - 600117

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# Editorial Board Members

**Dr. David Stanley**

Assistant Professor& Head

Department of Tamil

Loyola College, Chennai, Tamil Nadu, India.

Mail ID ; davidstanley@loyolacollege.edu

Mobile No: 9840553558

https://vidwan.inflibnet.ac.in/profile/487052

**Dr.S.Priya**

(Research Supervisor & Convener)

Assistant Professor, Department of Tamil, VISTAS, Chennai – 600117

Mail ID ; priyas.sl@vistas.ac.in

Mobile No: 9962633122.

https://vistas.ac.in/faculty-in-school-of-languages/

**Dr.P. Geetha**

Assistant professor

Department of Tamil,

Nehru Arts and science college (Autonomous),

Thirumalayampalayam, coimbatore -641105. India.

Mail ID ; nascdrpgeetha@nehrucolleges.com

Mobile No: 9788244940.

https://vidwan.inflibnet.ac.in/profile/612159

**Dr.Santhana Karthikeyan**

Associate Professor & head

Department of Psychology PresidencyCollege Chennai-05.

Email ID: santhanakarthikeyanv.psy@presidencycollegechennai.ac.in

Mobile No: 8825937211.

https://pcc.ac.in/Academia/TeachingStaff?departmentCode=Psychology

ISSN :
DOI :

**Mr. S.Kalaiselvan** M.A., M.Phil.,Ph.D.,

Associate Professor, & head

Department of MFA, VISTAS, Chennai - 600117.

Tamil Nadu State. India.

Email ID: hodanimation@velsuniv.ac.in

Mobile No: 9941168254

https://vistas.ac.in/faculty-in-school-of-mass-communication/

**Prof. K.M. Rohitha Dasanayaka**
Head of the Department,
Acting Dean - Faculty of Arts - University of Peradeniya
Sri Lanka.

Email ID: rohithad@arts.pdn.ac.lk , rohithadasanayaka@narunthamizh.com

Mobile No: **+94713212616**

https://arts.pdn.ac.lk/history/rohitha.html

Dr.P.Nallamuthu
**Assistant Professor**
**Department of Zoology**
**Loyola College, Chennai, Tamil Nadu, India.**
Email ID: nallamuthu@loyolacollege.edu

Mobile No: 9962720255

https://vidwan.inflibnet.ac.in/profile/249545

**K. Mohamed Hidayathullah,**

Dubai.-UAE

Email ID: mohamedhidayathullah@narunthamizh.com

Mobile No: +971-50-5196433.

ISSN :
DOI :

எங்களை பற்றி

அன்புள்ளங்களுக்கு வணக்கம்.

பழமைவாய்ந்த தமிழ் மக்கள் வாழும் தமிழக மண்ணிலிருந்து வெளிவரும் நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் உலக மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது. நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் சனவரி 2026ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இவ்விதழ் ஆண்டுக்கு நான்கு முறை சனவரி, ஏப்ரல், ஜீலை, அக்டோபர் ஆகிய திங்களில் வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் இனம் உலகில் தொன்மை வரலாறு பெற்ற இனங்களுள் ஒன்று. இதற்குத் தெளிவான சான்றுகள் பல உண்டு. தமிழக வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு என இன்று வரை பல அறிஞர் பெருமக்களால் பலவாறு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்த ஆய்வுகளுக்குத் தமிழக வரலாற்று மூலங்களான இலக்கியங்கள், இலக்கணங்கள், உரைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், அகழ்வாராய்ச்சிப் பொருட்கள், நாணயங்கள், கலைகள், வெளி நாட்டார்க் குறிப்புகள், ஆவணக்குறிப்புகள், மொழி ஆகியன சான்றாக அமைகின்றன. இவற்றுள் பல மூலங்கள் இன்னும் முழுமையாக ஆராயப்படாத நிலையிலும் உள்ளன. கிடைத்த மூலங்கள் இன்னும் பலக் கோணப்பார்வையில் ஆராயப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும்.

தற்போது உலக அளவில் நமது மொழியினை கொண்டு செல்ல தமிழ் மொழியைப் பற்றியும் தமிழர்களைப் பற்றியும் பல ஆய்வுகள் வெவ்வேறு ஆய்வுக் கோணங்களில் முறையான, நடுநிலையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இன்று தோன்றியுள்ள பலவகையானத் துறைகளோடு இணைந்து ஆராயப்பட வேண்டியதும் கட்டாயமாகிறது. அதற்கான சிறு முயற்சியில் உங்களையும் பங்கெடுத்துக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் தமிழ் ஆய்வோடு பிற துறைகளையும் ஒப்பீட்டு பார்த்து தொடர்புபடுத்தி எழுதும் அனைத்து ஆய்வுகளையும் நறுந்தமிழ் பாதுகாப்பு களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படும். உங்களது ஆய்வுக்கட்டுரைகளால் தமிழின் உண்மை நிலையினைத் தக்க சான்றுகளோடு உலகறிய முன்னெடுப்போம். நமது தமிழ் மொழியின் உயர்வை உலகிற்கு உரக்கச் சொல்ல நமக்கான களம் இது. அன்புடன் இணையுங்கள்.

| | |
|---|---|
| **Title** | : International Journal Of Narunthamizh |
| **Variant Title** | : நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ் |
| **starting year** | : 2016 |
| **Frequency** | : Quarterly (January, April, July, October) |
| **DOI Prefix** | : |
| **ISSN** | : |
| **Format Of Publication** | : online |
| **Subject,** | Multidisciplinary Subjects |
| **Language** | Multiple Language (Tamil, English) |
| **Editor in Chief** | : Dr. A.Irudhayaraj |
| **Publisher** | : Narunthamizh Ilakkiyapozhil (All's squire Publication) |

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**நோக்கமும் வரையவரையும்**

- நறுந்தமிழ் பன்னாட்டு ஆய்விதழ்; மொழி, இனம், பண்பாட்டுக் கலாச்சாரம், சமயம், பொருளாதாரம், அரசியல், வணிகம், கல்வி தத்துவம், மருத்துவம், உளவியல் போன்றவைகளின் தொடர்புடைய சிக்கல்களுக்கான ஆய்வுத் தரத்தை மேம்படுத்தும் நடைமுறை அணுகுமுறைத் தளத்திற்கான ஒரு முன்னோடி ஆய்விதழாக உருவாவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உயர்தரம் மிக்க ஆய்வுகளைப் பதிப்பித்து அதனைப் பரந்த அளவிலான வாசகர்களுக்குக் கொண்டு சேர்ப்பதே இவ்வாய்விதழின் முதன்மை நோக்கமாகும். ஆய்விதழ் பதிப்புத் துறையில் உயர் அடைவை முன்னிருத்திப் பொறுப்புடனும் தொழில்முறை அணுகுமுறையுடனும் அதனை நிலைநிறுத்துதல்

ISSN :
DOI :


| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | **சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகள்**<br>(இ.எழிலரசி, முனைவர்நா. தீபாராணி) | 8 |
| 2. | **மாணிக்கம் நாவல் காட்டும் பெண்ணியம்**<br>(ரா.ஸ்டெல்லா தீபா, முனைவர் நா. தீபாராணி) | 12 |
| 3. | **ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள்**<br>முனைவர் யு.துர்காதேவி | 18 |
| 4. | **திரையிசைப் பாடல்களில் நிலையாமை**<br>(பா கௌசல்யா தேவி, யு.துர்கா தேவி,) | 22 |
| 5. | **திணைக்கோட்பாட்டில் உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்**<br>து.தீபா, முனைவர் அ.இருதயராஜ் | 27 |
| 6. | **சங்க இலக்கியத்தில் ஓரையாடுதல் (விளையாட்டு)**<br>(முனைவர் பொ.குபேந்திரேன்) | 33 |
| 7. | **கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணம்**<br>(பா.சங்கீதா, முனைவர் யு.துர்காதேவி) | 37 |
| 8. | **வள்ளலார் காட்டும் அரசியல் அறங்கள்**<br>(திருமதி. S. அனுராதா, முனைவர் பொ. குபேந்திரன்) | 43 |
| 9. | **பாத அழுத்த சிகிச்சையின் வழியில் சிறுநீரகக் கற்களை அகற்றுதல்**<br>(முனைவர் அ.இருதயராஜ்) | 47 |
| 10. | **பாரதிதாசனும் திராவிட இயக்கக் கொள்கைகளும்**<br>(முனைவர் ச.பிரியா) | 51 |
| 11. | **சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பில் பெண் ஆளுமைகள்**<br>(கோ. பூர்ணிமா, முனைவர் சு. சாந்தி) | 56 |
| 12. | **சிவவாக்கியர், வள்ளலார் சமயச் சிந்தனைகள் ஒப்பீட்டுப் பார்வை**<br>(முனைவர் சு. சாந்தி) | 61 |

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகள்

**(இ.எழிலரசி, முனைவர்நா. தீபாராணி)**

**Date of submission : 02-03-2026 Date of acceptance : 03-03-2026**
**Date of Publication: 30-04-2026**
**Corresponding auther's Name : Dr. N.Deeparani**
**Email : Deeparani.sl@vistas.ac.in**
**Pages : 8 - 11**

**ஆய்வு சுருக்கம்**

சங்க காலத் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் தலைமை ஆதாரமாக அமைகின்றது. குடும்ப சமூக உறவினர்களின் அமைப்புகள் சங்க இலக்கியங்களில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. வீரயுகம் ஆகிய சங்க காலத்தின் இவ்வுறவு நிலைகளைத் தெளிவாக புரிந்து கொள்ள வேறு காலகட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களை நாம் காண வேண்டியது மிக முக்கியமாக அமைகின்றது.

**கருவிசொற்கள்:**குடும்ப உறவுகள்,சிவகன்,சமுகம்,சிவகசிந்தாமணி, ஒழுக்கம்

**முன்னுரை**

குடும்பம் தன்தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், மூத்தோரிடம் ஒழுகும் முறையினைப் போதிக்கிறது. அத்துடன் பிறரிடத்தில் அன்பை வெளிப்படுத்தவும் விட்டுக்கொடுத்து வாழவும் கற்றுக்கொடுக்கிறது. இன்ப துன்பங்களைப் பகிரவும் வலியுறுத்துகின்றது. அவரவர் பணிகளைச் சிறப்பாக செய்ய உதவுகிறது. இதனால் சமூகத்தின் அடிப்படை அங்கமாகவும், முதன்மை அங்கமாகவும் கருதப்படுவது குடும்பமாகும். சமூகம் சிறப்படைய வேண்டுமெனில் குடும்ப இயக்கம் நன்முறையில் இயங்க வேண்டும். பெற்றோர், குழந்தைகள், கணவன், மனைவி, சகோதரன், சகோதரி, மைத்துனன், மைந்தன், மகள் போன்ற உறுப்பினர்களில் முழுவதுமாகவோ சிலரோ ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்படுவர். இத்தகைய உறவுகளால் தான் பின்னப்பட்டுள்ளது குடும்பம். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குடும்பம் சிறியதாகவோ பெரியதாகவோ அமையலாம். இத்தகைய குடும்பத்துக்குள் பெற்றோர், பிள்ளைகள், உடன்பிறந்தோர், கடைபிடிக்கும் ஒழுக்கத்தையும் குடும்பம் போதிக்கிறது. இத்தகைய குடும்ப உறவுகளைப் பற்றியும் உறுப்பினர்களிடத்து ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

**குடும்ப உருவாக்கம்**

ஒரு செயல் முழுமையடைய பல்வேறு படிநிலைகளைக் கடந்துதான் செல்ல வேண்டும். இதுவே இயற்கையின் நீதி. அதைப்போல்தான் குடும்ப அமைப்பும் என்பதை,

**"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்" (தொல். பொரு. 143)**

என்னும் அடியில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்றைய குடும்ப அமைப்பு நிலை பெறுவதற்கு முன்னர், "வரன்முறையற்ற வாழ்க்கை இருந்தது என்று முதலில் விளக்கியவர் பா.கோ.பென். அவரைத் தொடர்ந்து மார்கன், அவரைத் தொடர்ந்து எங்கல்சு ஆகியோர் விளக்கினர்." இத்தகைய நிலைகளைக் கடந்தே இன்றைய குடும்பம் வளர்ச்சி நிலையை அடைந்தது உள்ளது.

**குடும்பத்தின் இன்றியமையாமை**

குடும்பம் என்பது புணர்ச்சியும், குழந்தைப்பேறும் மட்டுமன்று. "மனித சமூகத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பம் சங்கப்பாடல்களில் இது 'கடும்பு' எனப்படுகிறத.இது மானிட வாழ்வின் தொடக்கத்திலிருந்தே காணப்படுகிறது. இது எல்லாச்

**இ.எழிலரசி (பகுதி நேர)** முனைவர் பட்ட ஆய்வாளர்,
**முனைவர்நா. தீபாராணி** உதவிப் பேராசிரியர் **நெறியாளர்**
தமிழ்த்துறை வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

இது, “இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. இது ஒரு போதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறுகின்றபொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்துக்கு முன்னேறுகிறது. குடும்பம் “திருமணம், பாலுறவு, சந்ததியினரை உருவாக்குதல் போன்ற முக்கிய செயல்களைச் செய்வதால் குடும்பம் நிறுவனம் எனப்படுகிறது. பிற சமூக நிறுவனங்களான கல்வி, அரசு, சமயம் போன்றவை முதலில் குடும்ப அமைப்பு முறைக்குள்ளேயே தோன்றின! அதோடுமட்டுமல்லாமல், "குலம், கூட்டம்,பெருங்குழு, கிளைச்சாதி, சாதி, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது.

ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. அதுவே மனிதனைச் சமூகவயப்படுத்துவதில் முதன்மையான பங்காற்றுகிறது. இப்பணியை அது பிறப்பு முதல் இறப்பு வரை செய்கிறது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்குச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்வதில்லை இத்தகைய பல்வேறு சிறப்புகளுக்குரியது குடும்பம். இது தான் சார்ந்த பணிகளையும் பிற பணிகளையும் நிறைவுசெய்து உலகை மேம்படச்செய்கிறது.திருமண முறையில் இருந்து குடும்பம் தொடங்குகிறது.

**தொல்காப்பியத்தில் மணமுறைகள்**

சமூகம் ஏற்றுக்கொண்ட இணைவிழைச்சு, இனப்பெருக்கம், பொருளாதாரத்தேடல், உயர்நிலை நோக்கம், நல்லுணர்வு, கல்விப்பெருக்கங்கள் ஆகியன குடும்பத்தின் குறிக்கோள்கள் என்பர்.இதனை நிறைவு செய்ய அடிப்படையாக அமைவது திருமண உறவாகும்.

**"வெளிப்பட வரைதல் படாமை வரைதல்" (தொல். பொரு. 138)**

என்று தொல்காப்பியர் கூறும் இருநிலைகளே அக்காலம் முதல் இக்காலம் வரை திருமணமுறைகள் காணப்படுகின்றன.மேலும் தொல்காப்பியர்,

**"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டங் காணுங்காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"**
**(தொல். பொரு. 89)**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிநடுவணைந்திணைக்குரிய மக்களின் திருமணமுறைகளாக எட்டினைச் சுட்டுகிறார். இந்த எட்டின் வகைகளாக பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என உரையாசிரியர்களாளே விளக்கம் தருகின்றனர். ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் மணமுறைகள் எட்டு என்பது அறியப்படுகிறது.

இதுபோன்று சங்க இலக்கியம் மற்றும் காப்பியங்களிலும் அதற்குப் பின் வந்த இலக்கியங்களிலும் திருமண வழி குடும்ப அமைப்பை எடுத்துரைக்கின்றது. குறிப்பாக சீவக சிந்தாமணியில் சீவகனின் குடும்ப உறவுகளைப் பற்றியும் அதில் சகோதரத்துவத்தை பற்றியும் பின்வருமாறு நாம் காணலாம்

***சீவகனின் குடும்பம்***

சீவகனின் தந்தை கந்துக்கடன். தாய் சுநந்தை. உடன்பிறந்தோர் நந்தட்டன், நபுலன், விபுலன் போன்றோராவர். இவர்கள் கூட்டுக்குடும்ப வாழ்வில் வாழ்ந்துள்ளனர்.மனைவியரைக் கணவன் பிரிந்த நிலையில் பெற்றோர் ஆறுதல் வழங்குவது குறிப்பிடத்தக்கது. ஒருவர் துயரில் பிறர் ஆறுதல் வழங்க உறவுகள் அமைந்துள்ளனர்.

**குடும்பத் தலைமை**

ஒரு செயலைக் குழுவாக மேற்கொள்ளும்போது பலரது பங்கு காணப்படுகிறது. இறுப்பினும் இறுதிமுடிவை ஒருவர் மட்டுமே மேற்கொள்வர். அதைப்போலவே ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது விருப்பினைக் கூறும் உரிமையுள்ளது. இதில்இறுதிமுடிவைக் கூறுபவரே குடும்பத்தலைவராவார். அவர் தலைமையின்கீழ்

ISSN :
DOI :

குடும்பம் கட்டுகோப்பாகச் செயல்படும் என்பதை இக் காப்பியதில் காணமுடிகிறது.

**சகோதர உறவுகள்**

வேண்டிய செல்வத்தைத் தேடிப் பெற இயலும். பகைவரையும் வெல்லமுடியும். நட்பையும் மனைவியையும் பிள்ளைகளையும் மற்ற அனைத்துப் பொருட்களையும் பெற இயலும். பெற இயலாத செல்வம் உடன்பிறப்பாகும் (சீவ. 1760) என்ற பாடலின் வழி உடன்பிறப்பின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

நந்தட்டன் சீவகனுக்குத் துயர் ஏற்படும்போது மகளிரைப் போல் உதவமுடியாமைக்கு வருந்தினான் என்பதை (சீவ. 1728) இப்பாடலின் வழியும்,இதனால் உடன்பிறந்தோர்க்குத் துன்பம் நேரும்போது பெண்கள் உதவமுடியாத சூழலும் ஆண்கள் துயரிலுள்ள சகோதரனுக்கு உதவுபவர்களாகவும் இருந்துள்ளமை அறிய முடிகின்றது.

**சகோதரனுக்காகத் துறவு செல்லல்**

சீவகன் துறவினை மேற்கொள்ளும்போது அவனது சகோதரன் நந்தட்டனும் துறவு மேற்கொள்கின்றான் (சீவ. 3132) என்பதை இப்பாடலின் வழி உணரமுடிகிறது.இதைப்போன்று

சிலப்பதிகாரத்திலும் வஞ்சிமாநகரில் சேரலாதனுடன் இளங்கோவடிகள் வீற்றிருந்தார். அவரைக் கண்ட நிமித்திகன் இந்நாட்டையாளும் திருமுகம் உனக்கு உண்டு என்றான். இதனைச் செவிமடுத்த இளங்கோ தன் சகோதரன் நாடாள வேண்டும் எனத் துறவு மேற்கொண்டார் (சிலப். 30: 175-181).

தன் சகோதரன் மீதுள்ள அன்பினால் துறவை மேற்கொள்கின்றனர்.இருகாப்பியங்களும் சகோதர அன்பைக் கூறுகின்றன.

**உடன்பிறப்பிற்காக இறத்தல்**

கச்சய நாட்டையாண்ட துச்சயன் என்னும் வேந்தன் வீரையும் தாரையும் மணம்புரிந்தன். மதுமயக்கத்தில் தன்நிலை அறியாத வீரை புதியதாகப் பிடித்துவரப்பட்ட யானைமுன் சென்று இறந்தாள். அவள் இறந்த துயரில் தாரை ஒருநிலா முற்றத்திலிருந்து வீழ்ந்து இறந்தாள் (மணி. 12: 46-48). என்று மணிமேகலையில் கூறியதுப் போன்று

சீவகனைக் கட்டியங்காரனின் ஆட்கள் சிறைபிடித்தனர். இதனை அறிந்த நந்தட்டன் இப்பகல் பொழுதில் காண்பது அல்லது இறத்தல் என்ற முடிவில் ஒன்றை மேற்கொள்ள உறுதிகொண்டான். (சீவ. 1745)

உடன்பிறப்புகள் இறந்தால் அவர்களுக்காக இறப்பவர்களாகவும் உள்ளோர் பெரும்பான்மை. ஆகையால், துரோகம் செய்யாத உயர்ந்த அன்பினை மட்டுமே கொண்டுள்ள உடன்பிறப்புகளைக் காப்பியத்தில் காணமுடிகிறது.

**மைத்துனன் உறவு**

மைத்துனன் என்ற சொல் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனுடன் பிறந்த ஆணைக் குறிக்கிறது. "மைத்துனன்" (சீவக. 1730: 2) ஒரு ஆணிற்குத் தன் மனைவியுடன் பிறந்த ஆணை குறிக்கிறது. "மைத்துனன்" (மணி.9:15). சீவகசிந்தாமணியிலும் மணிமேகலையிலும் இச்சொல் இடம்பெற்றுள்ளது.

சீவகன் கனகமாலையிடம் நந்தட்டன் உன் மைத்துனன் என அறிமுகம் செய்கிறான். அவள் இவ்விளஞ்சுற்றம் எழுபிறவியிலும் கிடைக்க வேண்டும் என்றாள் என்பதை இப்பாடலின் வழி அறியப்படுகிறது.(சீவ. 1730 : 2-3)

சீவகனைக் கட்டியங்காரனின் காவலர்கள் சிறைப்பிடித்தனர். சீவகன் நிலை அறியாது நந்தட்டன் குணமாலையின் இல்லம் சேர்ந்தான். அவனைக் கண்ட அளவிலேயே உணவு சமைக்கப் பணிப்பெண்களிடம் கூறினாள் குணமாலை.

உணவு பரிமாறும்போது நீர்வடியும் கண்களுடன் சீவகனைப் பிரிந்து தனித்து உணவுகொள்ளத் துணிந்த கொடியவரே என்றாள் குணமாலை (சீவ.1744). அவள் கூறியதற்காகச் சிறிதும் வருந்தாது அவளின் துன்பம் கண்டு வருந்தினான் நந்தட்டன். மேலும் குணமாலை கொண்ட அன்பைச் சீவகனிடத்து வெளிப்படுத்துகிறான் நந்தட்டன்.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

நந்தட்டன் காந்தருவதத்தையின் இல்லம் சென்றான். அவள் கணவனையிழந்த பெண்கள் அடையும் மாற்றமின்றி இயல்பாகக் காணப்பட்டாள். அதைக்கண்டு இழிசொல்லைக் கூறினான். நந்தட்டனின் மனநிலையை அறிந்த காந்தருவத்தை சீவகனைக் காணும்படிச் செய்தாள் (சீவ. 1747).

மைத்துனர் உறவுகள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் உறவுமுறையாகவும், துன்பத்திற்காக வருந்தும் உறவாகவும் ஒரு பெண்ணிற்கு அமைந்துள்ளமை சான்றுகளாகின்றன. மேலும் உரிமையினையும், மதிப்பும், மரியாதையுடனும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் தன்மையினை அறியலாம். ஆண்கள் தன் மைத்துனரிடத்து இருக்கும் இயல்புக் குடும்ப உறவுகளில் பெரிதும் இடம்பெறவில்லை.

**முடிவுரை**

குடும்பம் என்பது ஒரு நாட்டின் மிக முக்கியமான சொத்துவாகும் அந்த குடும்பத்தைப் பற்றி நாம் இலக்கியங்கள் மிக அழகாக வெளிப்படுத்தி உள்ளனர் அது மட்டும் அல்லாமல் குடும்ப உறுப்பினர்களை பற்றியும் குடும்ப உறவுகளைப் பற்றியும் எடுத்து இயங்கியதை நாம் கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

-----------------------------------------------------

**துணைநூற்பட்டியல் :**

1.தொல்காப்பியம் முழுவதும் இளம்புரனார் உரை, சைவ சித்தாந்த பதிப்பகம் , திருநெல்வேலி

2. சீவக சிந்தாமணி, பாரி நிலையம் சென்னை

3. சங்க இலக்கியம் உணர்த்தும் மனித உறவுகள் அ.தட்சிணாமூர்த்தி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# மாணிக்கம் நாவல் காட்டும் பெண்ணியம்

(ரா.ஸ்டெல்லா தீபா, முனைவர் நா. தீபாராணி)

Date of submission : 03-03-2026 Date of acceptance : 23-03-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.N.Deeparani
Email : deeparani.sl@vistas.ac.in
Pages : 12 - 17

**ஆய்வு சுருக்கம்**

இலக்கியங்கள் அன்று முதல் இன்று வரை கதைகளிலும் பாடல்களிலும் கதாபாத்திரங்களிலும் மிக முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. கதாபாத்திரங்களின் வழி தான் புலவர்களும் எழுத்தாளர்களும் மக்களிடம் பேசுகின்றனர் .அதனால் மிகவும் முக்கியமான ஒரு கதாபாத்திரத்தின் வழி தான் இந்த சமூக சித்திரங்கள் கூறப்படுகின்றன. கதாப்பாத்திரம் என்பது வெறும் கவிஞனின் கற்பனை திறன் மற்றும் கிடையாது அதன் வழி அவன் மக்களிடமும் சமுதாயத்திடமும் பேசிக்கொண்டு இருக்கின்றான் தான் நினைக்கும் கருத்தினை பாத்திரத்தின் மீது ஏற்றி அவன் மிக அழகாக வெளிப்படுத்துகின்றான்.அந்த வகையில் சு. தமிழ்செல்வி தனது நாவல்களில் கதாபாத்திரங்களின் வழி கிராமத்து சிக்கல்களை எடுத்துக் கூறுகின்றனர். இதை இக் கட்டுரை ஆராய்ந்து கூறுகின்றது.

**கருவிசொற்கள்:** நாவல்,காதாபாத்திரம்,மாணிக்கம்,பெண்கள்.

**முன்னுரை:**

இனக்குழு சமூகத்தில் பெண் முதன்மையானவளாக தலைமைப் பண்போடு இனத்தை வழிநடத்தினாள். அவளுக்குள் வரையறைகள் ஏதும் திணிக்கப்படாத காலம். பெண்ணின் தாய்மைக்குக் காரணமானவர்கள் யாரென அறிந்து கொள்ள ஆரம்பித்த நிலவுடைமை சமூகத்தில் பெண்ணின் வாழ்க்கை கட்டுப்படுத்தப்பட்டு இன்றளவும் அந்தக் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன. குடும்பம் சமூகம் தொடங்கி எல்லா நிலைகளிலும் பெண் இரண்டாம் தரமாகப் பார்க்கப்படுகிறாள். பெண்ணைப் போகப் பொருளாகக் கருதி அவளது அடிப்படை சுதந்திரம் ஒட்டுமொத்தமாக மறுக்கப்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் அடிமை நிலையில் விழத்தப்பட்டனர். இதனால் பெண்வீட்டிற்குள்ளேயே அடைந்துகிடக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிற்காலங்களில் பெண்கள் கல்வி, கற்றமையாலும், அறிவியல் வளர்ச்சியாலும், அடிமைத்தனம் மறையத் தொடங்கி பெண்ணிய வளர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

சு.தமிழ்ச்செல்வி, வறுமை,இயற்கைசீற்றங்கள், சாதி, குடிப்பழக்கம், ஆண்களின் பொறுப்பற்ற தன்மை, பெண்களே உழைத்து குடும்பத்தை காத்தல் போன்ற கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு தம் புதினங்களைப் படைத்திருந்தாலும். பெண்களை மையமாக வைத்தே தம் புதினங்களைப் படைத்துள்ளார். பெண்களின் பிரச்சனைகளில் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தவர்.பெண் விடுதலைக் கருத்துக்களின் அடிப்படையில் பல பாத்திரங்களை உருவாக்கியுள்ளார்.

அப்பாத்திரங்கள் முதன்மை பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்கள் என்ற இரு நிலைகளில் இயங்குகின்றன. அவ்வாறு இயங்கும் பெண்களின் பிரச்சனைகளைப் பல கோணத்திலிருந்து எழுதியுள்ளார். அவர் காட்டும் பெண்களின் பிரச்சனைகள் நடைமுறையில் உள்ளன. பெரும்பாலும் நடுத்தரக் குடும்பத்துப் பெண்களே இவருடையபாத்திரங்கள். இவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனைகளே இவரது புதினங்களில் மையக்கருத்துக்களாக அமைகின்றன .

ரா.ஸ்டெல்லா தீபா முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
முனைவர் நா. தீபாராணி, உதவிப்பேராசிரியர்& நெறியாளர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

பொதுவாக இவருடைய புதினங்களை, "பெண்கள் பிரச்சனையை மையமாகக் கொண்டவை, பெண்கள் பிரச்சனையையும் உள்ளடக்கிவை என இரு பிரிவுகளாக வகைப்படுத்தி ஆராய்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது..

1. மாணிக்கம்
2. அளம்
3. கீதாரி
4. கற்றாழை
5. ஆறுகாட்டுத்துறை
6. கண்ணகி
7. பொன்னாச்சரம்

ஆகியவற்றைக் கொள்ளலாம்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண்களின் வாழ்க்கைமுறை, முன்னேற்ற செயல்பாடு, ஏற்படும் தடுமாற்றங்கள் மற்றும் அதிலிருந்து மீண்டுவர எடுக்கும் முயற்சி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு பெண் பிறந்தது முதல் அவள் வாழ்வில் எதிர்கொள்ளும் மகிழ்ச்சி, துன்பம், அவமானம், பழிச்சொற்கள் ஆகியவற்றைக் கடந்து, இந்த சமுதாயத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அவள் படும் பாடுகளை எடுத்துரைப்பதே பெண்ணியம்.

**“மாணிக்கம்” காட்டும் பெண்ணியம்**

“மாணிக்கம்” என்னும் நூலின் வழியாக சு. தமிழ்ச்செல்வி பெண்களின் நிலையை விரிவாகக் காட்டியுள்ளார். ஒரு பெண் எப்படி இருக்கக் கூடாது என்பதையும், ஒரு பெண் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள் என்பதையும் எடுத்துக்காட்டும் கருவாக இக்கதை அமைந்துள்ளது.

செல்லாயி என்ற பெண் திருமணத்திற்கு பின் அனுபவிக்கும் துன்பங்களையும், பொறுப்பற்ற கணவனின் செயலால் குடும்பம் சிதைந்து நிலைகுலையும் நிலையையும் கண்முன்னே காட்சிப்படுத்துகிறார்.

அவள் நம்பி வந்த குடும்பத்திலேயே மாமியார் செய்தக்கொடுமைகளும், நாத்தனார்களும் சேர்ந்து அவளைத் துன்புறுத்தும் நிலையும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**கதைக்களமும் படைப்பாக்கமும்**

**மாணிக்கம்**

மாணிக்கம் "ஹோமியோபதி" மருத்துவம் அஞ்சல் மூலம் படித்து மருத்துவமனை நடத்தி வருகிறான். சின்னதம்பி தங்கத்தாச்சி இவர்களின் ஒரே மகன், அவனுக்குத் தேவையானவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து செய்யும் அவனது பெற்றோர். குறிப்பாக தாய் விருப்பப்பட்ட சக்குபாய் என்ற பெண்ணை மட்டும் அவன் திருமணம் செய்துகொள்ள எதிர்ப்பை தெரிவிக்கின்றாள். அதற்கு சாதியின் பெயரைப்பேசவோ, அவர்களை மீறி சக்குபாயைத் திருமணம் செய்து கொள்ளவோ அவனுக்குத் துணிவுமில்லை. சாராயம் குடிக்கக் கற்றுக் கொள்கிறான். அந்தப் போக்கை எப்படியாவது நல்வழிப்படுத்த நினைத்து அவனது தாய் செல்லாயியை திருமணம் முடித்து வைக்கிறாள்

விருப்பம் இல்லாத மணம் கொண்ட கணவனோடு வாழ்ந்த செல்லாயிக்கு மாமியாரின் ஏச்சும், பேச்சும் மேலும் வேதனையைத் தருகிறது. தங்கத்தாச்சியின் சித்தரவதைகளை மாணிக்கத்திடம் சொன்னாலும், அவன் எதுவும் காதில் வாங்க மறுக்கிறான். செல்லாயியிடம் அவன் காதலித்த விஷயத்தையும் அவள் வேறு யாரையும் மணமுடிக்காமல் இவனுக்காகவே காத்துக் கொண்டிருப்பதையும் கூறுகிறான். மாணிக்கத்தை எதிர்த்துப் பேசத் துணிவில்லாத செல்லாயி எந்நேரமும் அழுது தன் வேதனையை மறக்கிறாள்.

செல்லாயி கர்ப்பம் அடைகிறாள் அவளைப் பார்க்க வந்த அளுடைய அக்கா சரசு செல்லாயின் நிலையைக் கண்டு மாணிக்கத்திடம் சொல்லியும் அவனுக்குச் செல்லாயின் மேல் பாசமோ, இரக்கமோ எதுவும் வரவில்லை. மாணிக்கம் என்ன நினைத்தானோ, செல்லாயியிடம் ஒன்றும் சொல்லாமல் அவளை அழைத்துக்கொண்டு ஊர் ஊராகச்சுற்றுகிறான். எங்கு போகிறான் வருகிறான் என்பதை அவளிடம் சொல்ல மாட்டான்.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

மாணிக்கம், நெல் அறுப்பது சைக்கிள் வித்தை காட்டுவது, மருத்துவம் பார்ப்பது. என ஏதாவது வேலை செய்கிறான் பல சமயம் வீட்டிற்கே வராமலிருப்பான் செல்லாயியின் முதல் பிரசவம் அவளுடைய அக்கா சரசுவின் வீட்டில் நடக்கிறது. சரசுதான் அவளைத் தாயாக கவனித்துக் கொள்கிறாள். செல்லாயியிக்கு முதல் குழந்தை பெண் குழந்தையாகப் பிறக்கிறது.

செல்லாயியிக்கு எப்பொழுதும் தன் கணவன்மீது கோபம் வராது. முதல் குழந்தை பிறந்ததற்கு ஒரு சட்டைத்துணிகூட அவன் வாங்கி வரவில்லை. எனத் தெரிந்தும் கோபம் வரவில்லை. வேலை செய்யும் காசை வீடு, மனை என்று ஏதாவது வாங்கி வைத்திருப்பான் என நினைத்துத் தன் தாலியில் உள்ள குண்டைக் கொடுத்து அப்பன் செய்ய வேண்டிய அரைஞாண் கொடியும் புதுத்துணியும் சீராகவாங்கி வரச்சொல்லி சபைமுன் அவனை கவுரவிக்கிறாள்.

மாணிக்கம் ஊர் ஊராய் சைக்கிள் வித்தைக்காட்டி விளையாடுவதும். குடிப்பதும் எனச் செலவழிக்கிறான். மாணிக்கத்திற்கு அம்மை போட்டு உடல் மெலிந்துபோகிறது. அதனால் அவன் சொந்த ஊருக்கு திரும்பி வருகிறான். தங்கத்தாச்சியிடம் சொல்லாமல் செல்லாயியியை அழைத்துப்போனவன், இப்போது வந்திருப்பதைக் கண்டு பாசம் காட்டாமல் வெறுப்பையே காட்டுகிறாள். அவர்களை மாட்டுக் கொட்டகையில் தங்கச் சொல்கிறாள். சமைப்பதற்கு கூட பாத்திரமோ, பண்டமோ ஒன்றும் தரவில்லை.

மாணிக்கம் மறுபடியும் மருத்துவம் பார்க்கத் தொடங்கினான். அவன் காதலித்த சக்குபாய் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதைக் கேள்வியுற்று, அவளை இரண்டாவதாகத் திருமணம் செய்ய செல்லாயியிடம் சம்மதம் கேட்கிறான். ஒன்றுமே பதில் சொல்லாமல் ஒப்பாரி வைக்கிறாள் செல்லாயி.மாணிக்கம் எங்கு வந்து தன்னை அழைத்துக்கொண்டு போவான் என நினைத்த சக்குபாய் அவன் வராததால் ஏமாற்றம் அடைந்து வீட்டிற்குச் செல்ல தைரியம் அற்றவளாய் தூக்குப்போட்டு இறந்து போகிறாள். அதனால் மாணிக்கம் செல்லாயியின் மீது கோபம் கொண்டு எங்கேயோ போனவன் சில வருடம் கழித்துத்தான் திரும்பி வருகிறான். அந்த நேரத்தில் செல்லாயி வேறொருவனிடம் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறிய தங்கத்தாச்சியின் பேச்சைக் கேட்டு செல்லாயியை அடித்து துன்புறுத்துகிறான்.

தங்கத்தாச்சி உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாய் இருந்தபோது அவள் ஆசைப்பட்ட உல்ல மீன் வாங்கப் போனவனுக்கு மீன் பீடித்து விற்கும் ஆசை ஏற்பட்டு மீன்பிடிக்கப் போகிறான். வாணி, மணிநாஞ்சி என்ற மூன்று பிள்ளைகளுக்குப்பிறகு நான்காவதாக ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அதன்பின் செல்லாயியின் குடும்பம் ஓரளவு துன்பங்களிலிருந்து விடுபட்டுக் கொண்டிருந்தது.

வாணியை அதே ஊரிலேயே திருமணம் செய்துகொடுக்கின்றனர். கடைசிப் பெண்ணான சின்னது எனச் செல்லமாக வளர்க்கப்படுபவள் விளையாடிக் கொண்டிருக்கும்போது குளத்தில் மூழ்கி எதியாராத விதமாக இறக்கிறாள். குடும்பம் தலைகீழாக மாறத் தொடங்குகிறது. செல்லாயி அவ்வப்போது தன் மகளைப் புதைத்த அனத்து மண்ணை அள்ளிப்பூசி அழுகிறாள். நாஞ்சியும் அவனது விருப்பபடி செல்வி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். தந்தையுடன் சேர்ந்துமீன் பீடிக்கச்செல்கிறான். நாஞ்சி தான் படித்த படிப்பிற்குத் தகுந்த வேலை தேடிக்கொள்ளாமல் மாணிக்கம் மீன்பிடிக்க வருவது மாணிக்கத்திற்கு வருத்தமளிக்கிறது.

நாஞ்சிக்கு இந்த மீன்பிடிக்கும் தொழிலைவிட்டு வேறு கடை ஏதாவது வைத்துக்கொடுக்க நினைத்த மாணிக்கம் கடலில் மீன் பிடிக்கச்சென்று இறந்த குடும்பத்திற்கு அரசாங்கமே பணம் கொடுக்கும் என்பதால் தனது உயிரை இழக்கத் துணிகிறான். தனது மகனுக்காக யாருக்கும் தெரியாமல் கடலில் விழுகின்றான் தனது முடியாத வயதில் தன் மகனின் குடும்பம் தன்னால் செழிப்படைய தனது உயிரைத் தியாகம் செய்கிறான். அதுவரை சுயநலமாக வாழ்ந்த மாணிக்கம் கடைசியில் தன் குடும்பத்தின் நிலையை மாற்ற முற்படுவதுடன் புதினம் முற்றுப்பெறுகிறது.

ISSN :
DOI :

**மாணிக்கம்**

மாணிக்கம் புதிளத்தில் மாணிக்கத்தின் தாய் தங்கத்தாச்சி. மாணிக்கத்தின் மனைவி செல்லாயி, மாணிக்கத்தால் விரும்பப்பட்ட சக்குபாய், மாணிக்கத்தின் நான்காவது மகள் செல்லாயியின் அக்கா சரசு போன்ற பெண் பாத்திரங்கள் கதையின் போக்கையும், கதையின் மையத்தன்மையையும் நிர்ணயிக்கும் பாத்திரங்கள் ஆகும்.

**தங்கத்தாச்சி**

தங்கத்தாச்சி மாணிக்கத்தின் தாய் தங்கத்தாச்சி சின்னத்தம்பி தம்பதியினரின் குடும்பத்தில் தங்கத்தாச்சி தான் குடும்பத்தலைவர் மதுக்கூரில் வேண்டுமளவு நிலபுலமும் முத்துப்பேட்டையில் சொந்தமாக பெரிய வீடும் இருந்தது. சின்னதம்பி பிள்ளைக்கு, வசதியான வாழ்க்கை கிடைத்தபோதும் தங்கத்தாச்சியின் மனம் தன் பிறந்த ஊரின் மீதும் நன்சொந்தங்கள்மீதும், அந்தமண் மீதும் அவளுக்கிருந்த பற்றுமாறவில்லை. சின்னத்தம்பியுடன் நல்ல விதத்தில்பேசி மதுக்கூரிலிருந்த நிலங்களையும் முத்துப்பேட்டையிலிருந்த வீட்டையும் விற்றுவிட்டு கற்பகநாதர் குளத்தில் வந்து குடியேறிவிட்டான்.

"தான் வைத்ததுதான் சட்டம் அடித்ததுதான் மொட்டையென்று சொல்லுபவள் தங்கத்தாச்சி, சின்னத்தம்பியே கூட தங்கத்தாச்சிக்குப் பயப்படுவார். அவளிடம் எதிர் நின்று யாரும் பேசமாட்டார்கள்" **தமிழ்ச்செல்வி மாணிக்கம் பு-175**

இத்தகைய ஆளுமை குணம் கொண்ட தங்கத்தாச்சி ஏழு பெண்களுடன் பிறந்த ஒரேயொரு ஆண் பிள்ளையென்று மாணிக்கத்திற்கு மட்டும் சலுகை காட்டுவாள் மாணிக்கம் நாயின் அன்பை முழுமையாய்ப் பெற்றவனாக இருந்தபோதும் அவன் காதலிக்கும் சக்குபாயை திருமணம் செய்துகொள்ள தங்கத்தாச்சி ஒத்துக்

கொள்ளவில்லை. சக்குபாய் யார் வீட்டுப்பெண் என்று சாதியைக்காட்டி காதலை மறுத்து விடுகிறாள். மேலும், தன் பிள்ளை தன் பேச்சை மீறக்கூடாது என்பதற்காக அவனுக்கு தங்கள் உறவு ஏதுவுமே இல்லையென்றும் தன்னுடைய சொத்து எதுவுமே அவனுக்கில்லையென்றும் கண்டிப்புடன் கூறிவிடுகிறாள்.

தாயின் பிடிவாதத்தைக் கண்ட மாணிக்கம். நான் சக்குபாயை மணக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில், வாடகை சைக்கில் எடுத்துக்கொண்டு ஊர் ஊராக கற்றுவது, வீட்டுக்கு வராமலிருப்பது, மது அருந்துவது, சீட்டாடுவது என்று தீய பழக்கத்துக்கு ஆளாகிவிடுகிறான்.

**தாய்மையுணர்வு**

மாணிக்கத்தின் இந்த நிலையைக் கண்டு வேதனைப்பட்டு அவளுடைய தாய் வீட்டு தெய்வமான மாடஞ்சாமியை அழைத்து பூசை வைத்து அருள் வாக்கு கேட்க, சாமி வந்த கோவிந்து,

அவன் என்னையும் கேக்கமாட்டான் ஒன்னயும் கேக்க மாட்டான், அவாப்போயி அழிச்சிடப் பாக்குறான். வுடாத அவன வுடாத வுட்டயின்னா பெயிடும், எல்லாம் பெயிடும்" க.**தமிழ்ச்செல்வி மாணிக்கம் 1-57**

என்று கூறிவிடுகிறது. மாணிக்கத்தின் விருப்பப்படி விட்டுவிட்டால் அவன் வாழ்க்கை வீணாகிவிடும் என்று சொல்லவே மாணிக்கத்தின் காதலுக்கு மறுப்பு கூறி உறுதியாய் மறுப்பு கூறி விடுகிறாள் தங்கத்தாச்சி.

தன் ஒரே மகளின் வாழ்க்கை நல்லபடியாய் அமைய வேண்டுமே என்ற எண்ணம் மிகுந்தவளாய் அவனுக்கு நல்ல பெண்ணாய்ப்பார்த்து திருமணம் முடிக்க வேண்டுமென நினைக்கிறாள்.

தன் மகன் தீயப்பழக்கங்களுக்கு அடிமையாகி அவன் வாழ்க்கை வீணாய்ப்போகக் கூடாது. அவனுக்கு ஒரு துணையைத் தேடி வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், தாயில்லாமல் தன் பாட்டியிடம் வளர்ந்த செல்லாயியை மாணிக்கத்துக்கு பேசி முடிக்கிறாள்.

"காதுக்கு சொருவு தொங்கமாட்டான் மாட்டலு, கழுத்துக்கு ரெட்டவம் சங்கிலிப் போட்டு கட்டிக்கிட்டுப் போறம், ஓங்க பொண்ணக் குடுங்க". **க.தமிழ்ச்செல்வி மாணிக்கம் -75** என்று கேட்டு திருமணம் முடிக்கிறாள்..

**மாமியார் என்னும் அதிகாரம்**

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

தங்கத்நாச்சித் திருமணம் முடிந்து வந்தப்பின் செல்லாயியின் மீது இருந்த கருணை உணர்வு மாறி விடுகிறது. தன்னிடம் சொல்லாமல் அவர்கள் ஊரைவிட்டு சென்றதால் கோபமடைகிறாள். சக்குபாயைத் திருமணம் செய்ய தன் சம்மதத்தை எதிர்பார்த்து காத்திருந்த ஊரைவிட்டு செல்லப்போகிறோம் என்றோ தளிக்குடித்தனம் பண்னணப் போகிறோம் என்றோ தன்னிடம் மகனும், மருமகளும் சொல்லாமல் சென்றதால் கோபம் கொள்கிறான்.

மகன்ஊர் ஊராகச் சுற்றிவிட்டு மீண்டும் தள்னிடம் வந்து வாழ இடம் கேட்கும் அவர்கள் மீது பரிதாபம் வரவில்லை நங்கத்தாச்சிக்கு மாறாக கோபமே வருகிறது அந்தக் கோபத்தில் அவர்களை வேண்டுமென்றால் மாட்டுக் கொட்டகையில் சேர்க்க மறுத்துவிடுகிறாள். தங்கச் சொல்கிறாள்.

நாம் நேடிக்கட்டிக்கொண்டு வந்த பெண் நம்மளையே மதிக்கவில்லையே என்ற கோபம் செல்லாயியின் மீது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தன் மகன் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னிக்கும் தாய் மனம், மருமகள் என்று வகும் போது மன்னிக்க மறுக்கிறது. தன் வீட்டையும், கணவளையும் நிலத்தையும், சொத்து பத்துக்களையும் வைத்து நிர்வாகம் செய்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவள்.ஆளுமை, அதிகாரம் செய்தவள் தன் நிலையிலிருந்து மாறவேயில்லை. தன் கடைசி காலத்தில் உடல்நிலை முடியாமல் போன போது கூட பிள்ளையிடம் வரவில்லை. தனியாகவே கிடந்தாள் மாணிக்கமும் செல்லாயியும் தான் இவளுடைய நிலையை கேள்விப்பட்டு வந்து பார்த்தார்கள். தங்கத்தாச்சி கடைசி வரை செல்வச்செழிப்பில் வாழ்ந்து, அதிகாரத்தோடும், ஆளுமையோடும், இருந்து மறைவதாக படைக்கப்பட்டுள்ளாள்.

**செல்லாயி**

மாணிக்கத்தின் மனைவி தாயில்லாமல் வளர்ந்திருந்தாலும் தான் திருமணமாகி வந்த இடத்தில் கணவனின் பாராமுகத்தையும், வெறுப்பையும் கண்டு துவண்டு விடாமல் மாமியார், நாத்தனார்களின் கொடுமையையும் எதிர்த்துப் போராடி வாழ்கிறாள். தன் கணவன் நேசித்த பெண் தற்கொலை செய்துகொண்டு இறந்து விட்டாள். என்பதை அறிந்து மிகவும் வேதனைப்படுகிறான்.

இல்லற வாழ்க்கையின் கடமைகளிலிருந்து தவறாமல், மாணிக்கம் வீட்டை விட்டு சென்றபோதும், மனம் தளராமல் தன் உழைப்பையே நம்பி வாழ்கிறாள். வறுமையோடு இருந்தபோதும் மாமியாரிடமோ. தன் தந்தை வீட்டிற்க்கோ செல்லவில்லை. அடுத்தவர்களின் வயல்களில் கூலி வேலைசெய்து தன் பிள்ளைகளை காப்பாற்றுகிறாள். பொறுப்பில்லாமல் சுற்றும் மாணிக்கத்திடம் அவள் சண்டை போடுவதில்லை. எப்பொழுதும் கணவனை அவன் வெறுக்கவுமில்லை; மாணிக்கம் குடித்துவிட்டு தன்னை அடிக்கும்போது கூட அவனை குறைகூறாமல் சாராயக்கடை வைத்திருப்பவர்களையே குறைசொல்லுகிறாள். கணவனும் மாமியாரும், தன்மீது சந்தேகம் கொண்டு பேசும் போது மட்டும் இறந்து விடலாம். என்று எண்ணுபவள். அவ்வாறு செய்து விட்டாள் அவர்கள் சொன்னது உண்மை என்றாகிவிடும் என்று அந்த எண்ணத்தை கைவிடுகிறாள். சக்குபாயை மணக்கப் போவதாக மாணிக்கம் கேட்கும் போது அவனை எதிர்த்து ஒப்பாரி வைக்கிறாள். மாணிக்கம் செல்லாததால் சக்குபாய் தூக்கிட்டு இறந்துவிட்டாள் என்றவுடன் அதிர்ச்சியில் நிலை குலைந்து போகிறாள் செல்லாயி

"நம்மலால அவ்வொள போவவுடாமப் பண்ணுனம். பெண்ணோட பாவம் பின்னால சுத்தும் பாவொளே யாங்கொடுமய எங்க கோயி சொல்லுவன் பொண்ணோட பாவம் சும்மா வுடுமா? நானும் ரெண்டு பொண்ணுவள பெத்து வச்சிருக்குறனே. **க.தமிழ்ச்செல்வி மாணிக்கம் -170**

என்று புலம்புகிறாள். தன் கண்வளை தன்னுடன் இருந்து பிரித்து இரண்டாவதாய் மணந்து கொள்ள நினைத்தவள் என்ற எண்ணம் கூட இல்லாமல் சக்குபாயின் இறப்பிற்கு தான்தான் முழுக்க காரணம் என்பது போல் எண்ணி வகுத்தப்பட்டாள். தனக்கு போட்டியாக தன் வாழ்க்கையை பகிர்ந்துகொள்ள வந்த பெண் மீதுகூட இரக்கம் காட்டும் பெண்ணாக செல்லாயி பெண்

ISSN :
DOI :

பாத்திரம் அமைகிறது. கணவன் செய்யும் தவறுகளுக்குக்கூட நான் காரணம் என்பது போல் எண்ணிக்கொண்டு வாழும் ஒரு அபலைப் பெண்ணாக அமைகிறது செல்லாயிபார்கிறம்

**முடிவுரை.**

செல்லாயி என்ற பெண் சிறு வயதிலிருந்து தாயின் அரவணைப்பு இன்றி வளர்ந்து, புதிய குடும்பத்தில் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து, பிள்ளைகளை வளர்க்க தனியாகப் போராடியவள். அவள் அனுபவித்த வேதனைகள் பெண்ணியத்தின் உண்மையான முகத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தக் கதையின் நாயகன் மாணிக்கமாக இருந்தாலும், செல்லாயியின் துயர வாழ்க்கையை மையமாகக் கொண்டு கதையை நகர்த்தியுள்ளார் எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி.

---------------------------------------------------

**துணை நூற்பட்டியல்**

1.சு.தமிழ்ச் செல்வி மாணிக்கம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை
திருத்திய இரண்டாம் பதிப்பு - டிசம்பர் 2022.
2. முனைவர். இரா. பிரேமா பெண்ணியம் -கள நிலையம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. ச. முத்துச் சிதம்பரம் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை முதற் பதிப்பு 2017

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள்

(முனைவர் யு.துர்காதேவி)

Date of submission : 02-04-2026 Date of acceptance : 13-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name : Dr. Y.Durkadevi
Email : Dukrkadevi.sl@vistas.ac.in
Pages : 18 - 21

**ஆய்வுச்சுருக்கம்**

ஆண்டாளின் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதனால், அவற்றைப் பயிலும் அனைவரின் மனதில் உயிர்ப்பான காட்சிகள் தோன்றி, கவிதை அனுபவம் செறிவடைகிறது. மேலும், இவ்வுருக்காட்சிகள் பக்தி உணர்வின் உச்சிக்குக் கொண்டு சேர்க்கும் வல்லமையையும் உடையதாக அமைகின்றன. ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

உருக்காட்சி – கட்புலம் – ஒலி -சுவை – நாற்றப்புல - வெப்பம் -காட்சி -உணர்வு.

**முன்னுரை**

உருக்காட்சி என்பது, கவிஞர் சொற்களின் வழியாக வாசகனின் புலன்களை ஈர்க்கும் வகையில் உருவாக்கும் ஒரு முக்கியமான இலக்கிய உத்தியாகும். புலன்களின் மூலம் படிப்பவரின் உணர்வுகளையும் அறிவையும் தூண்டி எழுச்சியுறச் செய்யும் திறன் இதற்குண்டு. இதனை முன்னிட்டு, கவிதைகளில் உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆங்கிலத் திறனாய்வாளரான பாட்டன், தனது கவிதைத் திறனாய்வு என்ற நூலில், புலன்களை நோக்கி உரையாடும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு உருக்காட்சிகள் பலவகைப்படுகின்றன எனக் கூறுகிறார். அவை செவிப்புல உருக்காட்சிகள், கண்புல உருக்காட்சிகள், சுவைப்புல உருக்காட்சிகள், மணப்புல உருக்காட்சிகள், தொடுபுல உருக்காட்சிகள், இயக்கப்புல உருக்காட்சிகள் மற்றும் மரபுவழி உருக்காட்சிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

சொற்கள் என்பது எண்ணங்களுக்கும் புலனுணர்வுகளுக்கும் இடையிலான குறியீடுகளாக அமைகின்றன. ஒரு கவிதையை வாசிக்கும் போது அதிலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் வாசகனின் மனக்கண்ணில் பலவிதமான காட்சிகளை உருவாக்குகின்றன. இவ்வாறு உருவாகும் உருக்காட்சிகள், புலன்களின் மட்டத்தில் மட்டுமல்லாமல், கருத்துணர்வின் நிலைக்கும் ஊக்கமளித்து, கவிதை அனுபவத்தை ஆழப்படுத்துகின்றன.

மேலும், சில சொற்கள் வாசகனின் மனதில் ஏற்கனவே பதிந்துள்ள (கட்டுண்ட) காட்சிகளையும், புதிய (விடுதலை) காட்சிகளையும் உருவாக்குகின்றன. இவ்விரு வகை உருக்காட்சிகளும் கவிதையை உணர்ந்து ரசிப்பதற்கு இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன.

**கட்புல உருக்காட்சிகள்**

பல்வேறு உருக்காட்சிகளில், கண்புலத்தை (காட்சி உணர்வை) ஈர்க்கும் உருக்காட்சிகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இத்தகைய காட்சியுருக்காட்சிகளே வாசகர்களின் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதற்குக் காரணமாக, கண்புல உணர்வை ஏந்தும் நரம்பு அமைப்பு மற்ற

முனைவர் யு.துர்காதேவி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

புலன்களை விட வலிமையானதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண்டாள் பாசுரங்களில் கண்புலத்தை ஈர்க்கும் பல உருக்காட்சிகள் காணப்படுகின்றன.

**“எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்**
**குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில்**
**எழுகமலப் பூவழகர்…”[1]**

என்ற பாசுரத்தில், திருமாலின் திருமேனி அழகு பல கோணங்களில் சித்தரிக்கப்படுகிறது. இங்கு “இன்னமுதர்” என்பது சுவைப்புல உருக்காட்சியாக அமைந்தாலும், “குழலழகர்”, “வாயழகர்”, “கண்ணழகர்”, “கமலப்பூவழகர்” போன்றவை அனைத்தும் கண்புல உருக்காட்சிகளாகும். இவ்வாறு பல புலன்கள் இணைந்ததால், இது கலவை உருக்காட்சியாகவும், கற்பனை நயத்துடனும் விளங்குகிறது.

**செவிப்புல உருக்காட்சிகள்**

செவியால் உணரப்படும் ஒலிகளின் மூலம் மனதை ஈர்க்கும் உருக்காட்சிகள் செவிப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**“கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து**
**பேசின பேச்சரவம் கேட்டிலையோ? …**
**வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ?” [2]**

என்ற பாசுரத்தில், பலவிதமான ஒலிக் காட்சிகள் அடுக்காக வருகின்றன. இதில், “கீசு கீசு” எனும் பறவைகளின் குரல், ஆனைச்சாத்தனின் பேச்சொலி, பெண்களின் கைகலக்க ஒலி, தயிர் கடைக்கும் ஓசை, இறைவனைப் பாடும் குரல் இவை அனைத்தும் செவிப்புல உருக்காட்சிகளாகும்.

அதே நேரத்தில், “வாச நறுங்குழல்” என்பது மணப்புல (நாற்றப்புல) உருக்காட்சியையும், “தேசமுடையாய்” என்பது கண்புல உருக்காட்சியையும் உணர்த்துகின்றது. எனவே, இப்பாசுரம் பல புலன்கள் கலந்து அமைந்த கலவை உருக்காட்சியாக விளங்குகிறது.

**“புள்ளும் சிலம்பின காண்…**
**வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ”[3]**

என்ற இடத்தில், சங்கின் ஒலி மற்றும் பறவைகளின் கீச்சு செவிப்புல உருக்காட்சிகளாகவும், “வெள்ளை விளிசங்கு” கண்புல உருக்காட்சியாகவும் அமைகிறது.

**சுவைப்புல உருக்காட்சிகள்**

நாவால் அனுபவிக்கப்படும் சுவையை உணர்த்தும் உருக்காட்சிகள் சுவைப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாள் பாசுரங்களில், இறைவனை “அமுது” எனக் குறிக்கும் இடங்களில் இத்தகைய உருக்காட்சிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**“ஆரா அமுத அனையான் தன்**
**அமுத வாயில் ஊறிய**
**நீர் தான் கொணர்ந்து…”[4]**
**“ஆண்டவனும் அமுதன்; அவன் வாயில்**
**ஊறும் உமிழ் நீரும் அமுதம்” [5]**

என்ற அடிகளில், இறைவன் முடிவில்லா அமுதமாகவும், அவன் வாயில் ஊறும் நீரே அமுதமாகவும் சித்தரிக்கப்படுகிறது. இதன் மூலம், இறைவனை அனுபவிப்பது சுவை உணர்வின் உச்சமாகக் கூறப்படுகிறது. ஆண்டாளின் காதல் உணர்வு இங்கு சுவைப்புல உருக்காட்சியின் வழியாக வெளிப்படுகிறது.

**நாற்றப்புல உருக்காட்சிகள்**

மணத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ள உருக்காட்சிகள் நாற்றப்புல உருக்காட்சிகள் எனப்படுகின்றன.

**“கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்**
**திருக்குமோ?”[6]**

என்ற பாசுரத்தில், ஆண்டாள் திருச்சங்கத்திடம் வினவுவதன் மூலம், கண்ணபிரானின் வாயின் மணத்தையும் சுவையையும் ஒப்பிடுகிறார்.

இங்கு கருப்பூரத்தின் வாசனையும், தாமரைப்பூவின் மணமும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு, இறைவனின் தெய்வீக

மணம் சித்தரிக்கப்படுகிறது. இதனால், நாற்றப்புலத்துடன் சேர்ந்து சுவைப்புல உருக்காட்சியும் கலந்துள்ளது. மேலும்,

**“கத்தம் கமழும் குழலி”[7]**

என்ற அடியிலும் மணத்தை உணர்த்தும் நாற்றப்புல உருக்காட்சி தெளிவாகக் காணப்படுகிறது.

இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் பல்வேறு புலன்களைத் தூண்டும் உருக்காட்சிகள் நயமுடன் அமைந்து, அனைவரின் மனதில் உயிர்ப்பான அனுபவத்தை உருவாக்குகின்றன.

**தொடுபுல (நொப்புல) உருக்காட்சிகள்**

தொடுதலின் மூலம் அனுபவிக்கப்படக்கூடிய உணர்வுகளை வெளிப்படுத்தும் உருக்காட்சிகள் தொடுபுல (அல்லது நொப்புல) உருக்காட்சிகள் எனப்படுகின்றன. இவ்வகை உருக்காட்சிகளும் ஆண்டாள் பாசுரங்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

**“குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின் மேல்
மெத்தென்ன பஞ்சசயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா”[8]**

என்ற அடிகளில், காட்சிநயமும் தொடுபுல உணர்வும் இணைந்து வெளிப்படுகின்றன. இங்கு “குத்துவிளக்கு எரிதல்”, “கோட்டுக்கால் கட்டில்”, “நப்பின்னையின் அணைப்பு” போன்றவை கண்புல உருக்காட்சிகளாக அமைய, “மெத்தென்ற பஞ்சசயனம்” என்பது மென்மையான தொடு உணர்வைத் தரும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இவ்வாறு பல புலன்கள் கலந்து அமைந்ததால், இப்பாசுரம் கலவை உருக்காட்சியாகவும், அனுபவ நயத்தை உயர்த்துவதாகவும் விளங்குகிறது. மேலும்,

**“செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா”[9]**

என்ற தொடரில் “வெப்பம்” எனும் உணர்வு உடலால் உணரப்படும் தொடுபுல அனுபவத்தை உணர்த்துகிறது. ஆகையால், இது தொடுபுல உருக்காட்சியின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். நாச்சியார் திருமொழியில் இடம்பெறும்,

**“காமத்தீயுள் புகுந்து கத்துவப்பட்டு இடைக்கங்குல்...”[10]**

என்ற அடிகளில், ஆண்டாள் தன் காதல் வேதனையை தீயினால் எரியப்படுவது போன்ற அனுபவத்துடன் ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறார். இங்கு “காமத்தீ” என்ற சொல் உடலை எரிக்கும் வெப்பத்தை உணர்த்தும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இதன் மூலம், ஆண்டாள் தனது உள்ளார்ந்த காதல் உணர்வை உடல் உணர்வுகளோடு இணைத்து தீவிரமாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் தொடுபுல உருக்காட்சிகள் உணர்ச்சியின் ஆழத்தையும் அனுபவத்தின் தீவிரத்தையும் வெளிப்படுத்தும் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன.

உருக்காட்சி என்பது, சொற்களின் வழியாகப் புலன்களுக்கு இன்பம் தரும் காட்சிகளை உருவாக்கும் உத்தியாகும். இது அனைவரின் உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டுகின்றது. ஆகவே கவிதைகளில் உருக்காட்சிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

----------------------------------------------

**துணைநூற்பட்டியல்**

1, **அடிக்குறிப்புகள்**

1. ஆண்டாள், திருப்பாவை. ப.608
2. மேலது. பா.7
3. மேலது. பா.6
4. நா.தி.பி.. பா. 630

ISSN :
DOI :

5. மேலது. பா.567
6. ஆண்டாள், திருப்பாவை, பா.18
7. மேலது, பா.19
8. மேலது, பா.20
9. நா.தி.பி.. பா.578
10. ஆண்டாள், திருப்பாவை, பா.4

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

# திரையிசைப் பாடல்களில் நிலையாமை

(பா கௌசல்யா தேவி, யு.துர்கா தேவி,)

**ஆய்வுச்சுருக்கம்**

சிற்றிலக்கியக் கூறுகளில் ஒன்றான முதுகாஞ்சியில் இடம் பெற்றுள்ள மனிதனின் வாழ்க்கை நிலையாமை திரையிசைப் பாடல்களில் எப்படிப் பொருந்தியுள்ளது என்பதை இவ்வாய்வு நமக்கு எடுத்துரைக்கிறது. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை,உயிர் நிலையாமை, இளமை நிலையாமை போன்ற நிலையாமைத் தத்துவப் பாடல்கள் திரையிசைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது. சிற்றிலக்கியங்களில் ஒன்றான முதுகாஞ்சி. இம்முதுகாஞ்சி இலக்கியம் திரையிசைப்பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

உலகம், வாழ்க்கை , செல்வம், அறம் இளமை

**முன்னுரை**

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் முக்கூறுகளையும் ஒருங்கே கொண்டவை தமிழ்த் திரைப்படங்கள். நாடகத் தமிழின் அறிவியல் வளர்ச்சி தான் திரைப்படங்கள் எனலாம். இந்தத் திரைப்படங்களின் வெற்றிக்குப் பெரிதும் துணை நிற்பவை அவற்றில் இடம் பெறும் திரையிசைப்பாடல்கள். இவை கதைப்போக்கிற்குத் துணை நிற்பவை; இயக்குநரின் கதைக்கேற்பப் பாடலாசிரியர்களால் இயற்றப்படுபவை. இந்தப் பாடலாசிரியர்கள் தாம் கற்ற இலக்கியங்களைக் கொண்டும் தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் பாடல்களை இயற்றுகின்ற போது அவை ரசிகர்களின் மனத்தில் நீங்கா

**Date of submission : 02-04-2026 Date of acceptance : 13-04-2026**
**Date of Publication: 30-04-2026**
**Corresponding auther's Name : Dr. Y.Durkadevi**
**Email : Dukrkadevi.sl@vistas.ac.in**
**Pages : 22 - 26**

இடம் பிடித்து விடுகின்றன. அது மட்டுமல்ல, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் பேசும் இலக்கியமாகத் திகழ்கின்றன. இந்த நாற்பொருளில் பொருளும் இன்பமும் நிலையில்லாதவை; நிலையில்லாதவற்றை நிலையானதாக மாற்ற, அறம் செய்ய வேண்டும். அப்போது தான் வீடுபேறு கிடைக்கும் என்கிறது

**முதுகாஞ்சி**

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான இது , முதியோர் இளைஞருக்கு இளமையின் நிலையாமையை எடுத்துக் கூறி அறிவுரை கூறும் பொருளில் அமையப் பெற்றது எனப் " பிரபந்த தீபிகை" கூறுகிறது.

முதுகாஞ்சியின் முக்கிய நோக்கம் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகியவற்றை விளக்கி அறம் செய்ய வலியுறுத்துவதே ஆகும். தொல்காப்பியரும் இதனைப் புறத்திணையில் ஒன்றான காஞ்சித் திணையின் ஒரு துறையாகக் கூறியுள்ளார்.

**" கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்"** [1]

என்பது நூற்பா. அதாவது முன்னோர்கள் வாழ்பவர்களுக்குக் கூறிய அறிவுரை எனத் தொல்காப்பியர் இலக்கணம் கூறுகிறார். பிரபந்த தீபம் என்ற நூல் முதுகாஞ்சி என்பது

**பா கௌசல்யா தேவி, முனைவர்பட்ட ஆய்வாளர்,**
**முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர்& நெறியாளர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117**

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**" முதுமையை மொழிதல்"** [2]

என்கிறது.

**" கழறு இளமை ஒரீஇ அறிஞர் இளமையுறு**
**அறிவின் மாக்கட்கு அறைதல் முதுகாஞ்சி"** [3]

என இலக்கணம் கூறுகிறது பிரபந்த தீபிகை. இதன்படி, முதுகாஞ்சி என்பது அறம் , பொருள், இன்பம், வீடுபேறு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இளமையிலேயே உணர்த்தி, நல்லறங்களை உலகிற்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கம் எனலாம்.

**திரையிசைப்பாடல்களில் முதுகாஞ்சி**

**" நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை"** [4]

என்கிறது வள்ளுவம். நிலையில்லாதவற்றை நிலையானவை என மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருப்பதே வாழ்க்கையின் இழிந்த நிலை என்பது இதன் பொருள். இந்த இழிந்த வாழ்வை வாழாமல் கடைத்தேற வேண்டுமாயின் எவை நிலையில்லாதவை என்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும். இளமை நிலையில்லாதது ; யாக்கை நிலையில்லாதது; உயிர் நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது.

**" நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது செல்வம்**
**பார்க்குமிடத்து அந்த மின்போலும் என்பர்"** [5]

என்கிறது கந்தரலங்காரம். இந்த உடல் இருக்கிறதே அது நீரில் தோன்றும் குமிழி போன்றது. விரைவில் அழிந்து போகும். செல்வம் நிலையில்லாதது; மின்னல் வெட்டுவ்து போலத் தோன்றி மறையக்கூடியது என்பது இதன் பொருள்.

**ஆடியடங்கும் வாழ்க்கையடா**

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிய மனிதன் எவனும் ஒரு நாள் அடங்கித் தான் போவான். பிறகு எது சொந்தம் அவனுக்கு? ஆறடி நிலம் தான். வேறென்ன? நீர்க்குமிழி என்றொரு திரைப்படத்தில் உவமைக் கவிஞர் சுரதா எழுதுகிறார் இப்படி:

**ஆடி அடங்கும் வாழ்க்கையடா**
**ஆறடி நிலமே சொந்தமடா**
**முதலில் நமக்குக்கெல்லாம் தொட்டிலடா**
**கண் மூடினால் காலில்லாக் கட்டிலடா**

பாடையைக் காலில்லாக் கட்டில் என்கிறார்.என்ன அருமையான உவமை என்று வியந்து போகிறோம். உவமைக் கவிஞரல்லவா? ஆனால் அவரே சொல்கிறார் இது புறநானூறிலிருந்து எடுக்கப்பட்டது என்று.

**"கால்கழி கட்டிலிற் கிடப்பித் தூவெள்ளறுவை**
**போர்ப்பித்திலதே"** [6]

என்பது புறநானூறு. தொடர்கிறது பாடல்.

**இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை**
**இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்**

இறந்து போனபின்னாலும் ஒருவன் செயல் செய்ய முடியும் என்றால் அது இது தான். இருப்பவர் கண்களைத் திறப்பது தான்.

**வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை**
**வந்தவர் யாருமே நிலைத்ததில்லை**[7]

இந்த உலகின் சிறப்பே அது தானே?

**போனால் போகட்டும் போடா**

இழப்பின் உச்சத்தில், விரக்தியின் உச்சத்தில் மரியாதையாவது, மண்ணாவது. போனால் போகட்டும் போடா! என்று தான் தொடங்குகிறது பாடல். திரைப்படம்: பாலும் பழமும். எழுதியவர் கவியரசு கண்ணதாசன்.

**" போனால் போகட்டும் போடா!**
**பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?**
**போனால் போகட்டும் போடா!"**

இந்தப் பூமிக்குச் சிறப்பே நிலைத்து எவனும் இருந்ததில்லை என்பது தானே?

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**

ISSN :
DOI :

**பெருமை உடைத்திவ் வுலகு"** [8]

என்கிறாரே வள்ளுவர். தொடர்கிறது பாடல். நமக்குப் பிறந்த நாள் தெரியும்; இறக்கப் போகும் நாள்? நல்ல வேளை! தெரியாது. சரி! இறந்த பிறகு எங்கு போகிறோம்? அதுவும் தெரியாது. அழகாகத் தொடர்கிறார் கவிஞர்.

**" வந்தது தெரியும் போவது எங்கே?**
**வாசல் நமக்கே தெரியாது"**

இந்த மண்ணில் இறப்பே இல்லையென்றால்? அன்றாடம் பலர் இறந்து கொண்டிருக்கும் போதே ஜனத் தொகை அதிகம் என்று பேசுகிறோம். இதில் மரணம் வேறு இல்லையென்றால்? யோசிக்கவே பயமாக உள்ளது.கவிஞரின் வரி பாருங்கள்,

**" வந்தவரெல்லாம் தங்கி விட்டால்- இந்த**
**மண்ணில் நமக்கே இடமேது?"**

கவிஞர் சிறந்த வியாபார மரபில் வந்தவர்; இந்த வாழ்க்கையை வியாபாரமாகப் பார்க்கிறார். இதில் வரவு எது? பிறப்பு தான்; செலவு? மரணம் தான் செலவு.

**" வாழ்க்கை என்பது வியாபாரம்- வரும்**
**ஜனனம் என்பது வரவாகும்-அதில்**
**மரணம் என்பது செலவாகும்."**

சரி! இந்தப் பிறப்பாவது முதலா? என்றால் அதுவும் இல்லை; அதுவும் கடன்; இரவல் வாங்கி வந்தது. கொடுத்தவன் கேட்பானா இல்லையா?என்ன ஒன்று! எப்போது கேட்பான் என்று தெரியாது. ஆனால் கட்டாயம் கேட்பான். இந்த உண்மையைத் தான் பலரும் மறந்து போகின்றனர். என்ன செய்ய? தர முடியாது என்றால் விட்டு விடுவானா? உறவு சொல்லி அழுதால் உயிர் மீண்டும் வந்து விடுமா என்ன? யார் அழுதாலும் அழாவிட்டாலும் போனது போனது தான்.

கூக்குரல் போட்டால் வருமா? வராது. கோர்ட்டுக்குப் போனால் கேஸ் ஜெயிக்குமா? ஜெயிக்கவே ஜெயிக்காது. யாரும் வெளியேறவே முடியாத அந்தக் கோட்டைக்குள் நுழைந்து விட்டால் ? திரும்பவே திரும்பாது.

**" இரவல் தந்தவன் கேட்கின்றான் - அதை**
**இல்லை என்றால் அவன் விடுவானா?**
**உறவைச் சொல்லி அழுவதனாலே**
**உயிரை மீண்டும் தருவானா?**
**கூக்குரலாலே கிடைக்காது- இது**
**கோர்ட்டுக்குப் போனால் ஜெயிக்காது- அந்தக்**
**கோட்டையில் நுழைந்தால் திரும்பாது**
**போனால் போகட்டும் போடா!"** [9]

கவியரசு கண்ணதாசனின் சிறந்த பாடல்களுள் இதுவும் ஒன்று.

**கனவு காணும் வாழ்க்கை**

இந்த வாழ்க்கையே ஒரு கனவு. அதில் எதற்கு இன்னொரு கனவு? ஆனால் கனவு காணாமல் இருக்க முடியாதாமே? கவிஞர் இளந்தேவன் இப்படி எழுதுகிறார்:

**" போயும் போயும் கனவிலே**
**போதை கொள்ளும் மனிதனே**
**நீயும் கூடக் கனவடா!**
**நினைக்க நேரமில்லையா?** [10]

நீங்கள் கேட்டவை என்றொரு திரைப்படம். அதில் கவிஞர் வைரமுத்து எழுதுகிறார் இப்படி:

**" கனவு காணும் வாழ்க்கை யாவும்**
**கலைந்து போகும் கோலங்கள்"**

கோலங்களை ஏன் சொன்னார் என்றால் வாழ்க்கையைப் போலவே கோலங்களும் நிரந்தரமல்ல. தினம் தினம் புதுக் கோலம். பிறந்த தேதி எப்படி நிச்சயமோ அப்படி இறக்கும் தேதி சர்வ நிச்சயம். அதை நாம் வசதியாக மறந்து விடுகிறோம்.இந்த அற்ப வாழ்க்கையில் தான் எவ்வளவு ஆசைகள்? எவ்வளவு ஆணவங்கள்?, எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்? கவிஞர் தொடர்ந்து எழுதுகிறார்:

**" பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி**
**இருக்கின்றதென்பது மெய் தானே?**
**ஆசைகள் என்ன ?ஆணவம் என்ன ?**
**உறவுகள் என்பதும் பொய் தானே?**

காயமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா! என்பார்கள். கவிஞரின் பார்வையிலே இந்த உடம்பு வெறும் கனவுகள் வாங்கும் பையாம்.அதில் குறைந்த காலமே இருக்கும் வாலிபம் என்பதும் பொய்யாம். கவிஞரின் வரிகளிலேயே பார்க்கலாம்:

**" உடம்பு என்பது உண்மையில் என்ன ?**
**கனவுகள் வாங்கும் பை தானே?**
**காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்**
**வாலிபம் என்பது பொய் வேஷம்"** [11]

இந்த உலகம் நிலையற்றது, இதில் வாழ்க்கை மட்டும் எப்படி நிலையானதாக இருக்கமுடியும்? ஆனால் பைத்தியங்கள் பலரும் இந்த வாழ்க்கை நிலைக்கும் என நினைக்கிறார்களே! என்ன சோகம்! இதனைக் கவிஞர் ஆபாவாணன்

**" நிலை மாறும் உலகில்**
**நிலைக்குமென்ற கனவில்**
**வாழும் மனித ஜாதி"** [12]

என்று எழுதுகிறார் தம் படமான ஊமை விழிகள் என்ற திரைப்படத்தில்.

**ஆடாதடா ஆடாதடா மனிதா**

ஆணவத்தில் மிகவும் ஆடும் மனிதர்களைப் பார்த்துக் கவிஞர் வாலி, செந்தூரப்பாண்டி என்ற திரைப்படத்தில்

**" ஆடாதடா ஆடாதடா மனிதா ரொம்ப**
**ஆட்டம் போட்டா அடங்கிடுவ மனிதா!"** [13]

என்று எழுதுகிறார். கவிஞர் சிநேகன் அதிஅற்புதமான பாடலை மௌனம் பேசியதே என்ற திரைப்படத்தில் தருகிறார்.

**"ஆடாத ஆட்டமெல்லாம்**
**போட்டவங்க மண்ணுக்குள்ள**
**போன கத உனக்குத் தெரியுமா?**

எனத் தொடங்குகிறது பாடல். வரும் போது என்ன கொண்டு வந்தோம்? எதுவுமில்லை. போகும் போது என்ன கொண்டு போகப் போகிறோம்? அதுவும் எதுவுமில்லை. பிறகு எதற்கு இந்த ஆட்டமெல்லாம்? பாடலுக்குள்ளே தொடர்ந்து போகலாம்:

**"நீ கொண்டு வந்ததென்ன?**
**நீ கொண்டு போவதென்ன?**
**உண்மை என்ன உனக்குப் புரியுமா?**

இன்பமெங்கே? இன்பமெங்கே? என்று தேடி அலைகிறோம். இறுதித் தீர்ப்பு நாளிலே இறைவன் முன்னால் நிற்க வேண்டும், நாம் செய்த அனைத்திற்கும் பதில் சொல்லித் தீர வேண்டும் என்பதை மறந்து பாவங்களைச் செய்து குவிக்கின்றோம். இந்தப் பூமி கொஞ்சம் குலுங்கினால் கூட , நம் ஆட்டம் அவ்வளவு தான்.

**"நித்தம் கோடி சுகங்கள் தேடி**
**கண்கள் மூடி அலைகின்றோம்**
**பாவங்களை மேலும் மேலும்**
**சேர்த்துக் கொண்டே போகின்றோம்**
**மனிதன் என்னும் வேடம் போட்டு**
**மிருகமாக வாழ்கின்றோம்**
**தீர்ப்பு ஒன்று இருப்பதை மறந்து**
**தீமைகள் செய்கின்றோம்.**
**காலம் மீண்டும் திரும்பாதே**
**பாதை மாறிப் போகாதே**
**பூமி கொஞ்சம் குலுங்கினாலே**
**நின்று போகும் ஆட்டமே"** [14]

எனப் போகிறது பாடல். பண்டைய இலக்கியமான முதுகாஞ்சி திரையிசைப் பாடல்களில் இன்னும் தொடர்கிறது என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

**முடிவுரை**

இன்றைய இலக்கியமான திரையிசைப் பாடல்களில் அன்றைய இலக்கியமான முதுகாஞ்சியின் கருத்துகள் இடம் பெற்றிருப்பது பழமையைப் போற்றும் பண்பையும் அறச்சிந்தனைக்கு அழிவில்லை என்பதையும் வலியுறுத்துவதாக உள்ளது.

**துணை நூல்கள் :**

1. **அடிக்குறிப்பு:**

1 தொல்காப்பியம் -பொருள்- புறத்திணை -இளம்பூரணர் உரை பக்கம் 77

2 பிரபந்த தீபம் நூற்பா 89

3 பிரபந்த தீபிகை நூற்பா 30

4 திருக்குறள் எண் 331

5 கந்தரலங்காரம் பாடல் எண் 66

6 புறநானூறு பாடல் எண் 286

7 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

8 திருக்குறள் -திருவள்ளுவர்- குறள் எண் 336

9 கவிஞர் கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள் தொகுதி 1 பக்கம் 339

10 இளந்தேவன் கவிதைகள் , பக்கம் 65

11 ஆயிரம் பாடல்கள்-வைரமுத்து-பக்கம் 158

12 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

13 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம்.

14 தமிழ்ப் பாடல் வரிகள்-இணைய தளம

**துணை நூற்பட்டியல் :**

1 தொல்காப்பியம்

2 பிரபந்த தீபம் ச. வே. சுப்பிரமணியம் பதிப்பு

3 பிரபந்த தீபிகை ச. வே. சுப்பிரமணியன் , உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு.

4 திருக்குறள் மு .வ உரை

5 கந்தரலங்காரம்-குகஸ்ரீ பதிப்பகம்.

6 புறநானூறு- வர்த்தமானன் பதிப்பகம்.

7 கவிஞர் கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள் தொகுதி 1
கண்ணதாசன் பதிப்பகம்.

8 இளந்தேவன் கவிதைகள்- கண்ணப்பன் பதிப்பகம்.

9 ஆயிரம் பாடல்கள் - வைரமுத்து- சூர்யா பதிப்பகம்.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# திணைக்கோட்பாட்டில் உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்

(து.தீபா, முனைவர் அ.இருதயராஜ்)

Date of submission : 12-02-2026 Date of acceptance : 22-02-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj
Email : irudhayaraj.sl@velsuniv.ac.in
Pages : 27 - 32

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் வாழ்வியல் நிலம் சார்ந்தது. அவர்களது வாழ்வும் இயற்கைச் சூழலுடன் பின்னிப் பிணைந்தது. எனவே படைப்பாளி உலகியல் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு, தான் சார்ந்த முதலியவற்றை இயற்கை, சமூகம், வாழ்க்கை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைக்கின்றான். நிலமும் முறை பொழுதும் இலக்கியப் படைப்பின் பின்புலமாக அமைகின்றன. எனவே நிலம் சார்ந்த வாழ்வியல் கருத்துக்களை உள்ளடக்கிய திணைக் கோட்பாட்டைப் தமிழ் நவீன இலக்கியங்களின் வழி பகுப்புமுறை ஆய்வு தொகுப்பு முறை ஆய்வு விளக்கமுறை ஆகிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி விளக்கப்பெறுகின்றன.

**திறவு சொல்** புணர்தல், இருத்தல், இரங்கல்,ஊடல்,பிரிதல், சமுதாயம்,

## முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் நாகரிக மேம்பாட்டையும், வாழ்வியல் சார்ந்த கொள்கைகளையும் வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்கள் புலப்படுத்தும் ஐவகை நில அமைப்புக் கூறுகள், அந்நிலம் சார்ந்தவாழ்வியல் பதிவுகள், ஒழுக்க நெறிப்பாடுகள் அனைத்தையும் திணை என்ற சொல்லால் சங்கப் புலவர்கள் குறித்துள்ளனர். இதன்வழி ஒவ்வொரு திணைக்கும் உரிய மாந்தர்களும் பண்பாட்டு, வாழ்வியல் முறைகளில் தனித்தன்மைப் பெற்று விளங்கியுள்ளதனை அறியமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் பதிவான உரிபொருள் தற்கால இலக்கியங்களில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திணை பொருள் விளக்கம்

திணை - என்பது முதற்பொருளான நிலத்தையும், மக்களின் நடவடிக்கைகளையும் குறிக்கும். திணை என்ற சொல் வீடு, நிலம், திண்ணை, இடம்,குடி,குலம்,ஒழுக்கம், பாடல், சூழலமைதி, ஐந்திணை ஆகிய பொருள்களில் வரும். அது நிலத்தைக் குறித்தது என்பதை,

**"திணைதோறும் மரிஇய திணை நிலைப் பெயரே"**
**"திணிமணல் அடைகரை"**
**"மண்திணிந்த நிலனும்"**

என்னும் பாடல் வழி அறியலாம். காலப்போக்கில் திணை என்ற சொல் குலத்தையும் குடியையும் குறித்து வந்தது என்பதை,

**"வான் திணைப் புரையோர்"**
**"இத்திணைப் பிறத்தல்"**
**"மூத்த விழுத்திணை"**
**"விழுதிணை"**

என்ற பாடல்களின் வரிகள் திணைக்கு வரையறை கொடுக்கப்படுகின்றன.

## திணைக்கோட்பாடு

பண்டைத் தமிழருடைய இலக்கிய மரபுகளையும் கோட்பாடுகளையும் அறிந்த தொல்காப்பியர், முதல்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அமையத் தோன்றும் பாடலே திணைப்பாடல் என்பர். இதனை,

து. தீபா, முனைவர்ப்பட்ட ஆய்வாளர்,
முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை"**

என்ற நூற்பா வழி அறியலாம்.

திணை என்பது முதற்பொருள் என்ற நிலம், பொழுதுகள்; கருப்பொருள்கள், உரிப் பொருள்கள் இணைந்த தன்மையையே குறிக்கிறது. தன் காலத்துத் திணை இலக்கியங்களைக் கருத்தில் கொண்டு தொல்காப்பியர் 'பாடலுட் பயின்று' வந்துள்ள முதல் கரு உரிப்பொருள்களை ஆராய்ந்துப் பார்த்தால் பாடும்போது இவை மூன்றும் ஒன்று மற்றதைவிடச் சிறந்து அமையும் என்பது அவர் கருத்தாக உள்ளது.

ஒரு உணர்வு பற்றிக் குறிப்பிடப்படும் இடத்தில்/பாடலில் வேறொரு உணர்வுக் குரிய கருப்பொருள்களும், பெரும்பொழுது, பொழுதுகளும் வரலாம். இவ்வாறு மாறி வரும் கருப் பொருள், பெரும்பொழுது, சிறுபொழுதுகள் எந்த உணர்வைப் பாடல் சுட்டுகிறதோ அந்தத் திணைக்குரியதாக அவற்றைக் கொள்ள வேண்டும்

**உரிப்பொருள்**

ஒவ்வொரு திணைக்கும் உரிய பொருளை கூறுவது உரிப்பொருள் எனப்படும். உரிப்பொருள் திணைக்கு உரிய முக்கிய உணர்ச்சியைக் குறிக்கிறது.

புணர்தல்: ஒன்றுசேர்தல்
இருத்தல்: பிரிவைப் பொறுத்து இருத்தல்
ஊடல்: தலைவி தலைவன் மீது கோபம் கொள்ளல்
இரங்கல்: பிரிவு தாங்காது தலைவி வருந்துதல்
பிரிதல்: தலைவன் தலைவியைப் பிரிதல்

ஆகியவைகள் திணைக்குரிய உரிப்பொருள்கள் ஆகும்.

**உரிப்பொருள் வளர்ச்சி சமூதாயம்**

மனித வாழ்கையில் நிகழ்வுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் களமாக இலக்கியங்கள் விளங்குகின்றன. படைப்பாளி தங்களின் கற்பனைகளை விட மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், சொந்த அனுபவங்களையும் தமது படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். இன்றைய நவீன அரசியல் போக்குகள், அதிகார வர்க்க காலத்தில் சாதி, நிலைமைகள். பெண்களின் பெண்மைப் பலவீனங்கள வாழ்க்கைப் பிரச்சனைகள், இளைய தலைமுறையினரின் தன்மைகள் முதலியவை நவீனகாலப் பாடலில் பாடுபொருளாக அமைக்கப்பட்டுள்ளன.

சமூக பணியில் ஈடுபடுவதற்குத் தங்கள் மனதைத் திறக்கவேண்டும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதைகளில் கூறியுள்ளார். இதனை,

**"சமூக நலத்திற்குச் சுற்றே**
**உங்கள் இதயச் சன்னலைத்**
**திறந்து வைப்பீர்"**

என்ற கவிதை வழி அறியலாம்

**சாதி.**

காலங்கள் மாறினாலும் நாகரிகம் வளர்ந்தாலும் இன்றைய கட்டத்திலும் மாறாத நிலையாக இருப்பது, மனிதர்க்கிடையில் காணப்படுகின்ற சாதிப் பிரிவுகளும் அடிமை முறைகளும் ஆகும். நிறத்தால் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் பிறப்பால் அனைவரும் மனிதர்கள் தான் இவற்றில் உயர்ந்தவர்கள் தாழ்த்தவர்கள் என்பது இல்லை மனித இனத்தால் அனைவரும் ஒன்றாவர். இன்றைய காலக்கட்டங்களின் மனிதர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக கருதப் பெறுவது சாதிகள் என்ற பிரிப்பு முறையே

சாதிகள் மக்களிடையே ஒற்றுமையைக் குலைக்கின்றது. பகைமையை வளர்க்கிறது. பிரிவினைக்கு ஆணி வேராக இருக்கின்றது, அல்லை உண்டாக்கி கொலை,கொள்ளை, கற்பழிப்பு, தீ வைப்பு போன்ற கொடுமையானச் செயல்கள் நிகழக் காரணமாக அமைகின்றது. இச்சாதிக் கொடுமைகள் அகல பல்வேறு புரட்சியாளர்களும் அறிஞர்களும் ◌ால் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் இன்றும் முடிவுக்கு வாவில்லை 'உங்களுடைய சமூக அமைப்பை மாற்றினால் ஒழிய நீங்கள் முன்னேறவே முடியாது

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

மனிதன் சாதி, சமயம், மொழி, இனம், என்று பல்வேறு நிலைகளில் பிரித்தாளப்படுகிறான். இதனால் இன்றனவும் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதற்கு இவைகள் பெரும் காரணமாக அமைகின்றன இதில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் புதைந்து அஞ்சி வாழ்கின்ற நிலையைச் சிற்பி.

**வயல் சேற்றுக்குள்**
**நண்டு போல்**
**நெருப்பு எரிந்தது.**
**தாழ்த்தப்பட்டவர் அஞ்சிப்**
**புதைந்திருந்தனர்**

என்ற கவிதையில் உணர்த்துகின்றார். தொடக்கக் காலத்தில் இனக்குழுக்கலாக இருந்தது. அப்போது அவர்களிடையே எவ்வித தீமையும் இல்லை தற்போது காணப்படும் சாதிய பகுப்பானது இடையில் தோற்றுவிக்கப்பட்டு, உயர்பதவியிலிருப்பவர்களால் வளர்ந்து உயர்ந்தது என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார்

**“ஆதியில் இல்லாத சாதி**
**பாதியில் வந்து**
**பதவியில் உயர்ந்தது"**

என்ற கவிதை உணர்த்துகின்றது. தாழ்த்தப்பட்ட இனத்தவன்ல மரியதையுடன் வாழ முடியவில்லை. அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்பதைத் தமிழன்பன.

**ஓடி முன்னே மாறன் நகர்ந்தான்.**
**நில்லடா பறையா**
**ரொம்பத் திமிர்தான் உனக்கு..?"**

என்று கூறுகின்றார்.

**சுரண்டல்**

தொழிலாளர்கள் உழைப்பு சுரண்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**வேர்வை நதிகள்**
**கண்ணீர்க் கடலில் விழுவது**
**தடுத்து நிறுத்தப்படும்."**

என்ற கவிதை அடிகள் வழி அறியமுடிகின்றன. மேலும், சுரண்டி வாழும் முதலாளிக்கு எதிராகப் போராடித்தான் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதை,

**"அழுத பிள்ளைக்குப்**
**பால் கிடைத்தது**
**அந்தக் காலம்!**
**அடித்த பிள்ளைக்குப்**
**பால் கிடைப்பது இந்தக் காலம்! எனவே**
**அழுத்து போதும்!"**

என்ற கவிதை அடிகள் வழி அறியமுடிகின்றன.

**வறுமை**

வறுமை என்பது ஒழுக்கம் நேர்மை ஆகிய அறவழிகளைச் சீர்குலைக்கும் புல்லரிவியாகும். "வறுமை என்பது மனிதனது நிலைப்பட்ட வாழ்வுக்கு வேண்டிய பொருளியல் தேவையாகும். உயிரோடு வாழ்வதற்கு வேண்டியவையிருப்பினும் சமூகத்தின் பெரும்பான்மையானக் கூட்டத்தினர் நியாயமானச் செம்மையான வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டியவையெனக் கருதுவன் இல்லையெனில், அந்நிலையை வறுமை: அதாவது தேவைகள் வற்றிய நிலை எனக் கொள்வதுண்டு" என்று ராங்குமார் கூறுகின்றார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சிதைக்கும் வறுமையைப் படைப்பாளிகள் பாடுபொருளாகப் படைத்திருக்கின்றனர். தந்தை இல்லாத வீட்டில் அவர்கள் வீட்டு அவர்கள் வீட்டில் அடுப்பு எரியவில்லை. மாறாக உள்ள அனைவரின் வயிறும் பாசியால் தினமும் எரிகின்றது. என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**"அப்பா இல்லாத**
**ஆநாதைக் குடும்பத்தில்**
**ஆறு வயிறுகள்**

**ஒவ்வொரு நாளும்**
**புற்றி எரிந்தன**
**அடுப்பு சாம்பல் பூசி**
**மௌனம் பூத்துக் கிடந்தது"**

என்ற கவிதை உணர்த்துகின்றன. உணவின்றி பாசியானல் பாதிமக்கள் இருளில் மறைந்து வாழ்கின்றார்கள் என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**"பசி குடியிருக்க**
**அவன் வயிறுண்டு!"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

தினமும் பாடுபட்டு உழைத்தாலும் அவர்கள் குடும்பநிலை மறவில்லை. அவர்கள் உழைப்பு சுரண்டப்படுகின்றது. உழைப்பாளியின் குடும்பம் வறுமையில் உள்ளது என்பதைச் சிற்பி
கூறியுள்ளார். இதனை.

**"பட்டுப்புடவையில்**
**அம்மாவைப் பார்த்ததே இல்லை**
**அப்பா எடுத்துக் கொடுக்க**
**இல்லையோ என்னவோ"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**பெண்ணியம்:**

பெண்களின் நாட்டின் பெண்களின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டுவதாகும். பெண்கள் உயர்கின்ற பொழுதுதான் சமூகம் உயர்கிறது, படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளில் பெண்ணின் உணர்வுகளையும் அவர்களின் பாதிப்புகளையும் பதிவு செய்ய மறுப்பதில்லை வாழ்க்கைப் பிரச்சனைகள் குடும்ப சூழ்நிலைக்காரனாமாகவும் பொருளாதரநிலை காரணமாகவும் திருமண வயது கடந்து திருமணமாகமல் முதிர்கள்ளியாகப் பெண்ணாளவள் வீட்டில் இருக்கின்றாள். என்ற பெண்ணின் உள்ளக் குமறலைத்

**தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,**

**"அணிப வரில்லா மலரென ஆனேன்! நான்**
**அடைய வரில்லாத் தோப்பென் ஆனேன்!**
**அனைப்ப வரில்லாச் சேயென ஆனேன்! -நான்**
**ஆள்ப வரில்லா நிலமென ஆனேன்!"**

என்றும்.

**"காத்துக் கிடந்த**
**கன்னிமை கழியாத**
**வண்ணக் காகித**
**வசீகரத் தூய்மையை."**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**அரசியல்**

தற்போது நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரின் ஆட்சிமுறை உழல் நிறைத்துக் காணப்படுகின்றது. நேர்மையான ஆட்சிமுறையைக் காண்பது கடினமானது அவ்வாறு நடக்குமாக என்று தம்புவது வீன் நம்பிக்கை என்பதைத் தமிழன்பன்.

**"ஊழல் கலக்காமல்**
**ஓர் ஆட்சி நடக்குமென**
**உங்கட்கு நம்பிக்கை உண்டா?"**

சுதந்திர நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டும். ஆனால் அடித்தட்டில் உள்ள மக்களுக்குக் கிடைக்கவேண்டி சலுகைகளை எல்லாம் வசதிப்படைத்தவர்களும் அரசியல்வாதிகளும் பயன்டுத்திக் கொள்கின்றார்கள். அடித்தட்டு மக்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. அவர்கள் வறுமையில் வாடி இருப்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை

**ஏழையின் சிரிப்பில்**
**இறைவன் பிறக்கிறான்**
**ஏழையின் கண்ணீரில்**
**இறைவன் இறக்கிறான்."**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றது.

இன்றைய நோரதலில் அரசியல் வாதிகள் பணம் கொடுத்து வாக்குரிமையைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார் இதனை,

**'தேர்தல் 'சுய்வரம்**
**சுயத்தில்**
**இல்லை - பணத்தின்**
**'வரத்தில்'**
**இருக்கிறது!"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

இன்றை அரசில் தலைவர்கள் நிலையை அவர்கள் எவ்வாறு ஆட்சிக்கு அவருகிறார்கள் என்பதையும் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**"வாக்குச் சீட்டுகளை**
**வழிப்பறி செய்வது**
**கடினமானதல்ல"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**வேளையற்ற நிலை**

இன்றை இளைஞர்கள், பட்டதாரிகள் வேலையற்ற நிலையில் எதிர்த்துப் போராட்டங்களை மேற்கொள்கிறார்கள் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**"தீப்பந்தங்களைத் தூக்கியபடி உச்சக் குரலில்**
**'வேலை கொடு எங்களை**
**வாழவிடு' என்று நகரைக் குலுக்கி**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**கையூட்டு**

எங்கும் தற்போது கையூட்டு வாங்காமல் வேலைசெய்வதில்லை. ஆலய வழிப்பாடும் பணம் எதிர்ப்பார்த்தே நிகழ்த்தப்படுகின்றது என்பதைத் தமிழன்பன் தன் விதையில் கூறியுள்ளார். இதனை,

**"ஆலயத்திலிருக்கும்**
**அம்மன்கூட எதைப் பார்க்கிறாள்?**
**ஆச்சி ஏந்திய தட்டையா?"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**சுற்று சூழல்**

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம் நீர், காற்று, வான்வெளி, சூரியன். தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும் மனிதன் உருவாக்கும் ஒருங்கமைப்புகளையும் அவனது வாழ்க்கை நிலை, கலாச்சாரம். தொழில்நுட்ப சமூகப் பொருளாதர சட்ட அமைப்பு, அரசியல் சுகாதார அமைப்பு போன்றவற்றையும் உள்ளடக்கியது ஆகும். மனிதன் வாழ்கின்ற இந்த உலகு தனித்தன்மை வாய்ந்தது. நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள். மனிதர் உட்பட்ட அனைத்து உயினங்களும் வாழ்கின்ற பல்வேறு விதமான வாழிடங்களைச் சுற்றுச் சூழல் என்று அழைக்கிறோம். எனவே உவ்வொரு உயிரினங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புக் கொண்டு வாழ்கின்றது. ஒன்று அழிக்கப்பட்டால் அவற்றைச் சார்ந்துள்ள மற்றொன்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இதனால் சுற்றுச் சுழல் பாதிக்கப்படுகின்றது. தற்காலத்தில் சீர்க்கெட்டுவரும். சுற்றுச் சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயற்கை வளங்களில் உள்ளதமானது காடு, “காடு அழித்தால் நாடு அழியும்“ என்பது பழிமொழி.

காலநிலையைச் சீராக வைப்பதற்கும் நிலச்சரிவு, மண் அரிப்பு ஏற்படாதவாற பாதுகாக்கவும் காடுகள் உதவுகின்றது. காடுகள் அழிக்கப்படுவதால் நாட்டில் வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டு நாடு அழிகின்றது என்பதைச் சிற்பி தன் கவிதையில் கூறியுள்ளார்.

இதனை,

**"தேசங்கள் தோறும்**
**ஞானங்கள் தந்தவை மரங்கள்**
**மரங்கள் அழிந்தால்**
**மானுடம் அழியும்**
**உணவும் உடையும்**
**உறையுளும் அழியும்"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

மனிதனின் செயலால் இயற்கைச் சீறங்கள் ஏற்படுகின்றன. அவற்றை கட்டுப்படுத்த இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கவேண்டும். அவற்வாறு பாதுகாத்தால் மட்டுமே இயற்கை அழிவிலிருந்து மனிதன... காக்கமுடியும் என்பதைத் தமிழன்பன் தன் கவிதையில் கூறியுள்ளார். இதனை,

**இயற்கையிடமிருந்து**
**மனிதனைக் காப்பாற்றுவோம்**
**அப்படியே மனிதனிடமிருந்தும்**
**இயற்கையைக்**
**காப்பாற்றுவோம்!"**

என்ற கவிதை அடிகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் பதிவான உரிபொருள் தற்கால இலக்கியங்களில் அரசியல் போக்குகள், அதிகார வர்க்க காலத்தில் சாதி, நிலைமைகள். பெண்களின் பெண்மைப் பலவீனங்கள வாழ்க்கைப் பிரச்சனைகள், இளைய தலைமுறையினரின் தன்மைகள் முதலியவை நவீனகாலப் பாடலில் பாடுபொருளாக அமைக்கப்பட்டுள்ளன.

---

துணைநின்றவை

1. **தொல்காப்பியம் பொருளதிகாரம்**, சுந்தரமூர்த்தி. கு (ப.ஆ), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். மு.ப. 1985.
2. **தமிழன்பன், தமிழன்பன் கவிதைகள்,** பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. **சிற்பி பாலசுப்பிரமணியன்,சிற்பி கவிதைகள்** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# சங்க இலக்கியத்தில் ஓரையாடுதல் (விளையாட்டு)

(முனைவர் பொ.குபேந்திரேன்)

Date of submission : 26-04-2026 Date of acceptance : 28-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.P.Gubendiran
Email : gubendiran.sl@vistas.ac.in
**Pages : 33 - 36**

**ஆய்வுச் சுருக்கம் :**

பழங்காலத் தமிழன் நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு நிலைத்த வாழ்க்கைக்கு வந்தடைந்த போது தனித்த வாழ்க்கை, குழு வாழ்க்கையைப் புரிந்து கொண்டு செயல்பட்டான். அப்பொழுது அவன் பெற்ற பயிற்சி அவனது வீரத்தைப் புலப்படுத்த வகை செய்தது. வீரத்தோடு மனமகிழ்ச்சியும் இணைய விளையாட்டுக்கள் தோன்றலாயின. மகளிர் விளையாட்டுக்களில் ஓரையாடுதலை விளக்கமுறை ஆய்வு முறையில் விளக்கப்பெறுகின்றன.

**திறவுச்சொல் :** ஓரை, மகிழ்ச்சி, விளையாட்டு, நீர் விளையாட்டு.

**முன்னுரை :** விளையாட்டு என்பது சங்க கால மக்களோடு இயங்கி செயல்படக்கூடிய ஒரு உடற்பயிற்சியாக செயல்பட்டது என்பது சங்க இலக்கியத்தை வாசிக்கும் பொழுது புரிந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் மக்கள் உடல் நலம் பேணுவதற்காக பல்வேறு விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்துள்ளனர். உடல் நலத்தையும் பாதுகாத்து உள்ளனர். முதியோர்கள் இளையோர்கள் என்று பாராமல் தங்களுக்குக் கிடைக்கும் நேரங்களில் அவர்கள் விளையாடி நேரங்களைச் செலவழித்து உள்ளனர். உடல் நலத்தையும் மனநலத்தையும் செழிப்போடு வைத்துள்ளனர் என்பதற்கு சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதில் ஒரு விளையாட்டு தான் **'ஓரையாடுதல்'** விளையாட்டு ஆகும். மகளிர் விளையாட்டுக்களில் ஒன்றான ஓரையாடுதலை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஓரையாடுதல் :** கடற்கரைச் சோலையில் சிறுவீடு கட்டுதல்,சிறுசோறு சமைத்தல் போன்றவைகள் மகளிர் (இல்லம் பெண்கள்) ஆடும் ஆட்டங்களாக பண்டைத் தமிழகத்தில் வழங்கி வந்தன. அவற்றுள் ஓரை என்பது கடல் விளையாட்டில் (நீர்விளையாட்டில்) அடங்கும் ஒருவகை விளையாட்டாகும்.

**"தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியுஞ்**
**சிற்றில் இழைந்தும் சிறுசோறு குவைதியும்" - அகம். 110**

**ஆரவாரத்தாரோடு கடலில் விளையாடுதல்:**

பண்டைய விளையாட்டுகள் என்ற தலைப்பில் வித்துவான் கோ.சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் **'ஓரை'** என்பதனைக் குறிக்குங்கால் அது ஒருவகை விளையாட்டு என்று கூறுவர். மேலும் அவர் "அது இன்னது என்று நன்றாக விளக்கப்பட வில்லை. அது பஞ்சாய்ப் பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்" என்று கூறியுள்ளார்.நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு,புறநானூறு முதலிய சங்க இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள் கூறிச் சென்றதையே அவரும் கூறியுள்ளார்.

'ஓரை' என்பது ஒருவகையான நீர்விளையாட்டாகும். ஓரை விளையாட்டு இன்றும் பெயரில் சற்று திரிபு ஏற்பட்டு 'ஓரி' என்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் வட்டத்தில் இளம்சிறாரிடையே வழக்கிலுள்ளதை நம்மால் காணமுடிகிறது.

**முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

ISSN :
DOI :

**குறுந்தொகையில் ஓரையாடுதல்:**

சங்க இலக்கியத்தில் '**நல்ல**' என்னும் அடைமொழிப் பெற்றும் இலக்கிய உரையாசிரியர் பலரால் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட சிறப்புடைய குறுந்தொகையில், தமிழர் பண்பாட்டில் ஒன்றாக இருக்கக் கூடிய விளையாட்டுகளில் ஒன்றான, நீர் நிலைகளில் விளையாடும் விளையாட்டான "**ஓரை**" பற்றிய குறிப்பும் உள்ளது. அவற்றிலிருந்து ஒருசில பாடல்களைக் காண்போம்.

**1.தலைவனின் பிரிவில் ஓரையும் கசத்தல் :**

**"தாதின் செய்த தண் பனிப் பாவை**
**காலை வருந்தும் கையாறு ஓம்பு" என,**
**ஓரை ஆயம் கூறக் கேட்டும்,**
**இன்ன பண்பின் இனை பெரிது உழக்கும்**
**நன்னுதல் பசலை நீங்க, அன்ன**
**நசை ஆகு பண்பின் ஒரு சொல்**
**இசையாதுகொல்லோ, காதலர் தமக்கே?"** – (குறுந்.48)

- பூந்தாது சேர்த்து ஒரு பொம்மை செய்து 'பாவை' என வைத்திக்கொண்டு 'ஓரை' விளையாடுவது விளையாட்டுத் தோழிமார் வழக்கம். தோழியர் கூட்டத்தோடு சேர்ந்து காலை நேரத்தில் 'ஓரை' விளையாடுகையில் பூந்தாதுகளால் பாவைச் செய்து விளையாடுவர். அவர்களோடு சேர்ந்து விளையாடிய தலைவியானவள் தலைவனின் பிரிவால் அழுதுக் கொண்டிருந்தாள். "நீ அழுதால் பாவை வருந்தும், ஆதலால் அழாதே" என்று கூறித் தோழியர் தலைவியைத் தேற்றினர். அதனைக் கேட்ட பின்னரும் தலைவி அழுதுக் கொண்டே இருந்தாள். தலைவனைப் பிரிந்து அழும் தலைவியின் நெற்றியில் பசலை நோய் படர்ந்தது. பெண்கள் ஆடும் விளையாட்டுகளில் ஓரை என்ற விளையாட்டு இருந்தது என்பதும், தலைவனைப் பிரிந்துள்ள தலைவிக்கு விளையாட்டும் கசந்ததை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

**2. ஓரையும் நண்டு விளையாட்டும்:**

தலைவன் தலைவியிடம் நட்பு கொள்வதற்கு முன்பு நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறுவான். அவனுன்னைப் பிரியேன், விரைந்து மணம் முடிப்பேன். பிரிவை நீட்டிக்க மாட்டேன் என்று கூறி நட்பு கொள்கிறான்.களவு வாழ்க்கையில் அலர் தோன்றுகிறது. அதனால் தலைவி தலைவனிடம் செல்ல விழையும் போது அவன் வாய்மையற்றவனாக உள்ளான் என்பதை,

**"ஆய்வளை ஞெகிழவும் அயர்வு மெய் நிறுப்பவும்**
**நோய்மலி வருத்தம் அன்னை அறியின்**
**உளெனோ வாழ் – தோழி! – விளியாது**
**ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,**
**ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி**
**துறைவன்சொல்லோ பிற ஆயினவே"** – (குறுந்.316)

என்னும் நெய்தல் திணைப் பாடல் எடுத்துரைகின்றது.

**3. மெய்தோய் நட்பு :**

அடும்புக் கொடியின் அழகிய மலர்களையும் நெய்தல் மலர் மாலைகளையும் சூடி, நீர் ஒழுகும் கூந்தலுடன் கடற்கரையில் விளையாடும் பெண்களுக்கு அஞ்சி, நண்டுகள் போல் கடலுக்குள் ஓடி ஒளிந்துக் கொள்ளும் தலைவனவன். அத்தகைய தலைவனோடு நான் ஒருநாள் சிரித்து விளையாடினேன். அவனோடு உடல் கலந்த நட்பு கொண்டேன். அந்த நட்பு, நான் அவனோடு மீண்டும் விளையாடுவதைத் தடுத்து, என்னை இற்செறிப்பில் (வீட்டுக் காவலில்) ஆழ்த்தி விட்டது. இது மிகவும் வியக்கத்தக்கது. காதலின் ஆழத்தால் மகிழ்ச்சிக்குப் பின் வரும் துயரத்தைத் தலைவி இப்பாடலில் எடுத்துரைக்கின்றாள்.

**அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்**
**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**
**ஓரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு**
**கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநாள்**
**நக்குவிளை யாடலுங் கடிந்தன் றைதே**

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

**கம்ம மெய்தோய் நட்பே." - (குறுந்.401)**

என்னும் பாடலில் தலைவனோடு தான் மெய் தோய்ந்த நட்பு கொண்ட பின்பு, அவனைப் பிரிந்து வாழ முடியாமல், உடல் வேறுபாடு கண்டு தாய் வீட்டை விட்டு வெளியேறாமல் தடுத்த நிலையில் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஓரை என்னும் இவ்விளையாட்டை நெய்தல் நிலமக்கள் மட்டுமல்லாது பிற நிலத்துவாழ் மக்களும் இவ்வகை விளையாட்டை விளையாடினர் என்பதற்கு பல பாடல்கள் சான்று உள்ளன.

**நற்றிணையில் ஓரையாடுதல்:** சங்க அகப்பாடல்களில் நல்ல + திணை என்னும் சிறப்புப் பெற்ற நூலான நற்றிணையில் பழந்தமிழரின் அக வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டும் காட்சிகளும் சங்க வரிகளில் மிளிர்கின்றன. அவற்றுள் ஓரை விளையாட்டு பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது. நற்றிணையில் நான்கு பாடல்களில் இவ்விளையாட்டுப் பற்றிய குறிப்பு உள்ளது. (நற்றிணை : 68, 298, 143,155).

**"ஓரை ஆடினும் உயங்கும் நின் ஏறி" -** (நற்., 60:10)

"விளையாட்டாயமொடு ஓரை யாடாது" - (நற்., 68)

**அகநானூறு - புறநானூறா - ஓரையாடுதல் :** அகநானூற்றில் மூன்று பாடல்களும் (40, 60,2 9), புறநானூற்றில் ஒரு பாடலிலும் ஓரை விளையாட்டுப் பற்றிய குறிப்பு உள்ளது.

**"ஓரை யாயத் தொண்டொடி மகளிர்"** - (புறம்.176)

ஆக மொத்தம் பதினொழு பாடல்களில் ஓரை விளையாட்டு பற்றிய செய்திகள் பதிவாகியுள்ளதைக் காண முடிகின்றது.

'ஓரை' என்பது இன்னது என்று விளக்கமாகக் கூறும் பாடல்கள் தமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் களவு ஊகித்தறிவதற்கு இடம் இருக்கிறது.

**"ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்" - (நற்.155)**

**"ஓரை மகளிர்" - (குறுந். 401);**

**"ஓரை மகளிர்" - (குறுந். 316)**

எனவரும் சொற்களைக் கொண்டு ஓரை இளம் பெண்கள் ஆடும் ஆட்டம் என அறிகின்றோம். ஆனால் அவ் விளையாட்டு இன்று இருபாலரிடையே வழங்கி வருகின்றது. "ஓரையும் ஆயமும் கொச்சியும் காண்தொறும்" , "தீர்வார் கண்ணேன்", "ஓரை ஆயமொரு பந்துசிறி தெறிலும்"என்பன போன்ற வரிகள் நமக்கு, தலைவி தோழிகளுடன் சேர்ந்து ஆடிய ஆட்டமாக எடுத்துக்காட்டுகிறது.

"கதிரவன் மேற்கு திசையிலே சென்று மறைதலாலே பொழுது போயிற்று என்பதனை அறிந்து வீட்டிலுள்ளோர் என்ன கூறுவார்களோ? என்ற அச்சத்தால் நீர் அலைந்த அலசலே கலைந்த கூந்தலைப் பிழிந்தும் பயத்தால் வயிற்றில் அடித்துக்கொண்டும் ஒரு சேரக்கூடி தம்மூர்ச் சென்றனர்" என்று நற்றிணை (பாடலெண். 398) பாடல் நமக்கு அழகாக எடுத்துக் காட்டுகிறது .

நீர் ஆடுபவர் ஒருவரையொருவர் மேல்போலத் தொடர்ந்து விளையாடுபவர் என்பதால் அது நிலத்தில் விளையாடும் ஓடிபிடிக்கும் ஆட்டம் அல்ல என்பருடன் நீரில் ஒளிந்து ஆடும் பட்டடிக்கும் ஆட்டம் என்பதை நாம் அறிகிறோம். ஏனெனில் உடலின் நிழல்போல தொடரும் என்ற உவமை நீர்ன்கண் நிகழும் இவ்வாட்டத்தைக் குறிப்பதற்காக அமையுமேயன்றி நிலந்திற்கல்ல.. மெய்நிழல்போல' என்ற சொற்றொடர். நீரில் ஒருவரையொருவர் மூழ்கி நீந்திச் செல்லும் போது செல்லும் தோற்றம் பொருத்தமாக உள்ளது. இது இன்று காணும் ஓரியாட்டத்தில் நன்றாகக் காணலாம்.அவ் வாட்டம் பட்டடிக்கும் ஆட்டம் என்றும் 'ஓரி' என்றும் கூறுவர்.

நீர் நிலைகளில் இளஞ்சிறுவர் அல்லது சிறுமியர் குளிக்கச் செல்றலுமுன் தங்களுக்குள் பாடலாம் என்று தீர்மானித்த விட்டால் போதும். உடனே எல்லோரும் நீரில் குதிக்கத் தொடங்குவர்.அவ்வாறு குதிப்பதற்குமுன் 'பின்னாலே குதிப்பவன் ஓரி' என்று சொல்லியவாறே குதிப்பர். எவர் பின்னாலே குதிக்கின்றாரோ அதாவது கடைசியாக குதிப்பவர் ஓரியாககக் கருதப்படுவர் ஆவர். அவர் மற்றவரில் எவரை யேனும் பிடிக்க வேண்டும். நீரில் மூழ்கியிருக்கும்போதோ நிலத்தில் இருக்கும் போதோ பட்டடிக்க வேண்டும் என்பதாம்.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

நீரில் ஓரியாக இருப்பவர் மற்றவரைப் பிடிக்க முயலும் முயற்சியானது மெய்கிழல் போல' அதாவதுத் தொடர்ந்து பிடிக்க முயற்சிக்கும் காட்சி அமைந்திருக்கும். இவ் விளையாட்டில் ஈடுபட்டவர்க்கு வன்ணப்புற கந்தரத்த னார் உரைஓரையாட்டம் என்பதுடன் இவ் வாட்டம் இன்றும் மறையாது 'ஓரி' என்ற பெயரில் வழங்கிவருகின்றது.

**முடிவுரை**: இது போன்ற விளையாட்டுக்கள் சங்க கால மக்களுக்கு உடல் வலிமையையும் மனதிற்கு உறுதியையும் தந்துள்ளன. அது மட்டும் அல்லாமல் சங்ககால மக்களிடையே ஒற்றுமையையும் வாழ்க்கையில் மேம்படுவதற்கான வழியையும் இவ்விளையாட்டுகள் ஏற்படுத்தி தந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியத்தின் மூலம் நம்மால் அறிய முடிகின்றது.

-----------------------------------------

**துணை நூற்பட்டியல்**

**1.**குறுந்தொகை முழுவதும், உ.வே.சா., உ.வே.சா.,பதிப்பகம் சென்னை.
2. நற்றிணை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை.
3. அகநானூறு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர், சென்னை.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணம்

(பா.சங்கீதா, முனைவர் யு.துர்காதேவி)

Date of submission : 23-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name : Dr. Y.Durkadevi
Email : dukrkadevi.sl@vistas.ac.in
Pages : 37 - 42

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியர் வகுத்த பாஅ வண்ணம், தாஅ வண்ணம் தொடங்கி, முடுகு வண்ணம் ஈறாகவுள்ள இருபது வண்ணக்கூறுகள் செயங்கொண்டாரின் கலித்தாழிசைகளில் எங்ஙனம் உருப்பெற்றுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக, தொல்காப்பியச் செய்யுளியல் நெறிமுறைகள் சிதையாமல் பரணி இலக்கியத்தில் பேணப்பட்டுள்ள மரபுத் தொடர்ச்சியையும், போர்க்களக் காட்சிகளைச் செவிப்புலன் வழி உணரச் செய்யும் செயங்கொண்டாரின் ஒலியியல் நுட்பங்களையும் சான்றாதாரங்களுடன் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் அடிப்படை இலக்காகும்.

**திறவுச்சொற்கள்**

வண்ணம் – எழுத்து – சொல் -தொடை - ஓசை - பாஅ தாஅ -வல்லிசை மெல்லிசை - அகப்பாட்டு புறப்பாட்டு வண்ணம்.

**முன்னுரை**

"ஒலி மரபினை ஒழுங்குற அமைப்பதே வண்ணம்" என்பது தமிழ் இலக்கண மரபு. தொல்காப்பியச் செய்யுளியலில் குறிப்பிடப்படும் இருபது வகை வண்ணங்கள், ஒரு செய்யுளின் ஓசை நயத்தையும் உணர்ச்சிச் செறிவையும் தீர்மானிக்கும் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. 'பரணிக்கோர் செயங்கொண்டார்' எனப் போற்றப்படும் கலிங்கத்துப்பரணி, போர்க்களத்தின் வீரத்தையும், சோழர்களின் வரலாற்றையும் பாடுவதோடு மட்டுமல்லாமல், ஒலியியல் நுட்பங்களை முறையாகக் கையாண்ட ஒரு இசைக்கருவூலமாகவும் திகழ்கிறது.

**வண்ணம் - விளக்கம்**

தமிழ் இலக்கணத்தில் வண்ணம் என்பது செய்யுளின் ஓசை வேறுபாடுகளைக் குறிக்கும். ஒரு செய்யுளைப் படிக்கும்போது அல்லது பாடும்போது ஏற்படும் சந்த வேறுபாடுகளையும், ஓசை நயங்களையுமே 'வண்ணம்' என்கிறோம். இவ்வண்ணம் அழகு, சந்தம், இசை, நிறம், ஓசை நன்மை, சித்திரம், மாலை, சிறப்பு, இனிமை எனப் பல பொருள்களைக் கொண்டது.

"தலைவன் ஒருவனை வாழ்த்திப் புகழுமிடத்தும், சான்றோர் குறிப்புகளை விளக்கிச் சொல்லுமிடத்தும் இசைத்துறைக்கு உரிய வண்ணங்கள் அமையப் பாடுதல் ஏற்றது"

என்று தொல்காப்பியம் புறத்திணையியலில்விளக்குகிறது.தொல்காப்பியம் செய்யுளியலில் கூறப்பட்டுள்ள 34 உறுப்புகளில் வண்ணமும் ஒன்று.

**வண்ணங்களின் வகைகள்**

தொல்காப்பியர், வண்ணங்களின் வகைகளை இருபதாக வகைப்படுத்தியுள்ளதைப் பின்வரும் நூற்பாவின் வாயிலாக அறியலாம்.

**"வண்ணந் தாமே நாலைந் தென்ப" (தொல்.513)**

**அவைதாம்**

**பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**

**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**

**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**

பா.சங்கீதா, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முனைவர் யு.துர்கா தேவி உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை – 117

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**
**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று**
**ஆங்கு என மொழிப அறிந்திசினோரே. (தொல்.514)**

பாஅ வண்ணம் தொடங்கி முடுகு வண்ணம் ஈறாக இருபது வண்ணங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலங்காரிகை வண்ணங்களின் வகைகளை நூறு எனச் சுட்டுகிறது. நச்சினார்க்கினியர் தன் தொல்காப்பிய உரையில் வண்ணம் குறித்து விளக்கும்போது, "அவை நூறும் பலவுமாக வேறுபடக் கொள்ளினும் இவ்விருபதின்கண்ணே யடங்கும்; 'வேறு சந்த வேற்றுமை செய்யா' என்றற்கு, அது நுண்ணுணர்வுடையோர்க்குப் புலனாம் என்று உணர்க" என்று குறிப்பிட்டுள்ளார்.

**வண்ணங்களின் பகுப்பு**

தொல்காப்பியர் கூறியிருக்கும் இவ்விருபது வண்ணங்களை, 'எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை' என ஐவகையாகப் பாகுபடுத்தலாம் எனத் தமிழண்ணல் குறிப்பிட்டுள்ளார். அவை,

**எழுத்து அடிப்படையில் வண்ணம் (7)**

வல்லிசை வண்ணம்,மெல்லிசை வண்ணம்,இயைபு வண்ணம்,நெடுஞ்சீர் வண்ணம்,குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம்.

**சொல் அல்லது சீர் அடிப்படையில் வண்ணம் (3)**

பாஅ வண்ணம், எண் வண்ணம்,ஏந்தல் வண்ணம்

**தொடை அடிப்படையில் வண்ணம் (2)**

தாஅ வண்ணம்,அளபெடை வண்ணம்

**ஓசை அடிப்படையில் வண்ணம் (6)**

ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம் ,அகைப்பு வண்ணம்,தூங்கல் வண்ணம், உருட்டு வண்ணம்,முடுகு வண்ணம்.

**நடை அல்லது வடிவ அடிப்படையில் வண்ணம் (2)**

அகப்பாடல் வண்ணம்,புறப்பாடல் வண்ணம்.

**பாஅ வண்ணம்**

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபது வண்ணங்களில் முதன்மையான வண்ணம் பாஅ வண்ணம் ஆகும். பாஅவண்ணம் சொற்சீர் அடியாகி நூலின்கண் பயின்று வரும்.

**"பாஅ வண்ணம்**
**சொற்சீர்த்து ஆகி, நூற்பால் பயிலும்" (தொல். 515)**

செய்யுளில் வரும் சொற்கள் எல்லாம் சீரான அளவில் அமைந்து வருதல். இத்தகைய நடை பெரும்பாலும் **நூற்பா** எனப்படும் இலக்கணச் சூத்திரங்களில் பயின்று வரும்.

**பரிசில் சுமந்தன கவிகள்**
**பகடு சுமந்தன திறைகள்**
**அரசு சுமந்தன இறைகள்**
**அவனி சுமந்தன புயமும் (கலி.272)**
**கலையினொடும் கலைவாணர் கவியினொடும்**
**இசையினொடும் காதல்மாதர்**
**முலையினொடும் மனுநீதி முறையினொடும் (கலிங். 277)**

என்னும் கலிங்கத்துப்பரணியின் பாடலடிகளில் சொற்சீரடியாய் பாஅ வண்ணம் பயின்று வந்துள்ளது.

**தாஅ வண்ணம்**

இடையிட்டு வந்த எதுகை தாஅ வண்ணமாகும். முதல் அடியில் உள்ள எதுகை, அடுத்த அடியில் வராமல், மூன்றாவது அடியில் அல்லது இடையிட்டு வரும் அடிகளில் அமையும் என்பதை பின்வரும் நூற்பாவின் மூலமாக அறியலாம்.

**தாஅ வண்ணம்**
**இடையிட்டு வந்த எதுகைத்து ஆகும் (தொல்.516)**

'தாஅ' என்பது 'தாவிச் செல்லும்' (இடைவிட்டு) எனப் பொருள்படும். தாவிவரும் துள்ளலோசையும் தாஅ வண்ணம் எனப்படும்.

**அலகில் வெற்றியு முரிமையு மிவையென**
**அவய வத்தினி லெழுதிய வறிகுறி**
**அவையெ னப்பல வடு நிரை யுடையவர்**
**அடிபு றக்கிடி லமரர்த முலகொடிவ்**

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

**வுலகு கைப்படு மெனினும தொழிபவர்**
**உடல் நமக்கொரு சுமையென முனிபவர்**
**உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்**
**ஒருவ ரொப்பவர் படைஞர்கண் மிடையவே**
**(கலிங்.353)**

என்ற இப்பாடலில் 1, 3 ஆகிய பாடல் அடிகளில் அலகில், வுலகு என்னும் சொற்களில் இரண்டாவது எழுத்தாகிய "ல" ஒத்துள்ளதைக் காணலாம். இவ்வாறு இடையிட்டு வந்தால் தாஅ வண்ணம் ஆகும்.

**வல்லிசை வண்ணம்**

வல்லெழுத்துகள் மிகுந்து வருதல் வல்லிசை வண்ணம் ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

**வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே (தொல்.517)**

என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்**
**தொழில்காட்டப் புவன வாழ்க்கைச்**
**செயல்வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்**
**புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம். (கலிங்.1)**

என்ற இப்பாடலில் வல்லிசை வண்ணம் (க, ச, ட, த, ப,ற) பயின்று வருதலைக் காணலாம்.

**மெல்லிசை வண்ணம்**

செய்யுளில் மெல்லின எழுத்துகள் மிகுதியாகப் பயின்று வருதலையே மெல்லிசை வண்ணம் எனத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். இக்கருத்தை

**மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே (தொல்.518)**

என்னும் நூற்பாவிலிருந்து அறிய முடிகின்றது.

**எனத டங்க இனி வளவ துங்கனருள்**
**எனம கிழ்ந்திரவு கனவிடைத்**
**தனத டங்கண்மிசை நகந நடந்தகுறி**
**தடவு வீர்கடைகள் திறமினோ (கலிங்.26)**
**பொருங்கண் வேலிளைஞர் மார்பி னூடுருவு**
**புண்கள் தீரஇரு கொங்கையின்**
**கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு**
**கட்டுமாதர் கடை திறமினோ (கலிங்.56)**

என்ற பாடலடிகளில் மெல்லினங்கள் பயின்று வந்துள்ளதை அறிய முடிகின்றது.

**இயைபு வண்ணம்**

செய்யுளில் இடையின எழுத்துகள் மிகதியாகப் பயின்று வருவது இயைபு வண்ணமாகும் . வல்லின ஓசைக்கும் மெல்லின ஓசைக்கும் இடைப்பட்டு ஒலிப்பது இடையினமாகும். இதனை,

**இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே (தொல்.519)**

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில் ,

**முறுவல் மாலையொடு தா மாலைமுக**
**மலரின் மீதும்முலை முகிழினும்**
**சிறுநி லாவும் அதினமிகுதி லாவும்என**
**வருந வீர்கடைகள் திறமினோ (கலிங்.49)**

என்னும் பாடலடிகளில் இயைபு வண்ணம் பயின்று வருவதைக் காணலாம்.

**அளபெடை வண்ணம்**

ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலித்தல் அளபெடை ஆகும். ஒற்றெழுத்துகள் (ம், ன், ய், ல், ண், ந் ) அளபெடுத்து ஒலித்தலை ஒற்றளபெடை என்பர். உயிர் எழுத்துகள் எல்லாம் அளபெடுத்து ஒலித்தல் உயிரளபெடை ஆகும். செய்யுளில் அளபெடை எழுத்துகள் பயின்று வருதல் அளபெடை வண்ணமாகும்.இதனை

**அளபெடை வண்ணம் அளபெடை பயிலும் (தொல்.520)**

என்னும் தொல்காப்பிய நூற்பா வாயிலாக அறிய முடிகின்றது.

**ஆளைச் சீறுக விற்றுப யன்பொரூஉம்**
**அக் குளத்தில்அ ரசரர்சி ரஞ்சொரி**
**மூளைச் சேற்றில்வ ழுக்கிவி ழுந்திட**
**மொழிபெ யர்ந்தொரு கான்முட மானவும் (கலிங்.145)**

ISSN :
DOI :

என்ற கலங்கத்துப்பரணிப் பாடலடிகளில் உயிர்நெட்டெழுத்து (ரூ(ஊஉ) அளபெடுப்பதைக் காண முடிகின்றது.

**நெடுஞ்சீர் வண்ணம்**

பாடலில் உயிர்நெடில் எழுத்துகளும், உயிர்மெய் நெடில் எழுத்துகளும் மிகுதியாகப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும். தொல்காப்பியர் நெடுஞ்சீர் வண்ணம் பற்றி பின்வரும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும் (தொல்.521)**

கலிங்கத்துப் பரணியில் ,

**தேவாசுரம் ராமாயணம் மாபாரம் உளவென்று**
**ஓவாஉரை ஓயும்படி உளதப்பொரு களமே (கலிங்.472)**

என்ற பாடலில் நெடுஞ்சீர் வண்ணம் பயின்று வருதலை அறிய முடிகின்றது.

**குறுஞ்சீர் வண்ணம்**

பாடலில் உயிர்க்குறில் எழுத்துகளும், உயிர்மெய்க் குறில் எழுத்துகளும் மிகுதியாகப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாகும். தொல்காப்பியர் குறுஞ்சீர் வண்ணம் பற்றி பின்வரும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

**குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும் (தொல்.522)**

கலிங்கத்துப் பரணியில் ,

**காலக்கள மதுகண்டருள் இறைவீகடி தெனவே**
**ஆலக்கள முடையான்மகிழ அமுதக்களம் அணுகி (கலிங்.473)**

என்ற பாடலில் குறுஞ்சீர் வண்ணம் பயின்று வருதலை அறிய முடிகின்றது.

**சித்திர வண்ணம்**

பாடலில் நெட்டெழுத்துகளும், குற்றெழுத்துகளும் சேர்ந்து வருதல் சித்திர வண்ணம் ஆகும். இதனை,

**நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே (தொல்.523)**

என்னும் நூற்பாவில் பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

**முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட**
**முன்னொருநாள் வாளபயன் முனிந்தபோரின்**
**வெள்ளாறும் கோட்டாறும் புகையான்மூட**
**வெந்தவனம் இந்தவனம் ஒக்கில்ஒக்கும்(கலிங்.95)**

என்னும் பாடலடிகளில் சித்திர வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**நலிபு வண்ணம்**

செய்யுளில் ஆய்த எழுத்துப் பயின்று வருதல் நலிபு வண்ணம் ஆகும். இதனை,

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் (தொல்.524)**

என்னும் நூற்பா வழி பதிவு செய்துள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

**இருப்புக்க வந்தத்தின் மீதேற**
**லும்சூரர் எஃகம்பு தைக்க இறகைப்(கலிங்.489)**
**குறைத்த லைத்துணி கொல்லன் எஃகெறி**
**கூடம் ஒத்தமை காண்மினோ(கலிங்.497)**

என்னும் பாடலடிகளில் நலிபு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**அகப்பாட்டு வண்ணம்**

ஒரு செய்யுளின் பொருள் முடிவு பெறாதது போலத் தோன்றி, பின்னர் முழுமையாக முடிந்து நிற்பது "அகப்பாட்டு வண்ணம்" ஆகும். பாடலின் இறுதி அடி, ஏகாரத்துடன் முடியாமல், பாடலின் இடையிலுள்ள அடிகளைப் போன்றே ஓசையுடன் வருவது இதன் சிறப்பாகும். இதனை,

**முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே(தொல்.525)**

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில்,

**கானரணும் மலையரணும் கடலரணும்**
**சூழ்கிடந்த கலிங்கர் பூமி**
**தானரண முடைத்தென்று கருதாது**
**வருவதும் தண்டு போலும் (கலிங்.377)**

என்னும் பாடலடிகளில் அகப்பாட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**புறப்பாட்டு வண்ணம்**

ISSN :
DOI :

ஒரு செய்யுளின் பொருள் முடிந்தது போலத் தோன்றி, பின்னர் பொருள் முழுமையாக முடியாமல் தொக்கி நிற்பது "புறப்பாட்டு வண்ணம்" ஆகும். இதனை,

**முடிந்தது போன்று முடியாத தாகும் (தொல்.526)**

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**என்றிவையு ரைத்தலுமே னக்கெதி**
**ருரைக்க இமை யோர்களுந நடுங்கு வர்புயக்**
**குன்றிவைசெ ருத்தொழில் பெறாதுநெடு**
**நாண்மெலிவு கொண்டபடி கண்டு மிலையோ**
**(கலிங்.390)**

என்னும் பாடலடிகளில் புறப்பாட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**ஒழுகு வண்ணம்**

ஒரு செய்யுளில் பயின்று வரும் ஓசையானது ஓடைநீர் ஒழுகிச் செல்வது போல் அமைவது ஒழுகு வண்ணமாகும். இதனை

**ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும் (தொல்.527)**

என்னும் நூற்பா வழி விளக்குகிறார் தொல்காப்பியர். கலிங்கத்துப்பரணியில்,

**எடுமெடு மெடுமென வெடுத்ததோர்**
**இகலொலி கடலொலி இகக்கவே**
**விடுவிடு விடுபரி கரிக்குழாம்**
**விடும்விடும் மெனுமொலி மினைக்கவே**
**(கலிங்.404)**

என்னும் பாடலடிகளில் ஒழுகு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**எண்ணு வண்ணம்**செய்யுளில் எண்ணுப் பெயர்கள் அல்லது எண்ணும் பொருளில் வரும் சொற்கள் பயின்று வருதல் எண்ணு வண்ணம் ஆகும். எண் பயின்று வருதல் எண்ணு வண்ணம் என்பதனை,

**எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும் (தொல்.529)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் மொழிந்துள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**உகநான்கும் பொருள்நான்கும் உபநிடதம் ஒரு நான்கும்**
**முக நான்கும் படைத்துடைய முதல்வனையாம் பரவுதுமே**
**(கலிங்.5)**

**நிலநான்கும் திசைநான்கும் நெடுங்கடல்கள் ஒரு நான்கும்**
**குல நான்கும் காத்தளிக்கும் குலதீபன் வாழ்கவென்றே**
**(கலிங்.6)**

என்னும் பாடலடிகளில் எண்ணு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**அகைப்பு வண்ணம்**

செய்யுளில் குறில் எழுத்துகள் மற்றும் நெடில் எழுத்துகள் இரண்டும் மாறி மாறி அமைந்து ஓர் ஒழுங்கின்றி ஓசை அறுத்தறுத்து பயின்றுவருவது அகைப்பு வண்ணமாகும் இதனை,

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்**
**(தொல்.530)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**வேழநிரை என்றமலை யெங்குமிடை**
**கின்ற அயில் வென்ற அப யன்ற னருளால்**
**வாழஅப யம்புகுது சேரனொடு**
**கூடமலை நாடடைய வந்த தெனவே (கலிங்.297)**

என்னும் பாடலடிகளில் அகைப்பு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**ஏந்தல் வண்ணம்**

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் வந்து பொருள் சிறந்து நிற்பது ஏந்தல் வண்ணம் ஆகும். இதனை,

**ஏந்தல் வண்ணம்**
**சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும்**
**(தொல்.532)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே**
**போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத**

ISSN :
DOI :

**பருவயிரத் தோளெங்கே எங்கே என்று**
**பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்**
**(கலிங்.484)**

என்னும் பாடலடிகளில் ஏந்தல் வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**உருட்டு வண்ணம்**

செய்யுளில் குறிலிணை எழுத்துகள் இணைந்து வந்து உருட்டும் ஓசை பெற்று வருவது உருட்டு வண்ணம் ஆகும். இதனை,

**உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்**
**(தொல்.533)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் விளக்கியுள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**பகடி டந்துகொள்ப சுங்குருதி இன்று தலைவீ**
**பலிகொள் என்றகுரல் எண்டிசைபி ளந்துமிசைவான்**
**முகடி டந்துரும் எறிந்தெனமு ழங்க உடனே**
**மொகுமொ கென்றெலிமி குந்தமரு கங்கள் பலவே**
**(கலிங்.114)**

என்னும் பாடலடிகளில் உருட்டு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**முடுகு வண்ணம்**

செய்யுளில் நான்கு சீர்களுக்கு மேல் குறிலிணைச் சொற்கள் பயின்று வருதல் முடுகு வண்ணம் ஆகும். இதனை,

**முடுகு வண்ணம் முடிவுஅறியாமல்**
**அடியிறந்து ஒழுகி அதனோர் அற்றே (தொல்.534)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். கலிங்கத்துப்பரணியில்,

**துவர்நி றக்களிற்று உதிய ரேவலின்**
**சுரிகை போர்முகத்து உருவி நேரெதிர்த்து**
**அவர் நிணத்தொடுஅக் குருதி நீர்குழைத்து**
**அவர்க ருந்தலைச் சுவர டுக்கியே**
**(கலிங்.99)**

என்னும் பாடலடிகளில் முடுகு வண்ணம் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

**முடிவுரை**

கலிங்கத்துப்பரணியில் தொல்காப்பிய வண்ணங்கள் குறித்த இந்த ஆய்வு, பழம்பெரும் இலக்கண நெறிமுறைகள் பிற்கால இலக்கிய வகைமைக்குள் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது. தொல்காப்பியர் வகுத்த இருபது வண்ணங்களில் ஒரூஉ வண்ணம் மற்றும் தூங்கல் வண்ணம் நீங்கலாக ஏனைய பதினெட்டு வண்ணங்களும் கலிங்கத்துப்பரணியில் பயின்று வந்துள்ளதை இவ்வாய்வு மெய்ப்பிக்கிறது.

-----------------------------------

**துணைநூற் பட்டியல்**

1) இளம்பூரணர், (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1967.
2) புலவர் பி.ரா. நடராசன் - கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும், திருமகள் நிலையம், சென்னை -17, 2017.
3) அமிதசாகரர் - யாப்பருங்கலக் காரிகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 28, 1940.
4) சோம.இளவரசு - இலக்கண வரலாறு மெய்யப்பன் பதிப்பகம்,2023.
5) இளங்குமரன் - இரா, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2020

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# வள்ளலார் காட்டும் அரசியல் அறங்கள்

(திருமதி. S. அனுராதா, முனைவர் பொ. குபேந்திரன்)

Date of submission : 23-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.P.Gubendiran
Email : gubendirensl@vistas.ac.in
Pages : 43 - 46

**ஆய்வுச் சுருக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதலாளித்துவச் சிந்தனைகள் உலக மக்களை இன்னலுக்குள்ளாக்கியிருந்தச் சூழலில் பாமரமக்களுக்கு வழ்வியல் அறங்களை போதித்தவர் வள்ளலார். அவரின் அறச்சிந்தனைகளை பகுப்புமுறை, விளக்கமுறை ஆய்வுக்கொண்டு விளக்கப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்**: பசித்திரு, தனித்திரு, விழித்திரு

**முன்னுரை:**

கருணைக்கடல் வள்ளல் பெருமான் சுத்த சன்மார்க சங்கத்தின் வாயிலாக பக்தர்களுக்கு மகத்தான மூன்று மந்திரங்களை உபதேசித்து உள்ளார். இதனை மானிடர்கள் கை கொண்டு ஒழுகினால் நல் ஆற்றலுடனும், அறிவுடனும் இருக்க முடியும். திரு என்றால் தெய்வத்தன்மை பொருந்திய மரியாதைக்குரிய என்று பொருள் படும். ஒருவன் உயரிய நிலைக்கு அதாவது இறைநிலை அடைய வேண்டுமானால் திரு என்னும் நிலையை அடையவேண்டும் என்றால் பசித்திரு, தனித்திரு, விழித்திரு, இன்னம் வாசகத்தில் முதல் எழுத்துக்களை சேர்க்க கிடைப்பது 'பதவி" உயர்ந்த இிறிலை பதவி என்பதால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து பசித்திரு, தனித்திரு, விழித்திரு, என்றாயிற்று. வள்ளலார் அருளிய உபதேசக்குறிப்புகளை பின்பற்றி வாழ்க்கையை மேம்படுத்துவது குறித்து இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

**பசித்திரு:-**

நாம் பசியில்லாமல் இருக்க வேண்டும் என்பது தானே இவரது விருப்பம் பசியில்லா வீடு தேசம் உருவாக்க வேண்டும் என்பது தானே கனவாக இருந்தது பின் ஏன் இவர் பசித்திரு என்றார். பசியில் இருவகையான பசி இருக்கிறது அவற்றுள் ஒன்று உடலில் ஏற்படக்கூடிய வயிற்றுப்பசி மற்றொன்று நமது ஆன்மாவிற்கு ஏற்படுகின்ற ஆன்மபசி என்பதாகும். இவ்விரண்டனுள் முதலில் உடலில் ஏற்படக்கூடிய பசி குறித்துக் காண்போம்.

**1.உடலில் ஏற்படக்கூடிய பசி:-**

ஏழை பணக்காரர் யாராக இருந்தாலும் உடலில் ஏற்படும் ஓர் நிகழ்வு 'பசி" இவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பேதமின்றி பசி என்று வந்தவுடன் வாங்கி உண்பதென்பதை நாம் இங்கு காண முடியும். அந்த பசியை ஓர் விதமான நோய் என்று குறிப்பிடுகின்றார். இந்த பசி என்றும் நோயின் அளவறிந்து நம் உணவு உண்ண வேண்டும் இதை நம் வள்ளலார் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். பசிக்காமல் உணவு உண்ணக் கூடாது, அளவோடு உணவினை உண்ணவேண்டும். உடல் கேட்கும் அளவு மட்டுமே நாம் உணவு உண்ண வேண்டும் ஓர் உணவு செறித்தபிறகு தான் நாம் அடுத்த உணவை உண்ண வேண்டும். பசி உணர்ந்து உண்ணும் போது தான் ஓர் மந்தமில்லாத தன்மை நமக்கு ஏற்படும் அதுமட்டும் இன்றி தூக்கம் சோம்பல் முதலிய நோய்களும் நம்மை தாக்காமல் தற்காத்துக் கொள்ள முடியும்.

**திருமதி. S. அனுராதா, முனைவர்பட்ட ஆய்வாளர்,**
**முனைவர் பொ,குபேந்திரன், உதவிப் பேராசிரியர்& நெறியாளர்.**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

நமக்கு சன்மார்க்க நெறியை காட்டிய ஒர் அற்புதமான மகான் வடலூர் இராலிங்க வள்ளலார் ஆவார். இந்த ஒரு ஞானி ஏதோ பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் அல்ல. ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னமே வாழ்ந்தவர் இவர். ஏழ்மைக்கும் இறைவனை அடைவதற்கும் எந்தவிதமான தடையும் இல்லை என்று வாழ்ந்து காட்டியவர் நம் வள்ளலார். இந்த உலகமக்களுக்கு ஜீவகாருண்யம் என்பதனையும் மரணமில்லா பெருவாழ்வு என்னும் ஒர் உயரிய வாழ்க்கையையும் தர வேண்டும் என்பதற்காக தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார் என்ற சொல்லலாம் அவர் நமக்கு அருளிய தாரக மந்திர சொற்கள் பல இருந்தாலும் அவற்றுள் சில

'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்றும் இந்த ஒர் மந்திரம் வாழ்க்கையில் மனிதர்கள் கடைபிடிக்க வேண்டிய உயர்ந்த நெறிகளுள் ஒன்றான அன்பு கருணை போன்ற ஒழுக்க நெறிகளை முன்னிருத்தி சொல்லப்பட்டுள்ளன. ஒரு மனிதன் தூய்மை உடையவனாக ஆக்குவதற்கு அன்பினால் தான் முடியும்.

இவர் நமக்கு தந்த முக்கியமான சொற்களுள் சில தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்னும் மந்திர சொற்கள் மூலம் அவர் நமக்கு சொல்லும் வாழ்வியல் நெறிகளை பற்றி இக்கட்டுரையில் விரிவாக பார்ப்போம்.

**2.ஆன்மபசி:-**

ஆன்மாவானது பல பிறவிகள் எடுத்து துன்பப்பட்டு துன்பப்பட்டு நிறைவு இல்லாமல் மேலும் மேலும் இம்மனித பிறவி எடுக்கிறது. அந்த பசிக்கு நம்

தீனிபோட வேண்டும். ஆன்மபசிக்கு எப்படி நிறைவு தரும் (அமுது) கொடுப்பது என்றால் மனதை ஒழுக்கநெறியில் இறைநெறியில் செலுத்தவும் ஆன்மபசிக்கு உணவு அளிக்கவும் எத்தனையோ ஞானப்பாக்கள் நம் இலக்கியங்களில் மண்டிக்கிடக்கின்றன.

ஆன்மபசிக்கு உணவாவது இறைஅருளை நாடிச் செல்வது, தேவாரம், திருவாசகம் போன்ற வாசகங்களைப் படிப்பது, அடியார்களுக்கு தொண்டு செய்வது,

இறைவனுக்கு தொண்டு செய்வது ஆலயங்களுக்குசென்று உடலாலும் உள்ளத்தாலும் சேவை செய்வது இவை அனைத்தும் நம் ஆன்ம பசியை போக்குவதற்கு உண்டான செயல்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். வாழ்நாள் முழுவதும் நம்வயிற்று பசியோடு மட்டுமே வாழக்கூடாது ஆன்மபசியோடும் வாழவேண்டும் அந்த ஆன்மபசியோடும் வாழ்தல் வேண்டும் அவ்வாறு வரும் ஆன்மபசியை நாம் போக்கி கொண்டு மரணமில்லாது பெருவாழ்வு வாழலாம் எனவே தான் வள்ளலார் பசித்திரு என்று குறிப்பிட்டுள்ளார்.

நான் பசித்த போதெல்லாம்
தான் பசித்ததாகி
நல்லுணவு கொடுத்தென்னைச்
செல்வம் உறவளர்த்தே
ஊன்பசித்த இளைப்பொன்றும்
தோன்றாத வகையை
வள்ளியததன் அமுதெனக்கிங்
கவந்தளித்த ஒளியே

-உடல் பசியை ஒரு பொருட்டாக நினைக்காததால் தான் அவரது உள்ளம் ஞான ஒளியை கண்டது. பரம்; பொருளை உணர்ந்தது.

**தனித்திரு**

எல்லோம் கூடிவாழ்தலை வலியுறுத்தி இருக்கும் போது இவர் மட்டும் ஏன் தனித்திரு என்று உபதேசித்து உள்ளார். தனிமை என்பது இரண்டாக பார்க்கப்படுகிறது அவற்றுள் ஒன்று உடலை தனிமை படுத்தி வைத்துக் கொள்ளுதல் மற்றொன்று மனதை தனிமை படுத்தி வைத்துக் கொள்ளுதல் என்று இரண்டு வித தனிமைகளை பற்றி இங்கு காண்கிறோம்.

**1.உடலை தனிமைபடுத்துக் கொள்வது:-**

உடலை எப்படி தனிமைபடுத்துக் கொள்வது என்றால் தியானம்.

ISSN :
DOI :

தியானம் அல்லது யோகம் இதன் மூலம் நம் உடலை தனிமைபடுத்தி நமது என்ன அலைகளை தூய்மைபடுத்து மனதை தூய்மைபடுத்தி வைத்துக் கொள்வதினால் மரணமில்லா பெருவாழ்வானது நமக்கு வாய்கப் பெறும் என்று வள்ளல் பெருமானார் குறிப்பிடுகிறார்.

'உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'

என்னும் திருமூலரின் வரிகளுக்கு ஏற்ப உடலை நன்முறையில் பேணிகாப்பதன் மூலம் உயிர் என்னும் ஆன்மாவை அடைய முடியும். தீயபழக்கங்களை மது உண்டல், புலால் உண்ணுதல், போதை பொருட்கள் மற்றும் அதிகப்படியான தேவையற்ற அளவுக்கு உணவு கொடுத்து உடலை அழிக்காமல் பாதுகாத்தல்.

**2.உள்ளத்தை தனிமைபடுத்துதல்:-**

'தாமரை இலை தண்ணீர்போல" பந்தம், பாசம், சொந்தம் என்னும்

எல்லாவற்றோடும் ஒன்றி பிணைந்து இல்லாமல் சற்று பற்றற்று இருந்தேமே ஆனால் அடுத்த பிறவி என்பதற்கான வித்து அங்கு இல்லாமல் போய்விடும். மரணமில்லா பெருவாழ்வினை அங்கு அடைய முடியும். வாழும் போதே நம் இன்பமும் அடைய முடியும்.

இவை இரண்டுமே விழிப்பு நிலையில் எப்போது இருக்கும் என்றால் நாம் தெளிவுடன் இருக்கும் போது தான். நம் மனம் நம் விழிப்பு நிலையில் இருந்தால் தான் நம்புலன்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்கும். மனமது தூங்கிவிட்டால் புலன் தன்வழியே வேலைசெய்ய ஆரம்பித்து விடும் கோபம், ஆசை பொறாமை போன்ற குணங்கள் நம்மை ஆட்கொள்ளும். அவ்வாறு நிகழும்போது நம்மனது விழித்திருந்தால் மனமானது இதுதவறு என்று நம்மை கட்டுப்படுத்தினால் நாம்

அடக்கத்துடன் இருக்க முடியும். மணமானது தூங்கி இருந்தால் சில தீய குணங்களால் ஆட்கொள்ளப்பட்டு அல்லல்படுவோம். எனவே விழிப்புநிலை என்பது அவசியமாகிறது.

'தூங்குகற் என்கிறாய் தூங்குவனோ எனது
துரைவரும் ஒர்தருணத்தில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
என்னுடைத் தூக்கம்எனலாம் நின்னுடையதாக்கி
எங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகந்தோழி
என்னிரு கண்மணி அணையார்எனை அணைந்த உடனே
ஓங்குறவே நான் அவரைக் கவந்தவரும் நானும்
ஒன்றானபின்னர் உளை எழுப்புகின்றேன் உவந்தே

வள்ளல் பெருமானார் வாழ்விலேயே அவர் சொல்வது 'பாதிஇரவில் எழுந்து அருளி பாவியேனை எழுப்பி என வள்ளல் பெருமானார் வாழ்கையிலேயே கடவுள் அவரை எழுப்பி ஞானத்தை அடைய வழிதிருத்தம் என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் இறைவனை அடைய வேண்டுமானால் எப்போதும் அகக்கண் விழிப்பு நிலை வேண்டும் என்று சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர் மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவினிடத்தில் மனதை லயம் வைத்து ஆன்மசத்தி பெருகின்ற ஆற்றலை அளிப்பதே தனித்திரு என்பதன் பொருள். மனமானது தனித்து இல்லாவிடில் புற

இன்பங்களில் நாட்டம் கொண்டு மண்ணாசை, பெண்ணாசை ஆகியவற்றில் மதிமயங்கி அலைபாயும் என்கிறார் சும்மா இல்லாத மனம் மயங்கி அலைபாய்வதை வள்ளல் பெருமான் குறிப்பிடும் பாடல்வரிகள்

'மயங்குபுத்தி என்னும் உலக வழக்காளிப்பயலே
வழித்துறைய் தென்றறியாய் வகைசிறிதும் அறியாய்
உயங்கிவிசா ரித்திடவே ஒடுகின்றாய் உணரும்
உளவறியாய் வீணுழைப்பிங் குழைப்பதில் என்பயனொ
வயங்கும்மனம் அடங்கியவா நடங்குகஞ் இலையேல்
மடிந்திடுவேன் கணத்தில் உனை வாய்மை இதுகண்டாய்
இயங்க என்னை அறியாயோ யார்ன என என்றணினையோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கிணிய பிள்ளை நானே

ISSN :
DOI :

மனம் சும்மா இருப்பது இயலாத காரியம் தான், இருந்தாலும் அதனை அடக்கியாளும் திறன் பெற்றால் நற்பயிர்களை பெறமுடியும்.

விழித்திரு

'பசித்திரு, தனித்திரு" என்று உபதேசித்த வள்ளல் பெருமானார் அடுத்தது விழித்திரு என்கிறார். விழித்திரு என்றால் தூங்காமல் கண்விழித்திரு என்;று பொருளல்ல. மனித வாழ்விற்கு தூக்கம் இன்றியமையாதது தான். ஆனால் அளவுக்கு அதிகமாக தூங்கி சோம்பல் உண்டாகி அதனால் நோய் ஏற்படும் அதனால் அளவும் தூங்குதல் அவசியம் என்று குறிப்பிடுகிறார். இவற்றுள் இரண்டு வகை தூக்கம் உண்டு உடல் தூங்குகின்ற தூக்கம் மற்றொன்று மனது தூங்குகிற தூக்கம் என்று இரண்டு வகை உண்டு.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற இந்த மூன்று மந்திரத்தையம் வாழ்க்கையில் கடைபிடிக்க ஆரம்பித்தால் சாதாரணமான மனித நிலையில் இருந்து உயரிய ஞான நிலையை அடைவார் என்பது நிச்சயமான உண்மை.

**முடிவுரை:-**

'பசித்திரு தனித்திரு விழித்திரு எனும் வாக்கு ஆன்மீக ஞானத்திற்கு மட்டுமில்லாது சாதாரண மனிதர்களுக்கும் நன்மை அளிப்பதாகும்.

'மூவகைச் சித்தியின்
முடிபுகள் முழுவதும்
ஆ(ம்) வகை எனக்கு அருள்
அருட்பெருஞ் ஜோதி

கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி - என்ற மூவகை சக்திகளையும், அவற்றின் சூழ்நிலைப் பேறுகளையும் முழுவதுமாக அளித்த அருட்பேரொளி.

----------------------------------------

1. திருவருட்பா, திருவருட்பிரகாச வள்ளலார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை- 17
2. வள்ளலார் ஓர் அறிமுகம், குருசாமி. மா.பா, மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, 1977.
3. வள்ளலார் வாழ்க்கை வரலாறு, பட்டத்தி மைந்தன், கௌரா பதிப்பகம், சென்னை. 2018

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# பாத அழுத்த சிகிச்சையின் வழியில் சிறுநீரகக் கற்களை அகற்றுதல்

(முனைவர் அ.இருதயராஜ்)

Date of submission : 12-04-2026 Date of acceptance : 28-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj
Email : irudhayaraj.sl@velsuniv.ac.in
Pages : 47 - 50

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் அறிவியல் துறையில் முன்னேறியுள்ள இன்றைய காலகட்டத்தில் இயற்கையிலிருந்து விலகியே வாழ்வதால் நோய்கள் பெருகிக் காணப்படுகின்றன. இன்றைய சூழ்நிலையில் ஆரோக்கியம் பெறுதல் என்பது அறிதான உன்றாக உள்ளது. அவ்வகையில் எளியமுறையில் நலமளிக்குமுறையான நுண்ணழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுநீரகக் கற்களை எவ்வாறு அகற்றுவது என்பதைச் செய்முறை ஆய்வு முறையில் விளக்கப்பெறுகின்றது.

**திறவுச்சொற்கள்** நிறுநீரகம், நிறுநீரககுழல் , நிறுநீரகபை

## முன்னுரை

பண்டைய மக்களின் வாழ்வியல் இயற்கையோடு இணைந்ததாக அமைந்திருந்தன. அவர்கள் உடல் அமைப்பு இயற்கையைச் சார்ந்ததாக விளங்கியது. உடல் நலம் பெற உடலில் நுண்ணழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டார்கள். குருதியின் அமில-கார நிலையைப் சீர்ப்படுத்தி, கழிவுகளை வெளியேற்றி முழு உடலைச் சீர்நிலையில் செயல்பட வைப்பதில் சிறுநீரகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இச்சிறுநீரகத்தில் உண்டாகும் கற்களை எவ்வாறு நுண்ணழுத்த முறையில் அகற்றுவது என்பதே இவ்வாய்வாகும்.

## சிறுநீரகக் கற்கள் ஏற்படகாரணம்

சிறுநீர்த்தேக்கம், சிறுநீரின் அடர்த்தி அதிகரித்தல், நீண்ட நாள் உடல் அசைவின்றி படுக்கையிலேயே இருத்தல், உடல் செயல்பாடு குறைந்த வாழ்க்கை முறை, நீரற்ற நிலை (Deydration), வளர்சிதை மாற்றப் பிரச்சனைகள், இரத்தத்தில் கால்சியத்தின் அளவு அதிகரித்தல், உணவில் பியூரின் ஆக்சலேட் கால்சியம் மற்றும் விலங்குப் புரதங்களின் அளவு அதிகமாக இருத்தல் ஆகியவற்றின் காரணத்தால் சிறுநீரகப் பாதையில், சிறுநீரகத்தில் கற்கள் ஏற்படுகின்றன.

## சிறுநீரகக் கற்கள் உள்ளதற்கான அறிகுறிகள்

இதனால் சிறுநீரகம் மற்றும் சிறுநீரகப்பாதையில் வலி, இடுப்புப் பகுதியில் ஆழ்ந்த தீவிரக் கடுமையான வலி, இடுப்பின் பக்கங்கள் மற்றும் தொடை அல்லது பிறப்புறுப்புப் பகுதியில் கீழ்நோக்கி வலி பரவுதல், குமட்டல், வாந்தி, உடல் வெளுத்துக் காணப்படுதல் (Pallor), இரத்த அழுத்தம் மற்றும் நாடித்துடிப்பு அதிகரித்தல், அடிக்கடி சிறுநீர் கழிக்கும் தன்மை, சிறுநீரில் இரத்தம் காணப்படுதல், காய்ச்சல் மற்றும் குளிர்காய்ச்சல். இரத்தத்தில் யூரியா. கிரியேட்டனின், யூரிக் அமிலங்கள் மற்றும் பொட்டாசியம் கூடுதலாக இருத்தல் போன்ற நோய்கள் கணப்படுகின்றன.

## சிறுநீரகக் கற்களைக் கண்டறிதல்

உடலின் உள்ளுறுப்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உடலின் வெளித்தோற்றம் விளங்கியதைத் தமிழர்கள் அறிந்து வாழ்ந்தார்கள். உடலில் அமைப்பு, நிறம், உடலில் ஏற்படும் மணம், உடல் தோற்றத்தின் தன்மை ஆகியவற்றைின் அடிப்படையில் நோய்களின் பாதிப்பையும் நிலையினையும் கண்டறிந்தனர்.

முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :


சிறுநீரகப் பாதையில் கற்கள் எங்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை கையின் கட்டைவிரல் நுனிப்பகுதிக்கொண்டு தடவிப்பார்த்து கண்டறியவேண்டும். கற்கள் பெரிதாக இருப்பின் எவ்வடிவத்தில் அமைந்துள்ளது என்பதையும் கண்டறியவேண்டும்.

**சிகிச்சைக்கான புள்ளிகள்**


சிறுநீரகம் , சிறுநீரக் குழல், சிறுநீர்ப் பை, ஆகிய புள்ளிகளில் சிகிச்சை அளிக்கவேண்டும்

### பாதத்தில் சிகிச்சை அளிக்கும் இடம்


கலிபோர்னியாவின் ரிஃப்ளெக்சாலஜி சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் உலக ரிஃப்ளெக்சாலஜி அறக்கட்டளையின் துணைத் தலைவராகவும் அமெரிக்காவின் ரிஃப்ளெக்சாலஜி சங்கத்தின் இயக்குநர்கள் குழுவில் பணியாற்றுகின்ற. ரிஃப்ளெக்சாலஜியில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமும் மருத்துவப் பயிற்சியின் பின்னணியும் கொண்ட ஸ்டீஃபனி சபௌஞ்சியன் (Stefanie Sabounchian) படத்தில் உள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.




நிரப்பு மருத்துவத் துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள டெனிஸ், 60,000 க்கும் மேற்பட்ட சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதாக மதிப்பிடுகிறார். அனைத்து வகையான மசாஜ், ஆஸ்டியோபதி, அரோமாதெரபி, ரிஃப்ளெக்சாலஜி, இந்திய தலை மசாஜ், கிரானியோ-சாக்ரல் சிகிச்சை மற்றும் பிற சிகிச்சைகளில் அவர் விரிவாகப் பயிற்சி பெற்று ஒரு திறமையான பயிற்சியாளராகவும், 1988-2017 வரை அவர் தனது சொந்த நிரப்பு மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் இருந்த டெனிஸ் வவெல்லோ பிரவுன் ரிஃப்ளெக்சாலஜிக்கான புள்ளிகளைப் படம் 4, 5, 6, 7 உள்ளவாறு குறிப்பிடுகின்றார்.




ஐக்கிய நாடுகளில் இருந்து கொண்டு 24 மொழிகளில் ரிஃப்ளெக்சாலஜி வெளியிட்ட, மினசோட்டா பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் நடத்தப்பட்ட ஒரு எஃப்.எம்.ஆர்.ஐ ரிஃப்ளெக்சாலஜி ஆராய்ச்சி திட்டத்தில் நரம்பியல் விஞ்ஞானிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்ற பார்பரா மற்றும் கெவின் குன்ஸ் ஆகியோர் ரிஃப்ளெக்சாலஜிக்கான புள்ளிகளைப் படத்தில் உள்ளவாறு குறிப்பிடுகின்றார்கள்.





உடற்கூறியல் உடலியல் மற்றும் நோயியல் அத்துடன் ரிஃப்ளெக்சாலஜி (reflexology) போன்ற ஆரோக்கியம் மற்றும் நலம் சார்ந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த ரூத் ஹல் உடலைச் சமநிலைப்படுத்தி தன்னைத்தானே


Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :


குணப்படுத்த ஊக்குவிக்கும் ஒரு மென்மையான, ஊடுருவாத சிகிச்சைக்கான புள்ளிகளை புள்ளிகளைப் படத்தில் உள்ளவாறு குறித்துள்ளார்.




மேற்கண்டவற்றின் அடிப்படையிலும் சுமர் ஐம்பது ஆண்டுகள் சிகிச்சை அளித்தலின் விளைவாகவும் உடல்நலக்குறைவுள்ளவர்களின் பாதங்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகளின் அடிப்படையிலும் பாதங்கள் உடலின் இயக்க உறுப்புகளுக்கான புள்ளிகளை அடையாளம் காண முடிகின்றன.




சிறுநீரகங்கள் இரத்தத்தை வடிகட்டி, கழிவுகளை அகற்றி உடலின் திரவ சமநிலையைக் கட்டுபடுத்தி அதன் மூலம் எலக்ரோலைட்டுகளின் அளவை பாராமரிக்கின்றன. உடலின் உள் சூழலைச் சீராகவும் வசதியாகவும் வைத்திருக்கும். இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தின் உள்புற மையத்தில் அட்ரினல் சுரப்பிக்கான புள்ளியின் கீழ் படம் 3 உள்ளவாறு இரு பாதங்களிலும் அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.




சிறுநீர்க் குழாய் மேல் பகுதி வயிற்றுப் பகுதியிலும், கீழ் பாதி இடுப்புப் பகுதியிலும் அமைந்துள்ளது. சிறுநீர் குழாய் சுமார் 20 முதல் 30 செ.மீட்டர் நீளம் இருக்கும். சிறுநீர் குழாய் 3-லிருந்து 4 மி.மீ அகலம் கொண்டது. இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தின் உட்புறத்தின் மையத்தில் சிறு நீரகப் புள்ளியிலிருந்து தொடர்ந்து குழல் போன்ற அமைப்பில் இடது பாதத்தில் இடது புறமாகவும் வலது பாதத்தில் வலது புறமாக வளைந்து படம். 4 உள்ளவாறு இரு பாதங்களிலும் அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.





சிறுநீரகப் பை என்பது ஒரு வெற்றுத் தசை உறுப்பு ஆகும். இது சிறுநீரகங்களில் இருந்து சிறுநீரைப் பெற்றுச் சேமித்து சிறுநீர் கழிக்கும் பொழுது சிறுநீர் பையின் தசைகள் அழுத்தப்பட்டுச் சிறுநீரை வெளியேற்றுகிறது. இவ்வுறுப்புக்கான புள்ளி பாதத்தில் உள்புறப் பக்கவாட்டில், குதிகாலின் சற்று மேலே மூட்டுப் பகுதியின் அருகில் குவிந்த பகுதியில் படம். 5 உள்ளவாறு இரு பாதங்களிலும் அமைந்துள்ளது என்பது சிகிச்சை அளித்தலின் விளைவால் கிடைக்கப்பெற்றது.

ISSN :
DOI :


**பாதத்தில் சிகிச்சை அளிக்கு முறைகள்**

சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கு மேலே கூறப்பட்ட சிகிச்சைக்கான புள்ளிகளில் சிகிச்சை அளிக்கும் முறைகள். சிறுநீரகப் பாதையில் எப்பகுதில் கற்துகள்கள் தேங்கியுள்ளன என்பதையும் எவ்வடிவத்தில் உள்ளது என்பதையும் கண்டறியவேண்டும். கற்கள் பெரியதாக இருப்பின் அவற்றை சிகிச்சைக்கான கருவிக்கொண்டு 100 விழுக்காடு அழுத்தம் கொடுத்து அவற்றை துகள்களாக மாற்றவேண்டும். உடைத்து துகள்களாக மாற்றியபின் படம் 1மற்றும் 2 உள்ளவாறு சிறுநீரகம்,

**படம்1** சிறுநீரகம்




படம் 2 **சிறுநீர்ப்பை**




சிறுநீரகக் குழலுக்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளிக்கவேண்டும்.பின்னர்2 லிட்டர் தண்ணீர் அருந்தவேண்டும்.

**முடிவுரை**

❖ சிறுநீரகத்திற்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பது ஆய்வில் கிடைக்கப்பெற்ற முடிவாகும். இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

❖ சிறுநீரகக் குழலுக்கான புள்ளியில் 75விழுக்காடு அழுத்தம் கொடுத்து மேலிருந்து கீழ்நோக்கியவாறு சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றது. இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

❖ சிறுநீர்ப்பைக்கான புள்ளியில் 100விழுக்காடு அழுத்தம் கொடுத்து வலது காலில் வலதுபுறம் நோக்கியவாறும் இடதுகாலில் இடதுபுறம் நோக்கியவாறும் சிகிச்சை அளித்தால் நிறைவான விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றது. இரு கால்களிலும் சமமான அழுத்தம், ஹார்மோன்களைச் சமநிலைப்படுத்த உதவும்.

---------------------------------------

**துணைநூற் பட்டியல்**

1. Stefanie Sabounchian, **Press Here Reflexology- For Beginners,**
2. Denise Whichello Brown, **The Reflexology Healing Handbook,** Quantum Publishing Ltd. The Old Brewery, 6 Blundell Street, London N7 9BH
3. Kevin andBarbara Kunz, **Hand Foot Reflexology,** 1230 Avenue of the Americas New York, New York 10020
4. Ruth Hull, **The Complete Guide to Reflexology,** ealing Arts Press, One Park Street, Rochester, Vermont 05767
5. Barbara& Kevin Kunz, **complete reflexology for life**1230 Avenue of the Americas New York, New York 10020
6. Mildred Carter, **Healing yourself With Foot Reflexology,**

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# பாரதிதாசனும் திராவிட இயக்கக் கொள்கைகளும்

(முனைவர் ச.பிரியா)

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 51 - 55

**முன்னுரை:**

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக 1920 – ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இயக்கமாக திராவிட இயக்கம் உருவானது .இந்திய விடுதலைக்குப் பின்னர் , தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு அடுத்தப்படியாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் திராவிட இயக்கம்தான். இவ்வலிமை வாய்ந்த இயக்கத்தின் தலைவர்கள், காங்கிரசுத் தலைவர்களை விட பெரிய அளவில் பேராற்றலுடன் எழுத்தையும் பேச்சையும் தங்கள் இயக்கத்தின் பெருங்கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.தமிழ் மொழி வளர்ச்சியிலும் தமிழ் இதழியல் வரலாற்றிலும் வளர்ச்சியிலும் திராவிட இயக்கத்திற்கு பெரும்பங்குண்டு.திராவிட இயக்கத் தலைவர்களின் ஏடுகளும் மேடைகளும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரும்பாங்காற்றின என்றால் அது மிகையாகாது.

திராவிட இயக்கம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, தமிழ் நாட்டில் அன்றைய காலகட்டத்தில் நிலவியிருந்த பல வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடி தமிழ்ச் சமூகத்தினைப் பிராமணர் பிடியிலிருந்தும் , மூடபழக்க வழக்கங்களிலிருந்தும் விடுவிக்க மிகுந்த அளவில் போராடியது; இவ்வியக்கத்தின் தலைவர்கள் பெரும்பாலும் இதழ் ஆசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் , தம்முடைய இயக்கம் சார்ந்த கொள்கைகளைக் கதை, கவிதை, நாடகம்,கட்டுரை, சிறுகதை, நாவல் , தொடர்கதை என பல வடிவங்களில் எழுதி வெளியிட்டனர்.

**ஆய்வு நோக்கம் :**

சமூக மறுமலர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்கு மிகப் பெரிது. இவ்வியக்கத்தின் ஆணி வேராக விளங்கிய சிந்தனையாளர்களில் பாவேந்தர் பாரதிதாசனின் பணியும் போற்றுதற்குரியது. பாரதிதாசனின் கவிதைகளில் திராவிட இயக்கக் கொள்கைகள் பரவி இருப்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திராவிட இயக்கக் கொள்கைகள் – சமூக மறுமலர்ச்சி: தமிழ்ச் சமூக வரலாற்றில் விளிம்புநிலை மக்களுக்காகப் போராடி அவர்கள் வாழ்வு மலரவும், தமிழகத்தில் புரையோடிக் கிடந்த சில களைகளை நீக்கிச் சமூக மறுமலர்ச்சிக்கு வழிகோலிய தன்மையினையும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளாகக் காண முடிகின்றது. அவற்றுள் பார்ப்பணிய எதிர்ப்பு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சாதி - மத எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, வர்ணாசிர தர்ம எதிர்ப்பு,போலி அரசியல், பொய்யான மூட பழக்க வழக்கங்கள்,தேவதாசி முறை எதிர்ப்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கைம்பெண் மறுமணம், கலப்புமணம் ஆதரிப்பு , பெண்ணுரிமை, பெண்களுக்கு கல்வியுரிமை, சொத்துரிமை, ஆண் பெண் சமத்துவம் , தமிழ் மொழி முன்னேற்றம் , தன்மானக் கொள்கைகள் , சுய மரியாதைத் திருமணம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.மேலும் ஒவ்வொரு துறைச் சார்ந்த அறிஞர்கள் எழுதிய பொருளியல், தத்துவம், அறிவியல் , அரசியல், இலக்கியம், குடும்பக் கட்டுப்பாடு கருத்துகளைப் பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது.

முனைவர் ச.பிரியா, உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் : பாரதிதாசன் தமிழின் உயர்வுக்கும் தமிழரின் வாழ்விற்கும் பாடியவர் ; மக்களுக்காக எளிய தமிழில் மாண்புறு கவிதைகள் படைத்தவர் ; பாரதிதாசன் கவிதைப் பரம்பரையைத் தோற்றுவித்தவர் ; திராவிட இயக்கப் பெண் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்கவரான குஞ்சிதம் குருசாமி அம்மையாரே, இவரை தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் ; இவர் தன் மகளுக்காகப் 'பெண் பிள்ளைத் தாலாட்டைப்'' பாடச் செய்தவர்.அதனால் ''ஆண் பிள்ளைத் தாலாட்டும்'' மலர்ந்தது. இவரே 1933- இல் பாரதிதாசன் கவிதைகளையெல்லாம் ஒன்று திரட்டி ''பாரதிதாசன் கவிதைகள்'' என்னும் முதல் தொகுப்பை வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறே பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் திராவிட இயக்கம் வளர்த்தது.

**பகுத்தறிவுச் சிந்தனைகள்:**

திராவிட இயக்கத்தின் முக்கியக் கொள்கையாக இருந்தது பகுத்தறிவுச் சிந்தனைகளே யாகும். பகுத்தறிவு என்பது அறிவுக்குப் பொருந்தாத கருத்துகளை விலக்கி, அறிவுக்கு உகந்த கருத்துகளை ஏற்றுக் கொள்ளுதலை நாம் பகுத்தறிவு என்கிறோம்.அதாவது யார் என்ன கருத்து உரைத்தாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் ஏன்? எதற்கு? என கேள்வி கேட்டு விடைப் பெற வேண்டுமென்கிறது.

பாரதிதாசன் தமது பாடல்களில் பகுத்தறிவுக்கு முதன்மை அளித்தவர். இந்த பகுத்தறிவுக் கொள்கைக்குத் தடையாய் இருப்பவை மூடப்பழக்க வழக்கங்களும், சாதி , மதச் சடங்குகளும் என்பதை உணர்ந்த பாரதிதாசன் அவற்றை உருவாக்கிய பார்ப்பனர்களையும் அடியோடு கடுமையாக எதிர்த்தார்.''பச்சை விளக்காகும் – தம்பி உன் பகுத்தறிவு''என்கிறார். இளைஞர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமானால் தடையில்லாத பச்சை விளக்காக உலகம் இருக்க வேண்டுமென்கிறார்.

**சாதியும் சதியும் :**

பகுத்தறிவுக்கு எதிரானதாக சாதியையும், மதத்தையும் வளர்த்தால் எந்த நாடும் செழிப்படையாது . பகுத்தறிவுக்குப் பொருந்தாத இந்தச் சாதிப் பிரிவை, ஆரியர்கள் தம்மை உயர்த்திக் கொள்ளச் செய்த சதி என்பதை, ''சாதிப் பிரிவு செய்தனர் ; தம்மை உயர்த்துவதற்கே ; நீதிகள் சொன்னாரடி - சகியே ; நீதிகள் சொன்னாரடி '' (பாரதிதாசன் கவிதைகள் : சமத்துவப் பாட்டு ) என்னும் கவிதை வரிகளில் தாங்கள் வகுத்த சாதிப்பிரிவுகளுக்கேற்ப அவர்கள் நீதியையும் வகுத்துக் கொண்டதைக் கடுமையாகச் சாடுகின்றார். சாதியால் தீண்டாமை என்னும் பேய் உருவாக்கப்பட்டதை,

'' தீண்டாமை என்னும் ஒரு பேய் – இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியாக் கண்டோம் – எனில்
ஈண்டு பிற நாட்டில் இருப்போர் – செவிக்கு
ஏறியதும் இச்செயலைக் காறி உமிழ்வார்" - [ஞாயமற்ற மறியல் ]

உலக நாடுகள் எதிலும் இல்லாத இந்த சாதிப்பிரிவினைப் பிற நாட்டினர் கேள்விப் பட்டாலும் காறி உமிழ்ந்து விடுவர் என சாதிப் பிரிவினால் ஏற்படும் கொடுமையையும் சமூகச் சீர்கேடுகளையும் சாடுகின்றார்.

சாதி, மதங்களால் மனிதரில் வேற்றுமை நிலவுவதும் பிரித்தாளும் சூழ்ச்சி நடைப்பெறுவதையும் வன்மையாகக் கண்டிக்கிறார் ''உலகினில் சாதிகள் இல்லை – என் உள்ளத்தில் வேற்றுமை இல்லை'' (பாரதிதாசன் கவிதைகள் : காதல் பாடல் – அவள் அடங்காச் சிரிப்பு) என்றும் '' மதம் வளர்ந்தால் படுபாழாம் நாடு''என்றும் ''மதம் என்னும் சூளையிலே தமிழ் நட்டால் முளையாது'' என்பதால் இந்து மதம் என்னும் பார்ப்பனியதிக்கத்தால் வடமொழியும் சமஸ்கிருதமும் வந்து ஆதிக்கம் பெறுமே யல்லாது தமிழ் தழைக்காது. ஆகவே பார்ப்பனிக் கொள்கைகளையும் சமஸ்கிருதத்தையும் ஒழிக்க வேண்டுமென அறைக்கூவல் விடுப்பதையும் அறியலாம்.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

பார்ப்பனியத்திற்கு எதிரான கண்டனம்: திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதன் முக்கிய நோக்கம் பார்ப்பனியத்தினை எதிர்ப்பதே என" 01-06-1917 – இல் வெளியான திராவிடன் இதழின் முதல் பக்கத்தில் வெளிவந்திருப்பதை அ.மா.சாமி அவர்களும் தம்முடைய நூலில் எடுத்துக்காட்டி இருப்பார்.(தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, அ.மா.சாமி, ப.247) காரணம் அக்காலத்தில் பிராமணர்களே அனைத்து துறைகளிலும் அரசாங்கப் பணிகளிலும் ஆட்சிப் பொறுப்பிலும் இடம் பெற்றிருந்ததே இதற்கு முதன்மைக் காரணமாக அமைகின்றது.

''பணிமனை ஆட்சி பட்டம் யாவும் பார்ப்பா னுக்கே என்று புகன்ற உணரச் செய்தான்''. (பாரதிதாசன் கவிதைகள்- பிரிவு தீது ). முடியாட்சி காலத்திலும் சரி , குடியாட்சி காலத்திலும் சரி பார்ப்பணர்களே முதன்மைப் பெறுவதிலுள்ள சதியைப் பாவேந்தர் கடுமையாகச் சாடுகின்றார்.

''யாமிட்ட சோறுகறி எப்படி என்று நாட்டு மன்னனைக் கேட்டனர் பார்ப்பனர். மேலும் மன்னன் விளம்புவான்; 'தாழ்ந்தவர் தம்மில் ஒன்று சேர்ந்தனர்; உயர்ந்தவர் நாமும் ஒன்று சேர்ந்தோம்'' என்றான் பார்ப்பனர். இப்படி விடுவதும் ஏற்றதல்ல ; தாழ்ந்தவர் போக்கைத் தடுக்க வேண்டும் ; மனுநூல் நாட்டில் வழங்க வேண்டும் ; அதற்குப் பார்ப்பனர் காப்பாற்றப் படுதல் வேண்டும் ; ஆள்வோர் பார்ப்பனர் சொற்படி ஆள வேண்டும்.'' (பாரதிதாசன் கவிதைகள் - கடல்மேற் குழிகள்). ஏனெனில், விளைப்பொருள் விற்கவும்,வளவயல் உழவும்,குளச் சேறு எடுக்கவும், இரும்பு அடிக்கவும்,கரும்பு நடவும் , உப்புக் காய்ச்சவும், தப்பு அடிக்கவும், சுவர் எழுப்பவும், உவர் மண் எடுக்கவும், பருப்புப் புடைக்கவும், செருப்புத் தைக்கவும், மாடு மேய்க்கவும், ஆடு காக்கவும், வழிகள் அமைக்கவும், கழிவடை சுமக்கவும், திருவடி தொழுது நம் பெருமை காக்கவும் , வரும்படி நமக்கு வைத்து வணங்கவும் , நாலாம் வகுப்பு நமக்கு வேண்டுமே'' என்றனர் .

பார்ப்பனர்கள் தங்களின் நிலையை உயர்த்திக் கொள்ள செய்த சதியே சாதி, மதம், சடங்கு, நால்வருண பாகுபாடு என்ற முறைகேடுகள் நிகழக் காரணமாய் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டி பார்ப்பனர்களை எதிர்ப்பதை அறிய முடிகின்றது. இதனைத் தான் திராவிட இயக்கம் வருணாசிரம எதிர்ப்பு என்றது.

திராவிடனும் ஆரியனும் : கேரள நாடு என்றும் ஆந்திர நாடு என்றும் பிரிப்பது கூடாது. இவையெல்லாம் சேர்ந்ததே நம் திராவிட நாடு . அவர்கள் பேசும் மொழிகள் திராவிட மொழிகள் என்பதை, ''கேரளம் ஆந்திரம் சேர்ந்த மொழிகள் திராவிடம் ஆகும் அண்ணே!" (பாரதிதாசன் கவிதைகள் – பிரிவு தீது ) என்று எடுத்துரைப்பதோடு , இவ்வாறு பிரிப்பதெல்லாம் ஆரியர் சூழ்ச்சி என்றும் இவையெல்லாம் நெடுங்காலம் நீடிக்காது; இவர்களை முறியடித்து திராவிடனே நாட்டை ஆளுவான் என்பதை,

**" தன்னினம் மாய்க்கும் தறுதலை யாச்சி சற்றும் நிலைக்காது ; மாளும்.**
**இந்நிலம் திராவிடம் ஆண்டோர் இறந்த நாள் வரலாறு காண்க ;**
**திராவிடர்க் கின்னல் செய்துதன் நன்மை தேடினான் எனிலவன் நாய்தான்".-**
**- (பாரதிதாசன் கவிதைகள்: இனி எங்கள் ஆட்சி )**

என்னும் பாடல் வரிகள், திராவிடனை வீழ்த்திய ஆரியனின் குள்ள நரித்தனத்தை எச்சிலுக்குக் காத்திருக்கும் நாயோடு ஒப்பிட்டுரைக்கிறது.

**கைம்பெண் கொடுமை :**

பெண்கள் இளம் பருவத்தை அடைவதற்கு முன்பாகவே அவர்களுக்கு பாலிய விவாகம் செய்து வைத்து அவர்களைச் சிறு வயதிலேயே கைம்பெண்ணாக்கும் வன்கொடுமையைத் திராவிட இயக்கம் கடுமையாக எதிர்த்தது. கைம்பெண்களின் கொடுமை நிலையினை அறிந்த பாவேந்தர் , அப்பெண்களின்

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

வயதினையும் உணர்வினையும் மதிக்காத ஆணுலகத்தைக் கடுமையாகச் சாடுகின்றார்.

**'' அழகிய பெண்கள் – நமக்கோ**
**அழுகிய பழத்தோல்**
**கைம்மை எனக்கூறி – அப்பெரும்**
**கையினிற் கூர்வேலால்**
**நம்மினப் பெண் குலத்தின் – இதய**
**நடுவிற் பாய்ச்சுகின்றோம்- பெண்களின்**
**சிந்தியை வாட்டுகின்றோம்.**
**மாண்டவர் மாண்ட பின்னர் – அவனின்**
**மனைவியின் உள்ளத்தை**
**ஆண்டையார் காண்பதில்லை – ஐயகோ,**
அடிமைப் பெண்கதியே. -(கைம்பெண் கொடுமை)

என்னும் கவிதை வரிகள் அன்றையச் சூழலிலிருந்த கைம்பெண்களின் கொடுமையினை எடுத்துரைக்கின்றன. குழந்தை மணத்தின் கொடுமையை,

"ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,
தாவாச் சிறுமான் , மோவா அரும்பு,
தாலி அறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி யிருந்திடு கின்றாள்".–

என்னும் பாடலில் திருமணமாகி தாலி அறுத்து கைம்மை நிலையில் தனித்து நின்ற பெண்ணின் நிலை சிறுமி என்ற போது மனம் கணக்கிறது. இளமையான அழகிய பெண்ணுக்கு தள்ளாடும் கிழவனை மணமுடித்து வைக்கும் மூடத் திருமணத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறார்.

**"மண்ணாய்ப் போக, மண்ணாய்ப் போக,**
**மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக,**
**சமூகச் சட்டமே, சமூக வழக்கமே''- (மேலது)**

என்னும் கவிதை வரிகளில் , மூடத் திருமணத்தை எதிர்த்து, இழிவான சமூகச் சீர்கேடுகளை எதிர்த்துப் பெண்களுக்காகக் குரல் கொடுக்கின்றார். இவ்வாறாக தமிழ்ச் சமூகத்தில் ஊடுருவிக் கிடந்த பழைய மூடப்பழக்க வழக்கங்களுக்கும், பெண்களுக்கான கொடுமைகளுக்கும் தம் பாடல் வாயிலாகவும், இதழ்கள் வாயிலாகவும் புரட்சிக்கரமான கருத்துகளைச் சமூகத்தில் விதைத்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இவர் தம் கவிதைகள் இன்புறுத்தும் நோக்கத்தை மட்டுமே கொள்ளாமல், சமூகத்தின் எழுச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அறிவுறுத்தும் கவிதைகளையும் அளிக்கும் நோக்கில் படைக்கப் பட்டுள்ளன. புரட்சிக்கவிஞரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி முடித்த நாம் அவரின் அறுபத்திரண்டாவது நினைவு நாளையும் கொண்டாடும் நிலையில் உள்ளோம்.

தமிழர்களாகிய நாம் தமிழறிஞர்களின் பிறந்த நாளையும் நினைவு நாளையும் கொண்டாடி மகிழ்ந்தால் மட்டும் போதாது. அவர்களின் கொள்கைகளையும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் உளமாற ஏற்று, நடைமுறையில் பகுத்தறிவுச் சிந்தனையோடும், பெண்களைப் போற்றும் மாமனிதர்களாகவும், நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றுடையவராகவும் விளங்க வேண்டும். அடிப்படையில் சிலைகளாக நின்றவர் வார்த்தைகளெல்லாம் மனதில் கல்லில் பதித்த சொல்லாக நிலைப்பெற்றால் தான் இச்சமூகம் மேன்மேலும் சீர்பெறும்.! வளம் பெறும்! இதுவே பாரதிதாசனைப் படிப்பதின் முழுமைப் பலனையும் தரும். இதுவே இக்கட்டுரையின் நோக்கத்தை நிறைவுச் செய்யும்.

**முடிவுரை:**

பாரதிதாசனின் படைப்புலகை ஒரு கட்டுரைக்குள் அடக்கி விட முடியாது. திராவிட இயக்கத்தின் அடிப்படையான ஒரு சில கருத்துகளை மட்டும் எடுத்துக் கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.திராவிட இயக்கம் இல்லையேல் பெண்ணினம் கல்வியறிவு பெற்றும் தன்மானத்தோடும் சுய மரியாதையோடும் வாழ்ந்திருப்பது கனவாகி போயிருக்கும். திராவிட இயக்கம் சமூக மறுமலர்ச்சிக்கு பெரும் பாங்காற்றியுள்ளது போற்றி வணங்கத்தக்கது.

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

-------------------------------------

**துணை நூற்பட்டியல் :**

1. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை. ஏழாம் பதிப்பு- 2010.
2. தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, அ.மா. சாமி, தமிழர் பதிப்பகம், 1987, சென்னை.

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# சிவவாக்கியர், வள்ளலார் சமயச் சிந்தனைகள் ஒப்பீட்டுப் பார்வை

(முனைவர் சு. சாந்தி)

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 56 - 60

**ஆய்வுச் சுருக்கம்**

மாதாவின் கருப்பையிலே தோன்றி பத்துமாதம் இருந்து பிறந்து வளர்ந்து ஆத்ம சாதனைகளின் மூலம் அறிவற்ற அமரநிலையை எழுதியவர்கள் சித்தர்கள். சித்தி கைவரப் பெற்றவர்கள் அனைவரும் சித்தர்கள் எனலாம். அதன் அடிப்படையில் யோகம் கைவரப்பெற்ற சிவவாக்கிய சித்தர் உருவ வழிபாடு, சாத்திரங்கள், சாதி பேதங்கள், சமய சடங்குகள் போன்றவற்றை கடுமையாக சாடியுள்ளார். இவற்றிற்கு இவருடைய பாடல்களை அகச் சான்றுகளாக அமைகின்றது. வள்ளலாரின் இறை தத்துவத்தின் ஆரம்பம் சைவ சித்தாந்தமே. மாணிக்கவாசகரின் கவிதைகளின் உருகி ஞானப்பாதையைச் சைவ சித்தாந்த தத்துவத்தில் அணுகி, ஆழ்ந்து பின்பு சன்மார்க்கம் என்னும் புதிய சித்தாந்த கொள்கையை உணர்ந்தார் வள்ளலார். இறைவனை காண விரும்புபவர்கள் அவனை வெளியில் தேடினால் பார்க்க முடியாது. அதை தனக்குள்ளே தேட வேண்டும், அப்படி தேடுகின்ற போது நமக்குள் இருக்கும் இறைவனை உணர முடியும், .அப்படி உணர்கின்ற பொழுது தான் நம்மை நாமே உணர்வதாக பொருள் என்று வள்ளலார் தம் பாடல்கள் மூலம் கூறியுள்ளார். எனவே இருவரின் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆய்வதுதான் இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

சிவவாக்கியர்- வள்ளலார்- சமயம்- இறைநிலை- மூட பழக்கவழக்கம்- சோதி வடிவானவன்.

**முன்னுரை**

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்து கைகூடியவர்கள் என்று பொருள். **"உடம்பை அழியாமல் காத்துக் கொள்ள முயன்றவர்கள் சித்தர்கள் என்றும் கூறப்படுகிறது"1**யோக சமாதி உகந்தவர் சித்தரே என்பது திருமூலர் கருத்து. சித்தர்கள் 18 என்பது பொதுமரபு. ஆனால் இன்று 50-க்கு மேற்பட்ட சித்தர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. சித்தர்கள் மனித வாழ்வை உயர்வாகக் கருதியவர்கள். உடம்பைப் பேணவும், மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும் கூர்மைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் வழிகாட்டியவர்கள். சாதி, சமய வேறுபாடற்றச் சமரச சன்மார்க்கத்தைப் போற்றயிவர்கள், போலிச் சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் கண்டித்தவர்கள், சித்தர்களின் பெருமையை உணர்ந்த பாரதியார்.

**"செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற**
**சித்தர் பிறந்த தமிழ்நாடு"2**

எனப் போற்றுகின்றார். சித்தர்கள் மக்களுக்குப் போதித்துள்ளப் போதனைகள் பல அவற்றுள் ஒன்று இறைவழிபாட்டு முறையாகும். சமயங்களும், கடவுளரும் வேறு வேறாக இருப்பினும் 'பரம்பொருள் ஒன்றே' என்ற கொள்கையைச் சித்தர் இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. சித்தர்களுள் ஒருவராகிய சிவவாக்கியரின் சமயம் குறித்தக் கருத்துக்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளுள் முதன்மையானவராகவும் சித்து தன்மை வாய்க்கப் பெற்றவராகவும் கருதப்படும் இராமலிங்க சுவாமிகளின் (வள்ளலார்) சமயக் கொள்கைகளும் ஒப்பீட்டுப் பார்வையில் இங்குத் தரப்படுகின்றன.

**சமயம்**

சமயம் என்பது மக்களின் குறைகளைப் போக்கி நிறை நலம் தரும் மாண்பினை உடையது என்பதால் வாழ்க்கையைப் பக்குவப்படுத்தி உய்தியளிக்கும் ஓரியக்கம் எனலாம். **உலகப் பொருட்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் சிற்றின்பம் நிலையற்றது என்றும் இறையருளைப் பெற்று அனுபவிக்கத்தக்க இன்பம் பேரின்பம் என்றும் அது நிலைத்து**

முனைவர் சு. சாந்தி **உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

**நிற்கும் இயல்பினது என்றும் கூறுவர். இப்பேரின்பத்தை அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்ததே சமயம் என்பர், இறைவனை அடைவதற்குரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது என்பது இதன் பொருளாகும்.'3** விவேகானந்தர்,

**சமயத்தை உத்தரவாதமற்ற விஞ்ஞான சாஸ்திரம் என்பார்4**

கடவுள் ஒருவரே என்று எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. அக்கடவுள் யார் என்பதில் சமயங்களுக்குள்ளே முரண்பாடுகள் உள்ளன.மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டச் சமயம், சாத்திரம், சம்பிரதாயம் என்ற பெயரில் மக்களை அலைகழித்தன. சமயப் சான்றோர்கள் 'கடவுள் ஒருவரே அவர் சமய சம்பிரதாயங்களுக்கு பூசல்களும் சமுதாயத்தில் பிரதிபலித்தன. சமயப் பிணக்கைக் கண்ணுற்ற அப்பாற்பட்டவர் என்ற கொள்கையை வற்புறுத்தி வந்தனர். சமுதாயச் சீர்திருத்தத்தைக் கருத்தில் கொண்டு சமயம் கடந்த ஓரிறைக் கொள்கையைச் சித்தர்களும் தங்கள் பாடல் வழியே போதித்தனர்.

**எங்கும் வியாபித்திருப்பவன்**

இறைவனுக்குச் சிலை வடித்து வழிபடும் வழக்கம் தொன்று தொட்டே நிலவி வருகிறது. எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுக்கு உருவம் வடித்து வழிபட தேவையில்லை என்பதே சித்தர் வாக்கு. உலகிலுள்ள எல்லாப் பொருட்களிலும் நிறைந்து நிற்பவன் இறைவன் என்பதை.

**"மண்ணும்நீ விண்ணும்நீ மறிகடல்க ளேழும்நீ**
**எண்ணும்நீ எழுத்தும்நீ யிசைந்தபண் ணெழுத்தும் நீ**
**கண்ணும்நீ மணியும்நீ கண்ணுளாடும் பாவைநீ"**
**(சிவ.பா:9)**

என்றும், **'பாரும்விண்ணு மெங்குமாய் பரந்த அப்பராபரம்' (சிவ.பா.15 வரி.2)** என்றும் சிவவாக்கியர் கூறுகிறார்.

**வள்ளலார், அண்டப் பகுதியிலும், பிண்டப்பகுதியிலும் நிறைந்து விளங்குபவன் அருட்பெருஞ்சோதியாகிய இறைவன்` (திரு.பா.4618)** என்றும்,

**"எவ்வுலகும் எவ்வுயிரும் எச்செயலும் தோன்றி**
**இயங்கும் இடமாகி எல்லாம் முயங்கும் இடமாகி"**
**(தி.பா: 3142)**

என வியாபித்திருப்பவன் இறைவன் என்கிறார்.

மேலும், சிவவாக்கியர் பாலுக்குள் நெய் கலந்து இருப்பது போல் இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்பதை **"பாலுள்நெய்க லந்தவாறு பாவிகா ளறிகிலீர்" (சிவ.பா.16,வரி:2)** என்கிறார். **'எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்குமாம்' (திரு.பா:43 )** என்பார் வள்ளலார். 'எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்திருந்த5 என்ற பட்டினத்தார் பாடல் இங்கு உன்னற்பாலது.

**கடவுள் ஒருவரே**

சைவம்,வைணவம், சமணம், பௌத்தம், இசுலாம், கிறித்தவம் எனப் பல சமயங்களும் தெய்வங்கள் பலவும் இருப்பினும் எல்லாம் ஒரு பரம்பொருளுக்குள் அடங்கும் என்கின்றனர். கடவுள் ஒருவரே என்பதை

**"எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ**
**அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ**
**அங்குமிகு மாகநின்ற வாதிமூர்த்தி யொன்றெனில்**
**வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே"**
**(சிவ.பா: 133)**

என்கிறார் சிவவாக்கியர், வள்ளலார்,

**"ஆறுகோடியாம் சமயங்கள் அகத்தினும் அவைமேல்**
**வீறு சேர்ந்தசித் தாந்தவே தாந்தநா**
**தாந்தம் தேறும் மற்றைய அந்தத்தும் சிவம்ஒன்றே அன்றி**
**வேறு கண்டிலேன் கண்டிரேல் பெரியர்கள் விளம்பீர்"**
**(திரு.பா:5552)**

என்பார்.

**சிவனே கடவுள்**

சிவன், பிரம்மா, விஷ்ணு முப்பொருளும் சிவனாகிய ஒரு பரம்பொருளுக்குள் அடங்கும் 'சிவனே கடவுள்' என்பதை சித்தர் பாடல்கள் வலியுறுத்துகின்றன. சிவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்பதை சிவவாக்கியர்,

**"_ _ _ _ _ _ விளங்குகின்ற மெய்ப்பொருள்**
**கண்டுகொண்ட மண்டலஞ் சிவாயமல்ல தில்லையே"**
**(சிவ.பா:305) என்றும்,**

**"_ _ _ _ _ _ தில்லை யம்பலத்து ளாடுவான்**
**என்பிரானலாது தெய்வமில்லை யில்லை யில்லையே"**
**(சிவ.பா:310)** என்றும் கூறியுள்ளார்.

ISSN :
DOI :

**எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்கு சிவம் ஒன்றே**
**(திரு.பா:4175)**

என்பார் வள்ளலார்.

**"யாதொரு தெய்வம் கொண்டீர்**
**அத்தெய்வ மாகி ஆங்கே**
**மாதொரு பாக னார்தாம் வருவர்ஞ்" 6**

எனும் சிவஞான சித்தியார் பாடல் குறிப்பிடத்தக்கது.

**சோதியே கடவுள்**

சிவன் ஒருவரே கடவுள் எனக் கூறும் சிவவாக்கியர் அவர் சோதி வடிவினர் என்கிறார். சோதியை (ஒளியை) கடவுளாக வழிபடும் வழக்கம் மிகத்தொன்மையானது. தமிழர்கள் சூரியனையும்,சந்திரனையும், அக்கினியையும் தெய்வமாக வணங்கி வந்துள்ளனர். மாணிக்கவாசகர் சிவனை,

**"சோதியாய்த் தோன்றும் உருவமே 7**

என்கிறார்

**"சொற்றுணை வேதியன் சோதியானவன்"8**

என்பார் திருநாவுக்கரசர். சிவவாக்கியர், நான்கு வேதங்களையும், ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓதிதிரிவதால் இறைவனைக் காணமுடியாது. ஐம்புலன் அடக்கத்துடன், சிந்தை ஒன்றாக உண்மையாக இருப்பவர் யாரோ அவரே சோதியாகிய இறைவனை அடையலாம் (சிவ.பா:38) என்றும்,

**"அணுவினோட கண்டமா யளவிடத சோதியாய்**
**குணமதாக வும்முளேகுறித்து நோக்கின் முத்தியாம்"**
**(சிவ.பா:497)**

என்று உள்ளத்துள்ளே இருக்கும் சோதியாகிய இறைவனைக் கண்டவர்கள் முத்தியடைவர் என்கிறார்.

**அருள்வெளியில் ஒளிவடிவாகக் காட்சி அளிப்பவன் (தி.பா:4170). சுந்தரவடிவச் சோதியாக விளங்குபவன் (திரு.பா:3759)** இறைவன் என்கிறார் வள்ளலார். மேலும் சிவனை ஒளிவடிவில் வள்ளலார் உருவகித்ததை,

**"சிவசிவ சிவசிவ ஜோதி -சிவ**
**சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி**
**சிவசிவ சிவசிவ ஜோதி"**
**(தி.பா:4552)**

எனத் திருவருட்பா கூறுகிறது.

**உள்ளமே இறைவன் உறைவிடம்**

ஒவ்வொருவர் உள்ளத்துள்ளும் இறைவன் உறைந்துள்ளான் என்பதே சித்தர்களின் ஆருடம் உள்ளத்துள் இருக்கும் சோதியாகிய இறைவனை உணராமல் கோவிலென்றும், குளங்களென்றும் ஊர்கள் தோறும் ஓடிதிரிந்து வீணே காலத்தைக் கழித்து மாண்டு போன மக்களே எண்ணிலடங்கா கோடிபேர் உள்ளனர் என்பதை உணர்ந்த சிவவாக்கியர் மக்களிடம்,

**"ஊருநாடு காடுமோடி யுழன்றுதேடு மூமைகாள்**
**நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே"**
**(சிவ.பா:15)**

என்றும்,

**"ஆலமுண்ட கண்டனா ரகத்துளே யிருக்கவே**
**(சிவ.பா:16)**
**உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடும்**
**அறிவிலாத மாந்தரோ டணுகுமாற தெங்ஙனே"**
**(சிவ.பா:76)**

என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

சோதியாகத் திகழும் இறைவனை உள்ளத்தால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்பதை,

**"உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்**
**அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி"**
**(திரு.பா:4615)**

என்கிறார் வள்ளலார்

**"உள்ளத்தில் உள்ளானடி அதைநீ**
**உணர வேண்டுமடிஞ்"9**

என்ற கவிமணியின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**சிறுதெய்வ வழிபாடு எதிர்ப்பு**

தமிழகத்தில் நிலவிய சாதி வேறுபாட்டின் காரணமாக மூடநம்பிக்கையின் பாறப்ட்ட சிறுதெய்வ வழிபாடுகள் மிகுந்து காணப்பட்டன. "ஒடுக்கப்பட்ட மக்கள் பூதம் பேய் காளி அம்மன் மாடர்ன் மயான சாமி முதலான கிராமத்தெய்வங்களை வடிவமைத்தும் செங்கல், மண், கல் இவற்றாலான உருவங்கள் அமைத்தும் வழிபட்டு வந்தனர்"10 தங்களுக்கு ஏதாவது நோய் வந்தால் தெய்வக் குற்றம் என்று தெய்வங்களைத் திருப்திபடுத்தும் பொருட்டு ஆடு, கோழி, பன்றி முதலிய உயிரினங்களைப் பலியிட்டு வழிபாடு செய்துவந்தனர். இம்மக்களின் சமய வாழ்க்கை அச்சத்தின் பாற்பட்டதாகவே

ISSN :
DOI :

அமைந்திருந்தது எனலாம். இத்தகைய மக்களிடம் நீங்கள் பலியிட்டு வழிபடும் தெய்வம் உங்களையே அழித்துவிடும் என்று சிவவாக்கியர் எச்சரித்ததை,

**"தங்கள்தேகம் நோய்பெறின் தனைப்பிடாரி கோயிலிற்**
**பொங்கல் வைத்தும் ஆடுகோழிப் பூசைப்பலியை இட்டிட**
**நங்கச்சொல்லு நலிமிகுந்து நாளுந்தோய்ந்து மூஞ்சூராய்**
**உங்கள்குலத் தெய்வமுங்க ளுருக்குலைப்ப துண்மையே"**
**(சிவ.பா:535)**

என்ற பாடல்வழி அறியலாம்.

**பேய்கள், பிடாரிகள் என்ற பெயரில் பூசை, படையல்கள் இட்டு வழிபடும் மக்களைப் 'பேயர்கள்' எனச் சாடுகிறார் சிவவாக்கியர் (சிவ.பா:254).**

சுடுகாட்டில் ஆடிப் பலி உண்ணும் போய்களைத் தெய்வநிலையில் வைத்து பலியிட்டு வழிபாடு செய்வதற்குச் சேமித்து வைத்திருக்கும் பணங்களை வீணாக்கும் மக்களைக் கண்டு ஆவேசத்துடன் வள்ளலார்.

**"_ _ _ _ _ _ _ _ பேயின்**
**விழவுக்கும் புலால் உண்ணும் விருந்துக்கும்**
**(திரு.பா:5331)**
**மருந்துக்கும் மெலிந்து மாண்டார்"**
**"பீழை புரிவான் வருந்துகின்ற பேய்க்கும் கருணை பெரிதளிப்பான்"**
**(திரு.பா:3325)**

எனக் கூறியுள்ளார்.

**வேதம்,ஆகமம்,சாத்திரம், மந்திரம் பொய்யானவை**

மக்கள் மூடநம்பிக்கையின் காரணமாக வேதம், ஆகமம்,சாத்திரம், மந்திரம் இவைகளின் மீது நம்பிக்கை கொண்டு அறியாமையில் உழன்று திரிவதைக் கண்டு சிவவாக்கியர், 'மந்திரங்களை மனதில் உருவேற்றி செப்புவதால் எந்தப் பயனும் இல்லை, மந்திரங்கள் என்பது பொய்யானது. நான்கு வேதங்களை ஓதுவதால் ஞானவழியைப் பெறமுடியாது, வேதங்களையும், சாத்திரங்களையும் ஓதி திருநீறுபூசி வழிபட்டாலும் சிவனை அறிய முடியாது என்கிறார்.

**"நூறுகோடி யாமங்கள் நூறுகோடி மந்திரம்**
**நூறுகோடி நாளிருந்து மோதினால தென்பயன்"**
**(சிவ.பா:142)**

என்பார். வேத, ஆகம, சாத்திரம் உண்மையை உரைக்கவில்லை, பெய்யானவை என்பதை மக்களுக்கு உணர்த்தும் விதமாக வள்ளலார்,

**"உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக் கண்டுணர்வாய்"**
**(திரு.பா:4177)**

எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.**சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் செய்ய வந்தன. நல்லவற்றைப் புகட்டுவது அல்ல (திரு.பா:5515), சாத்திரக்குப்பைகள் பயனுடையன அல்ல (திரு.பா:5805)** எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிவவாக்கியரும் வள்ளலாரும் தாம் கண்டு அனுபவித்த இறைஅனுபூதியை இவ்வுலக மக்களும் உய்த்துணர வேண்டும் என்ற நோக்குடன் சமயம் என்பதும் வேதம், மந்திரம், சாத்திரம், சம்பிரதாயம் என்பதும் மக்களால் சிருஷ்டிக்கப்பட்டது வீணானது. இவ்அண்டத்தையும் உயிர்களையும் இயக்ககூடிய பரம்பொருள் ஒன்றே அப்பரம்பொருளை நம் உள்ளத்துள்ளே உய்த்துணர்ந்து இறத்தல் பிறத்தலாகிய இருவினைகளையும் ஒழித்து முத்தியைப் பெறலாம் என்ற பிறவா பேரின்ப நிலையை இருவரும் நிலைநாட்டியுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1.அப்பாய் செட்டியார், மணரமிலாப் பெருவாழ்வு, ப.87
2.பாரதியார் கவிதைகள்
3.கே. ஆறுமுகநாவலர், இந்துமத இணைப்பு விளக்கம் பக்.13
4.சுவாமி விவேகானந்தர், ஞானதீபம், சுடர் – 7.ப.116
5.பட்டினத்தார்பாடல், பூரணமாலை, பா.89
6.ஸ்ரீ அருணந்தி தேவநாயனார், சிவஞானசித்தியார் சுபக்கம், பிரமாணவியல் இரண்டாம் சூத்திரம், செ.114
7.திருவாசகம், பா. 155
8.திருநாவுக்கரசர் தேவாரம், நமச்சிவாயத் திருப்பதிகம்,பா.1

ISSN :
DOI :

9.மு கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும், கோவில் வழிபாடு. பா.10

10.இரா. பொன்னு, வைகுண்ட சுவாமிகள் ஓர் அவதாரம், ப.46

Volume: 01, Issue -02
April to June 2026

ISSN :
DOI :

# சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பில் பெண் ஆளுமைகள்

**கோ. பூர்ணிமா, முனைவர் சு. சாந்தி**

**Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026**
**Date of Publication: 30-04-2026**
**Corresponding auther's Name :Dr.S.Priya**
**Email : spriya.sl@vistas.ac.in**
**Pages : 61 - 64**

**ஆய்வுச்சுருக்கம்**

அம்பையின் எழுத்துக்கள் மனித மனங்களில் மாற்றத்திற்கான தூண்டுதலாகவே இருப்பதை அவரது படைப்புகளான சிறுகதைகள் உணர்த்துகின்றன. சிறுகதை இலக்கியமானது இக்கால இலக்கிய வகைகளுள் தனக்கென தனி அடையாளத்தையும், தனித்துவத்தையும் உருவாக்கியுள்ளது. அம்பையின் சிறுகதைகள் கதையாக மட்டுமில்லாமல் படிப்போரின் வாழ்வியல் தடங்களை ஒருங்கிணைக்கும் நினைவுச் சின்னங்களாகவும் இருக்கின்றன. அம்பை, தனது படைப்புகள் மூலம் பெண்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் ஒரு பெண்ணிய ஆய்வாளர் ஆவார். அம்பை அவர்கள் தம் கதாபாத்திரங்களின் வழி மனித சமூகத்தில் பெண் குறித்த பொதுப்புத்தியின் திணிப்பை கட்டவிழ்க்க முற்பட்டுள்ள நிலையினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

**பெண்ணியம், தந்தை வழி அடக்குமுறை,தாய்,தமக்கை, மகள், மனைவி, காதலி.**

**முன்னுரை**

காலந்தோறும் பெண்மைக்கான இலக்கணங்கள் பெண் அல்லாதவர்களால் மட்டுமே பெரும்பான்மையும் தீர்மானிக்கப்பட்டதாக உள்ளது. அவை மக்கள் சமூகத்தின் பொதுப்புத்தியில் திணிக்கப்பட்டு காலம் காலமாக மக்கள் மனங்களில் கடத்தப்பட்டும் வருகின்றது. பெண்மை குறித்த உண்மை நிலையினை வெளிக்கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகள் மக்கள் மனதில் புதிய கண்ணோட்டத்தினை ஏற்படுத்தின. அவற்றுள் எழுத்துலகம் பெண்மைக்குப் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல. பெண்மை குறித்த தன்னுடைய அனுபவங்களையும், புற உலகோடு படைப்பாளி கொண்ட தொடர்பு, கற்பனை உலகில் உள்ள ஈடுபாடு ஆகியவற்றினைத் தன் படைப்பின் கதாப்பாத்திரங்கள் வழி படைப்பாளன் வெளிப்படுத்த முனைகிறான். அவ்வகையில் மேற்காண் அனைத்துத் தன்மைகளும் இடம்பெற்ற படைப்பிலக்கியமாக எழுத்தாளர் அம்பை அவர்களின் சிவப்பு நிறத்துடன் ஒரு பச்சைப் பறவை என்னும் சிறுகதைத் தொகுப்பினைக் காண முடிகின்றது. அம்பை அவர்கள் தம் கதாப்பாத்திரங்களின் வழி மனித சமூகத்தில் பெண் குறித்த பொதுப்புத்தியின் திணிப்பை கட்டவிழ்க்க முற்பட்டுள்ள நிலையினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**படைப்பாளியின் படைப்புலகம்**

சி.எஸ் லட்சுமி என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அம்பை அவர்கள் பெண்ணியக் களச்செயல் பாட்டாளர். நாற்பது வருடங்களுக்கும் மேலாகப் பெண் வரலாறு, பெண்களின் வாழ்க்கை குறித்த ஆய்வுலகில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வாழும் நூலாசிரியரின் பெண்மை குறித்த மன உறுதிப்பாடும், பெண்மை குறித்த சிந்தனைகளும் பாரம்பரியமும், பண்பாடும் பெண்களை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் எவ்வாறு ஒடுக்குகின்றன என்பன போன்ற சமூக ஆதிக்கம் மற்றும் கருத்தியல் ஆதிக்கம் பற்றி அவரது சிந்தனைகள் அவர்தம் **"சிவப்பு நிறத்துடன் ஒரு பச்சைப் பறவை" சிறுகதைத் தொகுப்பில் காம்மு, காமும்மா, கமலா, மைதிலி, சாந்தி முதலான பெண் கதாப்பாத்திரங்களாக உருப்பெற்றுள்ளன என்றால் மிகையல்ல. சன்னல் வழியாகப் புற உலகினைக் கண்டு தான் பெற்ற அனுபவங்களின் பகிர்வாகக் கதைகளைக் காட்சிப்படுத்துகின்றார் எழுத்தாளர் அம்பை.**

**தொண்டை புடைத்த காகம் ஒன்று**

**கோ. பூர்ணிமா**

முனைவர் சு. சாந்தி **உதவிப் பேராசிரியர்,**

**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை - 600 117.**

ISSN :
DOI :

"தொண்டை புடைத்த காகம் ஒன்று" என்ற முதல் கதை காகம் கரைதல் ஓசையோடு தொடங்குகிறது. நினைவலைகளை மீட்டெடுக்க அக்கரைதல் ஒலி போதுமானதாக உள்ளது. காக்கையைக் காணும் போதெல்லாம் கடந்து சென்ற காலத்தின் இழைகளை இழுத்து வந்ததாக, அதனோடு பயணிக்கின்றாள். ஒரு கட்டத்தில் நினைவுகள் கயிறாக முறுக்கிக் கொண்டு அவளை அடிப்பது போன்று இருப்பதாக எண்ணுகின்றாள். இறுதியில் காகம் இறக்கும் தருவாயில் திடீரென்று வீரிட்டு கரைத்தபடி பறந்து வந்தது ஒரு காக்கைக் கூட்டம் என்று கதை முடிகின்றது. ஆம்!.. நினைவுகளைத் தட்டி எழுப்புவது முடிவற்ற செயலாகின்றது.

சாம்பல் மேல் எழும் நகரம்:

பெண்மை மென்மையானவள் என்ற பொதுபுத்தியின் திணிப்பைக் கதாப்பாத்திரங்கள் வழி சூறையாடுவதைப் பல இடங்களில் நூலில் காண முடிகின்றது. நகரமயமாதல் கொடுமையினைக் கூறும் **"சாம்பல் மேல் எழும் நகரம்" கதையில் வீட்டு வேலை செய்யும் காம்மு கதாப்பாத்திரம் மன உறுதி படைத்தவளாக, புற உலக நிகழ்வுகளை, முதலாளித்துவ மாற்றத்திற்கு எதிர் குரல் எழுப்புபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.**

**பயணம் 21:**

பயணம் 21 சிறுகதையில் வரும் காமும்மா கதாப்பாத்திரம் பெண்மைக்கான இலக்கணங்களை வகுத்தவர் யார்? என்ற வினாவினை எழுப்புகின்றது. பெண்மை குறித்த விமர்சனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவள் காமும்மா. 85 வயதானவள், தன் இளவயதில் ஒரு நாட்டியத் தாரகை. வெளிநாடுகளுக்குச் சென்றவள். விருது பல பெற்றவள். மேடையில் ஆடக் கூடாது என்ற தனது உயர்மட்டக் குடும்பத்துக் கணவனைப் பிரிந்து, வயிற்றில் ஐந்து மாதக் குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறியவள். தனது விருப்பப்படி நடனத்தைத் தொடர்ந்தவள். மிருதங்கம் வாசிக்கும் தன்னைவிட ஐந்து வயது இளைய இராசப்ப திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்பவள். பொது புத்தியில் பதிந்த 2 கட்டமைப்புகளைக் கடந்தவள்.

மன உறுதியின் உச்சம் காமும்மா என்றால், தற்போது மகளிடம் ஓர் பயணத்திற்காக மனம் இளகி வேண்டுகிறாள். பத்து வருடங்களுக்கு முன்னர் அன்றைய அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதிக் கொடுத்த நூறு பக்க அளவிலான தன் வாழ்க்கைச் சரித்தரப் புத்தகம். ஒரு புத்தகம் கூட தன்னிடம் இல்லை. தற்போதைய நிர்வாக இயக்குனர் காமும்மா வாழ்வில் முரண்பாடு கொண்டவர். அதனால் அப்புத்தகம் அழிக்கப்பட வாய்ப்பு உள்ளது என நினைத்துத் தவிக்கிறாள். உலகம் அறிய வேண்டிய பல உண்மைகள் மறைக்கப்படுவதற்காகவே முடக்கப்படுகின்றன. அவைகளை விழுங்கிய மலைப்பாம்புகளாகக் கிடங்குகள் இருகின்றன. மகளின் துணையுடன் டெல்லி கிடங்கிற்குச் செல்கிறாள். அதற்குள் தூசி தட்டி **"கற்றாவின் மனம்" என்ற தலைப்பிலான தனது புத்தகத்தினைக் கண்டு எடுக்கிறாள். வதைபடும் மிருகம் ஒன்றின் ஈனக் குரல் போல ஓசையிட்டுக் கிடங்கின் துருப்பிடித்த கதவு இறுக்கப் பூட்டிக் கொண்டதாகக் கதை முடிகின்றது. தனது மன உறுதியால் அனைத்தையும் எதிர்த்து நின்றவள், தன் காதலன் மீது அளவுகடந்த காதல் கொண்டவள், தன் முதுமையிலும் தனது புத்தகத்தினை மீட்பதற்காக மேற்கொண்ட பயணமாகக் கதை அமைகின்றது.**

***வீழ்தல்***

வீழ்தல் கதையின் நாயகி கமலா காலப்போராட்டத்தில் கணவனுக்குப் பக்கபலமாய் இருந்து குறைவிலும் நிறை கொண்டு வாழ்பவள். சிம்லாவின் மலை சூழ்ந்த ஹோட்டலில் பன்னிரெண்டாம் மாடியின் பால்கனியில் நின்று கொண்டு அவள் வாழ்க்கைப் பயணத்தைத் திரும்பப் பார்க்கின்றாள். ஆண் என்றால் உறுதியானவன், மன வலிமை மிக்கவன் என்பது போன்ற பொதுபுத்தியின் திணிப்பை உதறித் தள்ளியவன் சத்யா. கமலாவின் கணவன் எழுபதுகளின் இடைப்பட்ட காலத்தில் இந்திரா காந்தி அவசர காலப் பிரகடனம் செய்த பின்னர் வந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை இடர்பாடுகளால் மனம் வருந்தி மடியில் படுத்து அழும் கணவனுக்கு ஆறுதல் கூறுகிறாள் கமலா. பம்பாயில் புதிய வாழ்க்கை தொடங்குகிறார்கள்.

ஐம்பது ஆண்டுகள் கடந்தாகிவிட்டது. உடம்பெல்லாம் இரப்பர் குழாய்களுடன் சத்யா, கமலா பயமா இருக்கு என்று அழுகிறான். அப்பொழுதும் அவனுக்கு வலிக்காமல் அவனை அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறுகிறாள். முழுவதும் சரியாகாது. 75 வயது காலாவதியாகும் வயது தான்... என்ற மருத்துவரின் வார்த்தைக்கு முரண்பட்ட கமலாவின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அவள் மகன் ஆதி. தொடர் சிகிச்சை முடிவுக்கு வர சத்யா இறக்கிறான். அவன் நினைவுகளோடு ஒரு மாதத்திற்குள் அனைத்துப் பொறுப்புகளையும் முடித்துவிட்டுத் தனக்கும் 72 வயதாகிறது. கலாவதி ஆகும் வயதுதான். **சத்யா தனியாக இருக்க பயப்படுவான். அவன் இருக்கும் இடம் செல்வதுதான் சரியென்று நின்று கொண்டிருந்த பால்கனியில் இருந்து வீழ்தல் அவளது வாழ்வின் இப்போதைய அதிமுக்கியமான சொல்லாக எண்ணி மேலிருந்து கீழே**

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**விழுந்தாள். எதிர்ப்பதில் மட்டுமல்ல... அன்புக் கணவன் பிரிதலிலும் மன உறுதியால் தன்னையே அழிக்கவும் தயங்காது பெண்மை என்பதாகக் கதாப்பாத்திரம் அமைந்துள்ளது.**

**சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை**

சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை கதையின் தலைவி மைதிலி. காதல் கணவனுக்காக எதையும் ஏற்றுக் கொள்பவள். பணி செய்யும் இடத்தில் கருத்து வேறுபாடு காரணமாகக் கணவன் வசந்தன் வேலையிழந்த பொழுது வாழ்வின் ஏற்ற இறக்கங்களைக் கணவன் கை பிடித்து ஏற்றுக் கொண்டவள். குழந்தைப்பேறு இல்லாததை எண்ணி வருந்தாதவள். கணவன் விருப்பதிற்காக சிகிச்சைகள் ஏற்றுக் கொண்டவள் மருத்துவமனையில் இருந்து வசந்த் ஒரு குழந்தையை எடுத்துவர அவன் விருப்பத்திற்காக ஏற்றுக் கொண்டு வளர்ப்பவள் வளர்ப்பு மகள் தேன்மொழிக்குக் காது கேட்பதில் குறைபாடு அறிந்து முறையான பயிற்சி தருகிறாள். சைகை மொழியை வசந்த் கடிந்து கொள்கிறான். தேன்மொழி சைகை மொழியில் பேசவே பெரிதும் விரும்புகிறாள். எட்வின் தன் வகுப்புத் தோழனுடன் சைகை மொழியில் பேச இயல்பாக எண்ணுகிறாள். கல்லூரிப் பருவத்திலும் எட்வின் வகுப்புத் தோழனாகத் தொடர்கிறான். காக்னியர் அறுவை சிகிச்சை குறித்துப் பேசிய வசந்த்க்கும் தேன்மொழிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் குறிப்பு எழுதிவிட்டு வீட்டை விட்டுச் செல்கிறான் வசந்த்.

**பெரும் தேடலுக்குப் பின்னர் மைதிலி வசந்தனைக் காண்கிறாள். நேரில் பார்த்தும் அன்புக் கணவனின் முடிவில் தலையிடாது அனைத்தில் இருந்தும் ஏன்? என் காதலில் இருந்தும் உனக்கு சுதந்திரம் தருகிறேன் என்று எண்ணி அவனைக் காணாமலே விடை பெறுகிறாள். வாழ்க்கைத் துணை விரும்பும் வாழ்வை அவருக்கு வழங்குவதே உண்மையான அன்பின் குறியீடாக்கியவள் மைதிலி.**

**வில் முறியாத சுயம்வரங்கள்**

வில் முறியாத சுயம்வரங்கள் கதையின் நாயகி சாந்தி. இன்னும் இரண்டு மாதங்களில் கல்லூரிப் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறப் போகிறாள். வெளிநாட்டில் இருந்து மகனும், மகளும், பேரக் குழந்தைகளும் ஸ்கைப்பில் அழைக்கும் நேரம் வந்துவிட்டது. பேச இருப்பதை எண்ணி மனம் மகிழ்கிறது. அனாதை ஆசிரமத்தில் வளர்ந்து பெரியவனாகிய பின்னரும் இறுதிவரை தன் தாய், தந்தையைக் காண வேண்டும் என்ற விருப்பத்தில் தோல்வி அடைந்து, மறதி தொற்றிக் கொள்ள இறுதி காலம் வரை தன் மனைவி சாந்தியுடன் மாறாத அன்புடன் இருந்தவன் அருண். கணவனின் மறைவிற்குப் பின்னர் தனிமையில், அப்பெண் ஸ்கைப்பில் குழந்தைகளுடன்.

அம்மாவின் தனிமையை மாற்ற சுயம்வர் என்ற திட்டத்தை அறிமுகம் செய்கின்றனர். சம வயது கொண்ட ஆண்கள் இருப்பார்கள். அவர்களோடு பழகி, பிடித்தால் திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கு முன்னர் சிக்கல் எதுவும் வராமல் இருக்க சொத்துக்களை மகன், மகள் பெயரில் மாற்றி எழுத வேண்டும். இது சரிபட்டு வரும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனக்குத் தெரிந்த நண்பன் இருக்கிறான். அவன் பெயர் நந்து. அவனோடு வாழ்ந்து தனிமையைத் தவிர்த்துக் கொள்வேன் என்ற சாந்தியின் பதில் அவளது குழந்தைகளுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. யாருடைய ஆலோசனையோ, அனுமதியோ? தேவையில்லை. அடுத்த வாரம் பேசலாம் என்று ஸ்கைப் தொடர்பைத் துண்டித்தாள். இதுவரை சிந்திக்காத ஒன்றைப் பற்றிப் பேசி, அது தன்னிச்சையாகத் தெளிவான உரு பெற்றதாக எண்ணினாள்.

வாயில் மணி அடிக்க, கதவைத் திறந்தால் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆண். தன்னைத் தெரிகிறதா? என்ற கேள்வியுடன், நந்து நந்தகோபால் என்றார். சாந்தி முதுகலை படித்த பொழுது இளங்கலை படித்த, கவிதை பாடும் பாரதி நந்துவா?... என்றாள். எதார்த்தமாகத் தன் மகனிடம் கூறிய பெயர் தன் முன் வந்து நிற்பதை எண்ணி வியந்தாள். படிக்கும் பொழுது தன் மீதான காதலைக் கூறிய பொழுது தன்னைவிட இளையவன் என்று தட்டிக் கொடுத்துவிட்டுக் கடந்து சென்றிருந்தாள். இவள் நினைவாகவே முப்பத்து நான்கு வருடங்கள் காத்திருந்து யாரையும் மணந்து கொள்ளாமல், அவளது கணவன் இறப்பினை அறிந்து அதிலிருந்து அவள் வெளியேறப் போதிய கால அவகாசம் கொடுத்து இப்பொழுது அவள் அன்பைப் பெறுவதற்காக வந்துள்ளான்.

அருண் உயில், சாந்தி மீதான அவனது அன்பையும், பொருளாதார சுதந்திரம் வழங்கியிருந்தது. அருணின் நினைவை விலக்காமல், நதி கடலில் கலக்கும் போது பிற நதிகளையும் ஏற்றுக் கொள்வது போல அருணின் அன்பை ஏற்ற மனதோடு நந்த கோபாலுடன் பயணிப்பதும், உரையாடுவதுமாகத் தன் பொழுதைக் கழித்தாள் சாந்தி.

**சொத்தினை எழுதி வாங்கிக் கொண்டு துணை தேடும் சுயம்வர் அமைப்பு அல்ல அவளுக்கான தேவை. எதார்த்த சூழலில் உறவுகளின் சிந்தனை அலைகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் தெளிந்த தன் கணவனின் நினைவுகளோடு, நண்பனின் நட்பில் வாழ்க்கையைத் தொடங்குவதாகக் கதை நிறைவடைகிறது.**

Volume: 01, Issue -02
April to June 2026
ISSN :
DOI :

**முடிவுரை:**

SPARROW –என்னும் பெண்கள் ஆவணக் காப்பகத்தை மும்பையில் 1988ல் நிறுவி அதில் செயல்பட்டு வரும் ஆசிரியர் அம்பை அவர்கள் தன் படைப்பில் பெண் கதாப்பாத்திரங்களை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளார். சாகித்ய விருது பெற்ற "சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை கதைத் தொகுப்பானது அனைத்து பெண்களும் படித்து உணர வேண்டிய கதாப்பாத்திரங்களின் ஆளுமைப் பண்புக் களமாகிறது. எல்லையற்ற நினைவலைகளுக்குள் மக்கள் மனம் உழல்வதையும், முதலாளித்துவத்திற்கு எதிரான சாதாரண பெண்ணின் மன எழுச்சியும், உறவுச் சிக்கலுக்குள் சிதையாமல் தம்மைக் காக்க முற்படும் சிந்தனைத் தெளிவும், வாழ்க்கைத் துணை விரும்பும் வாழ்வை அவருக்கு வழங்குவதே உண்மையான அன்பின் குறியீடாக்குவதும், அன்புக் கணவன் பிரிதலிலும் மன உறுதியால் தன்னையே அழித்துக் கொள்வதும், முதுமையிலும் தனது புத்தகத்தினை மீட்பதற்காக மேற்கொண்ட பயணத்தின் வழி மன உறுதியையும் என பெண்மையின் பல்வேறு மன நிலைகளை, பெண்களின் செயல்பாடுகளை, சமூகசூழல்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலைத் தன் கதாப்பாத்திரங்கள் வழி கூறியுள்ளார்.

-------------------------------------------

**துணை நூற்பட்டியல்**

1.அம்பை, சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, காலச்சுவடு, 2019.